ஸ்ரீ:

# திருவெட்டெழுத்தின் பொருள்

## விளக்க வினு-விடை

553
1-58

CONNEMARA PUBLIC LIBRARY
22 JUL 1958
MADRAS

ஆக்கியோன்

**R. நம்பெருமாள்**

ஆசிரியன் 'பக்தாம்ருதம்'

வைணவ நூல் வெளியீட்டுக் கழகம்

திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீ:

மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# திருமந்திரார்த்தம்

என்னும்

# திருவெட்டெழுத்தின் பொருள்

## விளக்க வினு - விடை

ஆக்கியோன்:

R. நம்பெருமாள்

ஆசிரியன், 'பக்தாம்ருதம்' திருச்சிராப்பள்ளி

வைணவ நூல் வெளியீட்டுக் கழகம்

511—512, பெரியகடைவீதி, திருச்சிராப்பள்ளி

ஜய, மார்கழி

பதிப்புரிமை] 1955 [விலை ரு 1-4-0

**Printed at The Asian Printers, Chepauk, Madras-5.**

ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமாநுஜாய நம :
ஸ்ரீமத்லோக குரவே நம :
ஸ்ரீமத் வரவரமுநயே நம :
அஸ்மத்குருப்யோ நம :

# விண்ணப்பம்

ஸ்ரீவிசிட்டாத்துவித மெய்ந் நெறியை உலகில் பரவச் செய்தருளிய தலைவரான நம்மாழ்வார், நாதமுனிகள், யமுனைத்துறைவர், ஸ்ரீராமாநுசர் தொடக்கமான பிரபந்நகுல குரு பரம்பரைத் திருவடி சம்பந்தம் பெற்ற பாக்கியவான்களே! அடியேனை ஆட்கொள்ளும் அருள் கொண்டாடும் அடியார்களே! தாசானுதாசன் சரமாவதிதாசன் சொருபாநு ருபமாக தண்டம் சமர்ப்பித்து விண்ணப்பித்துக் கொள்ளுவது.

1, பதரியாச்சிரமத்தில், திருமாமகள் கணவனை திருநாராயணன், நர நாராயணராக அவதரித்தருளிக் குரு சீடரின் நல்லொழுக்கங்களைச் செயலளவாக நடத்திக் காட்டியதுமன்றிச் சகலவேத வேதாந்த சாஸ்திர சாரமான திருவெட்டெழுத்தை நாராயண ரிஷியானதான் நரனை சீடருக்கு உலகமுய்ய உபதேசித்தருளினர்.

2, ஸ்ரீ விஷ்ணு லோகத்திலே, தன் முதல் தேவியாகிய பெரிய பிராட்டியாருக்கு, திருவெட்டெழுத்தின் பொருளையே செய்கையளவில் காட்டக் கூடிய ஒப்புயர்வில்லாத் திருத்துவய மந்திரத்தை வெளியிட்டருளி உலக மக்களை உய்விக்க உபதேசித்தருளினார்.

3. சருவ ஜீவதயாபரனை திரு நாராயணன் தனது ஸ்ரீ கிருஷ்ணவதாரத்திலே துவாபரயுகக் கடைப் பகுதியில் உண்டான பாரதப் போரில் திருத்தேர்தட்டிலே அருச்சனனை யொரு பொருளாக மதித்துச் சகல ஜீவ கோடிகளும் தன்னை வந்தடைய வேண்டுமெனத் திருவுளத்தில் சங்கற்பித்தருளிப் பகவத் கீதோப நிடதத்தின் கருத்தான சரம சுலோகத்தை உபதேசித்தருளினார்.

இவ்வாறாக,பகவான் சகல சேதனரும் உய்யும் வண்ணம் முறையே உபதேசித்தருளிய திருமந்திர, துவய சரமசுலோகம் என்னும் இம் மூன்றும் இரகசியத்திரயம் எனப்படும். திருமால் தொடங்கி நம் குருநாதரளவாக குருசிஷ்யக் கிரமமாக உபதேசிக்கப்படுகிற ரகசிய மந்திரங்கள் இம் மூன்றுமே. இந்த ரகசியத்திரய மந்திரங்களுக்கு நமது பூருவாசாரியர்கள் பல நூல்கள் வாயிலாக இவற்றின் ஆழ் பொருள்களை விரித்துரைக்கலாயினர். ஏனெனில், உலகினில் ஒருவன் இனி ஒரு தாயின் கருக்கூட்டில் அடைபடாமல் எல்லையற்ற பேரின்பத்துக்குள்ளாக நினைவுண்டானால், அதன் பொருட்டு அறியவேண்டுவன யாவும் இந்த மூன்று மகா மந்திரங்களுக்குள் அடங்கியிருக்கின்றனவாதலால், கற்றோரும் மற்றோரும்,பெண்களும் சகலரும் அறிந்து உய்ய வேண்டுமென்ற தன் இயற்கைப் பேரருளாலே சுவாமி பிள்ளை லோகாசாரியர் 'முமுக்ஷுப்படி' என்ற மகுடம் புனையப் பெற்ற ஒரு ஒப்புயர்வற்ற நூலை, தான் அருளிச் செய்த பதினெட்டு ரகசியங்களுள் முதன்மையாக வைத்தருளினார். இந்த 'முமுக்ஷுப்படி'யாகிய சாஸ்திரத்தை இயற்றிய ஸ்ரீ பிள்ளை லோகாசாரியர் காலத்தில் ஆடவரும் மகளிரும் வடமொழி தென்மொழிகளில் நன்கு பயிற்சி பெற்றவராகத் திகழ்ந்திருந்தனராதலால், அக்காலத்தில் பெண்களும் பேதையரும் உணர வல்லனவாக மணிப்பிரவாள நடை (வடமொழியும் தென்மொழியும் மாறிமாறிக் கலந்து வரும் கம்பீர நடை)யில் ரகசிய கிரந்தங்களை வெளியிட்டருளினார். நமது சம்பிரதாய நூல்களும் அவற்றின் விரிவுரைகளும் மணிப்பிரவாள நடையிலிருக்கக் காண்கிறோம்.

அதற்குக் காரணம், நம் பூருவாசாரியர்கள் யாவரும் உபயவேதாந்த நிபுணர்களாதலாலே, மற்ற மதத்தினர் போலத் தான் தோன்றித் தனமாகத் தங்கள் தங்கள் இஷ்டம் போல் உரை கூறும் வழக்கம் நமது விலக்ஷணசம்பிரதாயத்தைச் சார்ந்த பூருவாசாரிய பரம்பரையில் இல்லை. குரு சிஷ்ய முறையில் வந்த ஆசாரியர் வரையிலும், அவர் சம்பந்த சம்பந்திகளனைவரும் 'முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு' என்கிற மணவாள மாமுனிவரின் சாஸனப்படியே நடக்கும் ஏற்றத்தை நமது ஸ்ரீவைணவ சம்பிரதாயத்தில்தான் காணலாம்.

எம்பெருமானார் தரிசனமாகிய நமது ஸ்ரீவிசிட்டாத்துவித சத்சம்பிரதாயத்துக்கு உயிர் நாடிகள் போன்ற இந்த மூன்று இரகசியங்களுக்கும், இராமாநுசரின் இரண்டாவதவதார புருஷராயும், விஷ்ணு தலங்கள் நூற்றெட்டனுள் பரமபதத்தினும் விஞ்சிய மகிமைகளையுடைய முதல் திருப்பதி திருவரங்கம் பெரிய கோயிலுடையாரான் பெரிய பெருமாளுக்கு ஆசாரியருமான பெரிஜீயர் வியாக்கியானம் அருளிச் செய்திருக்கிறார்.

அந்த ஈடு மெடுப்புமில்லா ரகசிய மூல வாக்கியங்களையும் அவற்றின் வியாக்கியானங்களையும் பார்த்தால், பெரும் புதை பொருள் கிடைத்தன போலாம். கலிபுருட கோலாகல ஏகாதிபத்திய சாம்ராஜ்யாதிகாரத்தில் அகப்பட்டு, மதவாதிகள், மாயாவாதிகள், நாஸ்திகர்கள் முதலானோரான கொடிய கோர வியாதிகளின் வாய்ப்பட்டுத் தவிக்கும் எலி எலும்பரான இக்காலத்தவருக்கு நற் கல்வியறிவும், உய்யும் நினைவும் தோன்றுவதற்கே வாய்ப்புக் கிடையாது. ஆக, வைணவசமய நூல்களின் பெருமையையும், இக்காலத்தவரின் சமயப்பற்றின் சிறுமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஒரு மலைக்கும் மடுவுக்குமுள்ள ஏற்றத் தாழ்வுகளுண்டு. இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தருளியன்றோ கிருபை கரைபுரண்டு பெருவெள்ளமிட ஸ்வாமி எம்பெருமானாரான நமது பரமாசாரியன் திருமந்திரப் பொருளை பூரிதானம் செய்தாரென்று சரித்திரம் சொல்லுகிறது. அத்துடன் கருணை வெள்ளம் நிற்காமல் 'ஆசையுள்ளோர்க் கெல்லாம் கூறுமின்' என்று பேசி வரம் பறுத்தார் பின்' என்ற அழியாச் சாஸனத்தின்படி, இராமாநுஜருக்கு முன்பிருந்த பூருவாசாரியர்கள் ஏற்படுத்தி யிருந்த நியதிகளையும் போக்கி, சர்வாதிகாரமாக இந்த ரகசியார்த்தங்களைக் கேட்டுச் சகலாத்மாக்களும் உய்ய வேண்டுமென்று கட்டளையிட்டருளினார். அந்தக் காரணத்தினாலேயன்றோ திருவரங்கச் செல்வனார் இந்தச் சம்பிரதாயத்திற்கு 'எம்பெருமானார் தரிசனம்' என்று நாமமிட்டு நாட்டினார். இவ்வாறாக, தான் செய்த தவம் முழுவதையும் தம்மை யடைந்த அனைவர் பொருட்டு அர்ப்பணம் செய்து, தன்னைப் பற்றிய சுயநல உணர்ச்சியின்றி உய்வித்த உத்தமரான ஸ்ரீஉடையவரைவிட ஒரு ஆசாரியனை எக்காலத்திலேனும் எந்த உலகத்திலேனும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. பிராட்டியும் பெருமாளுமாக ஏகாந்தத்தில் சேர்த்தியாக எழுந்தருளியிருக்கிற நல்லதோர் சமயத்தில், தான் அவ்விருவருமான சேர்த்தியிலே சரணாகதம் செய்து தன் திருமுடி சம்பந்தத்தால் பூர்வாசாரியர்களுக்கும் தன் திருவடி சம்பந்தம் பெற்ற பின்புள்ளாருக்கும் பரமபதம் கொடுக்க வேண்டுமென்று எம்பெருமானிடத்தில் பிரார்த்தித்துப் பெற்று நம்மையுய்வித்தவர் நம் எதித் தலைவரன்றோ? புத்திர பௌத்திராதிகள் வாழவே பாடுபட்டுத் தேடிப் பணத்தை சம்பாதித்து வைக்கும் உலகத்தவர் போல, நாம் உய்ய நமக்காகப் பிரபத்தி செய்த ஸ்ரீராமாநுசன் திருவடிசம்பந்தமே அமையுமன்றோ. நமக்காக நாம் இனி ஒன்றும் சம்பாதிக்க வேண்டியதில்லை.

ஆக, சேதனுஜ்ஜீவன காமரான நம் பரமாசாரியரிட்ட கட்டளையையே சிரசாக வைத்து, இந்தச் சிக்கலான நாஸ்திகம் நடையாடும் காலத்தில் எவனுவது எம்பெருமானுடைய நிர்ஹேதுகஜாயமான கடாட்ச பலத்தால் உய்ய நினைவுண்டாம் பொழுது இழந்து போகாமல், கற்றுத் தெளிந்து பயனடையுமாறு எளிய தமிழ்நடையில் வினவிடைரூபமாகத் திருவெட்டெழுத்தின் பொருளை வெளியிட முயற்சிக்கலாமென்ற ஆசை ஒன்றே அதற்கு யோக்கியதையற்ற அடியேனை இந்தத் திருப்பணியில் புகச் செய்தது. அடியேனுடைய சிறுமையையோ அல்லது இந்த நூலிலுள்ள குற்றம் குறைகளால் பற்றி ஏற்படும் அபசாரங்களைக் குறித்தோ, வாத்ஸல்ய நிதிகளான இதைக் கண்ணுற்றுப் பயிலும் உங்கள் மங்களாசாஸன பலத்திஞல் பயப்படவேயில்லை. 'என் பாவினக் குற்றம் காணகில்லார் பக்தியேய்ந்த இயல்விதன்றே' என்கிறபடி தோஷ போக்யர்களான தாங்கள் அடியேனை யாட்கொள்வீர்களென்ற துணிவிஞல் எழுதலானேன்.

ஸ்ரீமணவாள மாமுனிகளின் விரிவுரைக் கிணங்கவே இந்த வினவிடை எழுதப்படுகிறது. சில உவமைகள், படிப்போர் மனதில் நன்கு புலப்பட வேண்டுமெனும் நோக்கத்துடன் வியாக்கியானத்திலில்லாதவை ஒன்றிரண்டு ஆங்காங்கு புகுத்தப்பட்டிருக்கும். அவ்வளவு மாத்திரமேயன்றி மூலவாக்கியங்களுக்கோ, வியாக்கியானத்திற்கோ முரண்படாத விதத்தில் பொருள் விரித்து வினவிடைகளாக அமைத்திருக்கிறேன்.

கூடுமான வரையில் மூலவாக்கியங்களில், வியாக்கியானத்தில் நூலாசிரியர், உரையாசிரியரால் கையாளப்பட்டிருக்கும் வடமொழிப் பதங்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை உபயோகப்படுத்த முயற்சித்திருக்கிறேன்.

இந்தத், திருமந்திரப் பொருளைப் பதிப்பித்து இதனுல் கிடைக்கும் திரவியத்தைக் கொண்டும், தரும சிந்தனை யுடையோரால் உதவப்படும் பொருளைக் கொண்டும் அடுத்த துவய சரம சுலோகார்த்தங்களை வினவிடைகளாக அமைத்து இரண்டாவது பாகமாக அச்சிட்டு வெளியிட உத்தேசித்துள்ளேன். சத்திய சங்கற்பனை சருவேச்வரன் திருவுளக் குறிப்பின் படியே நடப்பதாக.

இந்த நூலின் அநுபந்தமாக, திருமந்திரார்த்தத்தின் சாரம் தனியாக 1933-ஆம் ஆண்டில் திருச்சி நம்பிள்ளை சபையாரின் ஆதரவில் அடியேனுல் படிப்போருக்கு மிகச் சுலபமாய் மனதில் பதியும் வண்ணம் தெளிவாக அச்சிடப்பட்டதையும் இங்குச் சேர்த்துள்ளேன்.

இந்த உத்தம கைங்கரியத்துக்குப் பொருளுதவி செய்து உபகரித்த உத்தமர்களுக்கும், சிறந்த முறையில் விரைவாக அச்சிட்டு உதவிய சென்னை, ஆசிய அச்சகத்தார்க்கும் அடியேன் மனப்பூர்வமான நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும், அவர்கள் ஸ்ரீராமாநுசனுடைய திருவருள் மழை பொழியப் பெற்றவர்களாய் நீங்காத செல்வம் நிறைந்து உய்வார்களாக வென்று ஸ்ரீ காந்தனைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

அடியேன் நம்பெருமாள் ராமாநுச தாசன்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | விண்ணப்பம் ... ... | |
| 2. | நூல் தொடங்கும் முறை ... ... | 1 |
| 3. | திருவெட்டெழுத்தின் பொருள்விளக்க வினு விடை | 4–103 |
| | i. அகாரார்த்தம் ... ... | 34 |
| | ii. உகாரார்த்தம் ... ... | 52 |
| | iii. மகாரார்த்தம் ... ... | 58 |
| | iv. நமப்பதார்த்தம் ... ... | 68 |
| | v. நாராயணபதார்த்தம் ... | 82 |
| 4. | திருமந்திரார்த்த விளக்க அட்டவணை ... | 104–113 |

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# நூல் தொடங்கும் முறை

**வினா : திருவெட்டெழுத்தின் பொருளைக் கேட்டு அறியத் தொடங்கும் போது எவற்றை அனுஸந்திக்க வேண்டும்?**

**விடை :** *திருவெட்டெழுத்தின் பொருளைக் கேட்டறியத் தொடங்கும்போது முதலில் பொதுத் தனியன்களை அநுசந்திக்க வேண்டும். அவை : "ஸ்ரீசைலேச" முதல் 'ப்ரணதோஸ்மிநித்யம்' முடிய உள்ளவையாம். அடுத்து, திருவெட்டெழுத்தின் பொருள் சம்பந்தமான தனியன்களை அநுசந்திக்க வேண்டும். பின்னர் அவரவருடைய ஆசாரிய பரம்பரைத் தனியன்களைச் சொல்ல வேண்டும்.*

**வினா : திருவெட்டெழுத்தின் பொருள் சம்பந்தமான தனியன்கள் யாவை? அவை யாரால் அருளிச் செய்யப்பெற்றன? அவற்றின் கருத்துரையும் கூறுக.**

**விடை :**

1. **லோககுரும் குருபிஸ்ஸஹ பூர்வை : கூரகுலோத்தம தாஸமுதாரம்
ஸ்ரீநகபத்ய பிராமவரேஸௌ தீப்ரசயாந குருசபஜேஹம்**

*இது மணவாள மாமுனிகளால் அருளிச் செய்யப்பட்டது.*

*குருபரம்பரையைச் சேர்ந்த பூருவாசாரியர்களோடு சேர்த்துப் பிள்ளைலோகாசாரியரையும், வள்ளலாரான கூரகுலோத்தமதாசரையும், திருவாய்மொழிப்பிள்ளையையும், கோட்டூர் அழகிய மணவாளப் பெருமாள் பிள்ளையையும், திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரையும் வணங்குகிறேன்.*

2. **லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதாவே நம :**

*இது ஈயுண்ணி பத்மநாபரால் அருளிச்செய்யப்பட்டது.*

வடக்குத் திருவீதிப்பிள்ளையின் திருக்குமாரரும், சமுசார மாகிற பாம்பினால் பலமாகத் தீண்டப்பட்ட உயிர்களைப் பிழைக்கும்படி செய்யும் மருந்தானவருமான பிள்ளைலோகாசாரிய குருஸ்வாமிக்கு வணக்கம்.

**3. லோகாசார்ய க்ருபாபாத்ரம் கௌண்டிந்ய குலபூஷணம்**
**ஸமஸ்தாத்ம குணாவாஸம் வந்தே கூரகுலோத்தமம்**

இது திருவாய்மொழிப் பிள்ளை ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்டது.

பிள்ளைலோகாசாரியாருடைய அருளுக்குப் பாத்திரரும், கௌண்டிந்ய குலத்திற்கு ஆபரணம் போன்றவரும், சகல ஆத்தும குணங்களுக்கும் இருப்பிடமானவருமானகூரகுலோத்தமதாசரை வணங்குகின்றேன்.

**4. நமச்ஸ்ரீசைல நாதாய குந்தீநகர ஜந்மநே**
**ப்ரஸாத லப்தபரம ப்ராப்ய கைங்கர்ய சாலிநே**

(இந்த 4,5,6, தனியன்கள் மூன்றையும் மணவாளமா முனிகள் அருளிச் செய்தார்)

'குந்தீ' என்கிற ஊரில் அவதரித்தவரும், பிள்ளை உலகாரியருடைய திருவருளால் அடையப் பெற்ற பெரும் பயனை கைங்கரியத்தினால் திகழ்ந்தவருமான திருவாய்மொழிப் பிள்ளைக்கு வணக்கம்.

**5. லோகாசார்ய பதாம்போஜ ராஜஹம்ஸாயிதாந்தரம்**
**ஜ்ஞாநவைராக்ய ஜலதிம் வந்தே ஸௌம்யவரம்குரும்**

பிள்ளை உலகாரியருடைய தாமரையடிகளில் வசிக்கின்ற அரச அன்னத்தைப்போன்ற மனத்தையுடையவரும், ஞான பக்தி வைராக்கியங்களுக்குச் சமுத்திரம் போன்றவருமான கோட்டூர் அழகிய மணவாளப்பெருமாள் ஸ்வாமியை வணங்குகிறேன்.

**6. ஸ்ரீஜிஹ்வாவததீச தாஸம் அமலம் அசேஷசாஸ்த்ரவிதம்**
**ஸுந்தரவரகுரு கருணைகந்தளித ஜ்ஞானமந்திரம் கலயே.**

தூயமனமுடையவரும், சகல சாஸ்திரங்களின் ஞானமுடையவரும், கோட்டூர் அழகிய மணவாளப்பெருமாள் பிள்ளையினுடைய கிருபையால் வளர்ந்த ஞானமுடையவரு

*மான திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ண ரையரை வணங்குகிறேன்.*

**வினா: இந்நூலைச் சாற்றும்போது (முடிக்கும்போது) அனுசந்திக்க வேண்டிய பாடல் யாவை? அவற்றை அருளிச்செய்த வர் யார்?**

**விடை :**

**1\. கோதிலுல காசிரியன் கூரகுலோத் தமதாதர்**
**தீதில்திரு மலையாழ்வார் செழுங்குரவை மணவாளர்**
**ஓதரிய புகழ்த்திருநாவீ றுடையபிரான் தாதருடன்**
**போதமண வாளமுனி பொன்னடிகள் போற்றுவனே.**

**2\. வாழியுல காசிரியன் வாழியவன் மன்னுகுலம்**
**வாழி முடும்பையென்னு மாநகரம்—வாழி**
**மனஞ்சூழ்ந்த பேரின்ப மல்கிகு நல்லா**
**ரினஞ்சூழ்ந் திருக்கு மிருப்பு.**

**3\. ஓது முடும்பை யுலகா சிரியனரு**
**ளேது மறவாத வெம்பெருமான்—நீதி**
**வழுவாச் சிறுநல்லூர் மாமறையோன் பாதந்**
**தொழுவார்க்கு வாரா துயர்.**

*வானமாமலை சீயர் அருளிச் செய்தவை இவை.*

*(பிறகு **"நமச்ஸ்ரீசைல"** என்று தொடங்கித் தத்தம் ஆசாரிய தனியன்களை முன்போல அனுசந்தித்துப் பூர்த்தி செய்க)*

**பிள்ளை லோகாசாரியர் திருவடிகளே சரணம்.**

**ஜீயர் திருவடிகளே சரணம்**

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமநுஜாய நம:

ஸ்ரீஸுதலோக தேசிகாய நம:

ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# திருவெட்டெழுத்தின் பொருள் விளக்க வினு விடை

## முதல் பகுதி

## முமுக்ஷுப்படி—திருமந்திரார்த்தம்

**1.** *மூலவாக்கியம்:—முமுக்ஷுவுக்கு அறிய வேண்டும் ரகஸ்யம் மூன்று.*

**வினு: முமுட்சுவென்பான் யார்? அவன் என்ன சாதியினன்? என்ன தவமுடையோன்? பொதுவாக முமுட்சு என்றதன் கருத்தென்ன?**

**விடை:** *முமுட்சு வென்ருல் மோட்சத்தில் இச்சையுடையவன் என்பதாம். மோட்சத்தில் இச்சையுடையவன் எப்படிப் பட்டவனுயினும் அவன் முமுட்சுவேயாம். மோட்சமடைய சகலருக்கும் உரிமையுண்டாதலால், வருணுச்சிரமங்களைக் குறிக்காமல் பொதுவாக முமுட்சு என்றருள்கிருர், ஸ்வாமி பிள்ளை உலகாசிரியர். இதனுல், ரகசியத்திரய ஞானம் சர்வாதிகாரமென்பதே கருத்தாகும்.*

**வினு: மோட்சமென்ருல் என்ன?**

**விடை:** *மோட்சம் என்கிற வடமொழிப் பதம் அவ்விலக்கண விதிப்படி "முச்ல்" என்ற ஒலியிலிருந்து தோன்றியதாகிறது. அது 'விடுதல்' என்ற பொருளையுடையது. ஆகவே விடுதலையடைதல் என்பது பொருளாகும்.*

**வினு: யார் எதிரிலிருந்து விடுதலை யடைவது?**

**விடை:** இந்த ஆத்துமா, தனது தொல்வினைப் பயனாலே கிடைக்கப் பெற்ற இவ்வுடலாகிய சிறையிலிருந்து விடுதலை யடைய இச்சைப்படுகிறான். இச்சையுடைய இவனை முமுட்சு வென்று சொல்லப்படுகிறது. இதனால், விடுதலையடைய ஒரு வனுக்கு முதலில் இச்சை அவசியம் உண்டாக வேண்டு மென்பதை யுணர்க.

**வினு: பேராநந்தத்தை அடைவதில் இச்சையுடையவனாக வேண்டு மென்னுது, இந்தக் கருமரூப சரீரத்திலிருந்து விடுதலையடைவதில் இச்சையுடையவனாதல் வேண்டு மென்பதேன்?**

**விடை:** அந்தமில் பேரின்பத்தை அடையவொட்டாமல் தடுக்கிற விரோதி ரூபமான பிரகிருதியின் ஒட்டுறவு ஒழிவது முன்பு நிகழவேண்டும். பின்பே ஆநந்தம் அடைவது. இது பின் நிகழ்ச்சி. ஆதலின், முதலில் விரோதி கழிவதில் ஒருவனுக்கு இச்சை பிறக்க வேண்டுமெனப்பட்டது.

**வினு: இதுதான் சரியான முறையோ? எப்படி?**

**விடை:** 'பிணம் கிடக்க மணம் செய்வாருண்டோ?' இல்லையன்றோ? பிணத்தை வீட்டைவிட்டு அப்புறப்படுத்திச் சுத்தம் செய்வது முன்பு. அவ்வீட்டில் சுபகாரியம் நடத்துவது பின்பு. அதுபோலவும், ராஜ்ய பரிபாலனம் செய்ய உரிமையுடைய ஒரு ராஜகுமாரன் தன் குற்றத்தால் சிறைப்பட்டிருப்பானேயானால், அவனுக்கு முடி புனைவிக்கும் காலம் ஏற்பட்டபோது முன்பு சிறையிலிருந்து விடுதலை பெறவேண்டும். பின்பன்றோ பட்டாபிஷேகம் அடையவேண்டும். அதுபோலவும், இந்த ஊழ்வினைப் பயனால் வந்த உடலின் சம்பந்தம் விட்டாலொழியப் பேரின்பத்தை யனுபவிக்க இயலாது. ஆதலால், பாபரூபமான பூதவுடலின் உறவற ஒருவனுக்கு இச்சை உண்டாக வேண்டும் என்க.

**வினு : பிள்ளை லோகாசாரியர் முமுட்சு என்ற சொல்லால் இங்குக் குறிக்கப்படுகிறவன், சம்சார விமோசனத்தில் இச்சை பிறந்தவன் என்பதுதான் தீர்மானமோ ?**

**விடை :** இங்குச் சொல்லப்படுகிறவன் அத்தகைய முமுட்சுவல்ல.

**வினு : மற்றெவன் ?**

**விடை :** முமுட்சுக்களில் இருவகையினருண்டு. அவர் : 1. ஆத்மானுபவி, 2. பகவதனுபவி எனப்படுமவர்.

அவ்விருவரில் ஆத்மானுபவி என்பவன், சரீர சம்பந்தத்தால் எற்படும் துன்பங்களைச் சகிக்கமாட்டாமல் வேதாந்த விசாரணை செய்து சரீரத்துக்கு மேற்பட்ட ஆத்துமவஸ்துவின் சுக சொரூபத்தை யுணர்ந்து, அதையடைய அட்டாங்க யோகரூபமான ஞானநிஷ்டையில் நிலைத்து, சரீரம் விட்டபின் அவ்வாத்மானுபவமாகிய கைவல்ய பதவியை அடையப்பெற்று 'சித்'தின் ஆனந்தத்தில் மூழ்கியிருப்பவன். இவன் ('ஓம் இத்யேகாக்ஷரம் ப்ரஹ்ம') என்கிறபடி 'ஓம்'என்ற பிரணவத்துடன் நிற்கிறவன். 'தானாகிய ஆத்தும் சொரூப ஞானமுண்டானால் போதுமென்பவன். இவனுக்கு உபாய (நெறி) புருஷார்த்தத்தில் (பயனில்) ஞானம் அவசியமில்லை. ஒரு பதார்த்தமும் அகப்படாத காட்டிலோ பாலைவனத்திலோ அகப்பட்ட ஒருவன் பசிதாகம் மேலீட்டால் தன் தசையையே தின்று, தன் இரத்தத்தையேகுடித்து,உயிர்தரிக்கும் பொருட்டுப் பசி தாகங்களைத்தீர்த்துக்கொள்வது போல, இந்தக் கைவல்யா பேட்சையுடைய முமுட்சுவானவன், மூவகைப்பட்ட துக்கங்களில் நின்றும் தப்பித்தால் போதுமென்று முழுநல முதல்வனுடைய அநந்த நித்திய கல்யாண குணங்களின் அனுபவத்தை யறியாது, அணுமாத்திரமாய்ச் சிற்றறிவும் அற்ப ஆற்றலும் பெற்ற தன்னிடமே சுகமிருப்பதாகப் பிரமித்து, கைம்பெண்கள் தங்கள் போகக்குறிகளைக் கசக்கித் தங்களிடத்திலும் சுகமிருப்பதாகக் கருதியிருப்பது போல இருப்பவன். இவனுக்கும் மறுபிறவி கிடையாது. இப்படிப்பட்டவர் சரீர சம்பந்தமுமற்று, பரப்பிரம்மாநந்தமும் அடையப் பெறுது, அசரீரிகளாய், பிரகிருதிமண்டலத்திற்கும், அப்பிராகிருதமான பரமபதத்திற்கும் இடையில் இருப்பவர்களாய்த் திரிவார்கள். சம்சாரத்திலிருந்தாலும் ஒரு காலத்தில் பகவானுடைய பரமாநந்த கிருபையைப் பெற்றுய்யலாம். அந்த முழுநல வாழ்வையே இழந்தவர்களான பாக்கிய ஈனர்களை, பிள்ளைலோகாசாரியர் இங்கு முமுட்சுவென்று சொல்லவில்லை;

பகவதனுபவி என்பவன் தன்னையும், தலைவனையும், தலைவனை யடையும் நெறியையும், தலைவனையடையவொட்டாமல் தடுக்கிற பகையையும்;தலைவனால் உண்டாம் பயனையும் உணர்ந்து—அதாவது சொரூப, உபாய, புருஷார்த்தங்களை அறிந்து அங்வயித்த பகவதனுபவ ரூபமான நற்பயனையடைய விரும்பும் முமுட்சு ஆவான். இவன் பகவதனுபவத்தின் பொருட்டுச் சமுசாரபந்தம் ஒழிய வேண்டும்; ஒழிந்தபின் பகவானுடன் சேர்ந்து நித்திய வாழ்வும் பெற வேண்டுமென்ற இச்சையுடைய இவனைத்தான் ஆசிரியர் இவ்விடத்தில் முமுட்சு என்ற சப்தத்தால் குறிக்கின்றார்.

**வினு: பகவதனுபவியாகிய முமுட்சு அறியவேண்டுவனவற்றை எப்படி அறிவது? புத்தகங்களை வாங்கிப் படித்து அவற்றை அறியமுடியுமா?**

**விடை:** *இந்த முமுட்சுவாகிய சேதனன் ஞானம், அனுட்டானம் இவ்விரண்டும் நன்ருகவேயுடையனுன ஒருஆசிரியர்பால் உபதேசமாக அறியவேண்டும். தான்தோன்றித்தனமாய்ப் புத்தகங்களை வாங்கிப் படித்தோ அல்லது வேறெந்தவகையாகவோ அறிதல்கூடாது.*

**வினு: பகவதனுபவி அறிந்துகொள்ள வேண்டிய ரகசியங்கள் யாவை? எத்தனை?**

**விடை:** *பகவதனுபவி அறிந்துகொள்ள வேண்டிய ரகசியங்கள் மூன்று. அவை:*

1 **திருமந்திரம்:—"ஓம் நமோ நாராயணுய"**

2. **திருத்துவயம்:—**

**"ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே,**
**ஸ்ரீமதே நாராயணுய நம:**

3. **சரமசுலோகம்:—**

**"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ.**
**அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:**

*இம் மூன்றுமேதான்.*

**வினு: இரகசியங்கள் மூன்றும் எவற்றை வெளியிடுகின்றன?**

**விடை:** *பிரகிருதிசம்பந்தமாகிய ச மு சா ர க் கடலைத் தாண்டவும், பகவதனுபவத்தை அடையவும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய சொரூப, உபாய, புருஷார்த்தங்களைத் தெளிவாக வெளியிடுகின்றன. இவற்றைவிட இனி வேறென்றையும் அறிய வேண்டியதில்லை.*

*திருமந்திரம் சொரூபத்தையும்,* **துவயம்** *உபாயத்தையும், சரமசுலோகம் புருஷார்த்தத்தையும் வெளியிடுகின்றன.*

**வினு: சொருபம் என்ருல் என்ன?**

**விடை:** *ஜீவ, பரர்களின் சொரூப சுபாவங்களைத் தெளிவாக உணரும் ஞானம் சொரூபமாகும். இதைத் திருமந்திரம் போதிக்கிறது.*

**வினா : உபாயம் என்றால் என்ன ?**

**விடை ;** *ஜீவன் பரனையடையும் நெறியையும், பரனை இவன் அடைய வொட்டாமல் செய்கிற ஊழ்வினைப் பயனால் வந்த சரீரத்தின் ஒட்டுறவினால் ஏற்பட்ட அவித்யாதிகளின் பரம்பரையான காமக்குரோதிகளால் உண்டான பாவ சமூகங்களாகிய விரோதிகளைப் போக்கி, தன்னை இவன் அனுபவிக்கச் செய்கிற சர்வேசுவரனே உபாயமாவான். ஆதலால், இந்தச் சேதனன் உய்வதற்கு ஈசுவரனே உபாயனாகிறான் என்ற உபாய சொரூபத்தைத் துவய மந்திரம் உணர்த்துகிறது.*

**வினா : புருஷார்த்தமென்றால் என்ன ?**

**விடை :** *புருஷார்த்தமென்பது பயன். அதாவது, இந்த அதிகாரியானவன் தனது சொரூப உபாயங்களுக்குத் தக்கபடி விட வேண்டியவற்றை நன்றாக விட்டு, அவனை ரட்சகனாகப் பற்றுகிறான். பற்றும்போது பரமாத்மாவின் திருவருளால் இவனது பாபசமூகங்கள் யாவும் இருந்த இடமும் அடையாளம் இல்லாதபடி நிர்மூலமாக்கப்படுகின்றன. இவ்வளவு காலம் பரனையடைய வொட்டாமல் தடுத்த பாபவிமோசனமும் அவனுடைய அபயப் பிரதானமும் இவனுக்குப் பலிக்கிறது. இதுவே புருஷார்த்தமாகும். சரம சுலோகத்தால் இப் பலன் சொல்லப்படுகிறது. ஆக, இவ்வாறு சொரூப உபாய புருஷார்த்தங்களை இம் மூன்று ரகசியங்களும் வெளியிடுகின்றன.*

**வினா : இவற்றை ரகசியம் என்பதேன் ?**

**விடை:** *இவை சகல வேதசாஸ்திர சாரார்த்தங்களைத் தம்முள் கொண்டிருப்பதாலும், வேதங்களுக்குள் பொதிந்துள்ளனவாதலாலும் இரகசியம் எனப்பட்டன.*

**வினா: இவை சகல வேதசாரமென்பது எவ்வாறு ?**

**விடை:** *சகல வேதசாஸ்திரங்களும் ஐம்பெரும் பொருள்களைத்தான் வெளியிடுகின்றன. அவையாவன :—"மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர் நிலையும், தக்கநெறியும் தடையாகித்—தொக்கியலும், ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதுங்குருகையர்கோன், யாழினிசை வேதத் தியல்" என்கிறபடியே தன்னை, தலைவனை, நெறியை, பகையை, பயனை இந்த மூன்று இரகசியங்களும் மிகத் தெளிவாக உணர்த்துகின்றனவாதலால், இவை சகல வேதசாரமாகும்.*

**வினு: 'முமுக்ஷுக்கு' என்று ஒருமையில் சொல்லப்பட்டதன் கருத்தென்ன ?**

**விடை:** *உடலேயே நான் என்று பிரமிக்கும் தேகாபிமானி களான சமுசாரிகளின் கோலாகலத்திற்கு இருப்பிடமான இப் புவியில் அதிகாரிகளின் அருமையைக் கண்டு 'ஸர்வம் வாஸு தேவ மயம்' என்றுணர் மெய்ஞ்ஞானி ஒருவர் அகப்படுவதும் அரிதாயிருப்பதை 'ஓரொருவருண்டாகில்' என்று அறிந்து ஒருமையில் பேசினுர் என்க.*

**வினு: ஆக இந்த முதல் மூலவாக்கியத்தால் தெரிந்தவை யாவை ?**

**விடை:** *அதிகாரி இன்னுரென்பதும், அவ்வதிகாரிக்கு அவசியம் அறியப்படவேண்டிய அர்த்த விசேஷங்கள் இன்னவை யென்பதும் தெரியலாயிற்று. அதிகாரி: பகவதனுபவியாம் முமுட்சு. அறியவேண்டியவை: ரகசியத் திரயம்.*

## சூ-ம். 2. அதில் பிரதம ரகஸ்யம் திருமந்திரம்

**வினு: 'அதில்' என்ருல் எதில் ?**

**விடை:** *இந்த முமுட்சுவாகிய அதிகாரி அறிந்துகொள்ள வேண்டியிருக்கிற ரகசியங்கள் மூன்றினில் என்பதாம்.*

**வினு: முதலில் அறிந்து கொள்ளத் தக்கதெது ?**

**விடை:** *தத்துவ, இத, புருஷார்த்தங்களென்ருலும் சொரூப, உபாய, புருஷார்த்தங்களென்ருலும் ஒன்றேயாம். அப்படிப்பட்ட இம்மூன்றையும் முறையே வெளியிடுகிற திருமந்திர, துவய, சரமசுலோகங்களில் இந்த முமுட்சுவான வனுக்கு, சொரூப ஞான விஷயமாய், விட்டுப்பற்ற வேண்டிய செய்கைகளைப் பற்றிய விவேகத்தைப் பரிபூரணமாகப் பிறப் பிப்பதான திருமந்திரத்தின் ஞானம் முதலில் அறிந்து கொள்ளத் தக்கதாகும்.*

**வினு: சொரூப ஞானத்தை அறிவிக்கும் மாத்திரத்தால் முதல் ரகசியமாகுமோ ?**

**விடை:** *சொரூபத்தைப்பற்றி நன்ருக அறிந்த பின்பே யன்றே மற்ற உபாய புருஷார்த்தங்களில் ருசியுண்டாகும். ஆதலின் ஜீவ பர சொரூபங்களைப்பற்றிய ஞானமார்க்கத்தை வெளியிடு கிற திருமந்திரமே முதல் முதலாக அறியப்படவேண்டிய ரகசியமாம்.*

ஒருவன் தன்னுடைய யோக்கியதையைத் தெரிந்து கொள்ளாமல் உபாயனை ஈசுவரனைப்பற்றியேனும், அவன் திருவடிகளில் பண்ணும் குற்றேவல்களான பயனையேனும் இவன் உணர்ந்துகொள்ள முடியாதாதலால், முதன் முதலில் தன்னைப் பற்றிய உண்மையுணர்ச்சி பெறவேண்டும்.

எவ்வாறெனில், உலகில், வயிற்றுப் பிழைப்புக்குப் பணம் சம்பாதிக்கிறவன் முதலில் தன்னுடைய யோக்கியதையைத் தெரிந்து, வேலைகொள்ளும் எஜமானனுடைய யோக்கியாம்சத்தையும் உணர்ந்து, பின்பு தனது எஜமானனைச் சந்தோஷப் படுத்தும் வழியையும் நன்குணர்ந்து எஜமானனுக்குப் பிடிக்காத காரியங்கள் இன்னின்னவை யென்றறிந்து முடிவில் அவனால் இவன் பெறுகிற லாபம் (சம்பளம்) இன்னதென்றும் தெரிந்துகொள்ளுகிறான்.

அதுபோலவே, ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடும் ஒருவன் முதலில் தன்னுடைய நிலைமையைத் தெரிந்து கொள்ள வேண்டியதும், அதன் பிறகு படிப் படியாக மற்றவற்றையும் அறியவேண்டியதும் அவசியமாகும். எனவே, ஆன்மீய வாழ்க்கையில் ஒருவன் ஆத்துமாவாகிய தன்னைப் பற்றிய உணர்வை முதலில் பெறவேண்டும். இதைக் கற்றுத் தேர்ந்தவனே மற்ற உபாய, உபேய(பயன்)ங்களை யறிய அருகனாகிறான். இக் காரணத்தைப்பற்றியே திருமந்திரம் முதல் இரகசியமாயிற்று.

**வினா : வேறு பெரிய காரணம் ஏதேனுமுண்டோ ?**

**விடை :** வேறு காரணமும் உண்டு.

**வினா : அஃதென்ன ?**

**விடை :** விவரணக்கிரமத்தை ஆராய்ந்து பார்த்தாலும் திருமந்ரம் முதன்மை பெறுகிறதைக் காணலாம்.

**வினா : அஃதெங்ஙனம் ?**

**விடை :** விவரணம் என்றால், விரிவு என்று பொருள்படும். ஒன்றின் பொருள் மற்றொன்றில் விரிவுடன் அமைந்திருக்குமேயானால், சுருங்கிய பொருளையுடைய சொல்லிற்கு அது விவரணமென்று சொல்லப்படும். இங்கு, இந்த மூன்று ரகசியங்களும் ஒன்றற்கொன்று விவரண விவரணிகளாக யிருக்கக் காணலாம்.

அஃதெங்ஙனே யென்னில் :—

மந்திரம் என்றால் 'ஓம்' என்கிற பிரணவமே தான். அதில் சொல்லப்படும் சுருக்கமான அர்த்தத்தை, திருமந்திர

மாகிய திருவெட்டெழுத்துக்களில், முதலெழுத்தான பிரணவப் பொருளை, மற்ற ஏழு எழுத்துக்களான 'நம நாராயணுய' என்னும் இரண்டு சொற்கள் விவரிக்கிறபடியால், 'ஓம்' என்கிற பிரணவத்திற்கு 'நம நாராயணுய' என்ற பிற்பகுதி விவரணமாகிறது. இந்த 'நம நாராயணுய'வுக்குத் துவய மந்திரம் விவரணமாகிறது. துவயத்துக்கு சரம சுலோகம் விவரணமாகிறது. ஆக, சுருக்கம், பெருக்கம் (விவரண விவரணி) என்ற முறையை அனுசரித்தாலும் திருமந்திரம் முதன்மை பெற்ற ரகசியமாகிறது.

**வினு : மந்திரம் என்ருல் என்ன ?**

**விடை :** இது வடசொல் : இதன் பொருள் யாதெனில், 'மந்தாரம் த்ராயத இதி மந்த்ர :' அதாவது, வாயினுல் பாடி மனத்திஞல் சிந்திக்கிறவர்களைத் துன்பக் கடலிலிருந்து கரை யேற்றுவிப்பது. சப்த சக்தியாலும், அறியாமையை அகற்றக் கூடிய பொருளுடைமையாலும் பாராயணம் செய்வோருக்குப் பாதுகாப்பாவது மந்திரமாகும்.

**வினு : சப்தத்துக்குச் சத்தியாவது யாது ?**

**விடை :** பலனளிக்கும் சாமர்த்தியம் தான்.

**வினு : ஒலியின் பலத்தால் யாரைக் காப்பாற்றுகிறது ?**

**விடை :** தனது நீந்தும் சக்தியால் கடலைக் கடக்கிறவனைப் போல, சுதந்திர முயற்சிகளால் மோட்சமடைய நினைக்கும் பகவதுபாசகருக்குத் திருமந்திரமானது தன் ஒலியின் பலத்திஞல் பாதுகாக்கிறது.

**வினு : அர்த்தங்களை அறிவிப்பதனுலே யாரைப்பாதுகாக்கிறது?**

**விடை :** நம்முடைய சுதந்திர முயற்சியால் கடலில் நீந்திக் கரை யேறுவோம் எண்ணத்தைவிட்டு, அபாயமில்லாத ஓடத்தி லேறிப் பயமற்று, சேமமாக அக்கரைசென்று சேருமவரைப் போன்ற பிரபன்னரை (அடைக்கலம் புகுந்தவரை)த் தன் பொருளின் பெருமையால் ரட்சிக்கிறது.

**வினு ; இவ்வளவு மகிமையுடைய திருமந்திரத்தை உச்சரிக் கும் முறையில் கட்டுப்பாடுண்டோ ?**

**விடை :** உண்டு.

## மூ-ம். 3. திரு மந்திரத்தினுடைய சீர்மைக் குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணி அநுசந் திக்க வேணும்.

**வினு : திருமந்திரத்தின் சீர்மை என்ன ?**

**விடை :** ருக், யஜுர், சாம அதர்வணங்களான வேதங்களும் மற்றும் உண்டான ஒலிவடிவமான யாவும் இந்த திருவெட்டெழுத்துக்குள்ளே அடங்கியிருக்கின்றன. உலக வழக்கிலுள்ள சகல சப்தங்களுக்கும் வேதம் காரணமாய், அந்த வேதத்துக்குப் பிரணவமான பீஜாட்சர ஒற்றையெழுத்து காரணமா யிருக்கிறபடியாலும், முமுட்சுவானவன் அறிய வேண்டிய அர்த்தங்கள்யாவற்றையும் தன்னுள் அமைத்துக் கொண்டிருக்கிற படியாலும், மந்திரங்க ளெல்லாவற்றினும் மேலான மந்திரமாய், ரகசியங்களில் உத்தமரகசியமாய், புனிதமானவை யாவற்றினும் மிகப் புனிதமாயிருக்கிற உன்னத மகிமைதான் இம்மந்திரத்தின் சீர்மையாகுமென்றுணர்க.

**வினு : இச்சீர்மையையுடைய இம்மந்திரத்தை நாம் கையாளுகிற முறை என்ன ?**

**விடை :** சகல வே தா ந் த சாரார்த்தங்களைத் தன்னுள் கொண்ட ஏற்றத்துக்குத் தக்கபடி அதிசயபக்தியுடனும் விசுவாசத்துடனும் இம்மந்திரத்தைக் கொண்டாட வேண்டும்.

**வினு : எப்படி அனுசந்திக்கலாகாது (சொல்லலாகாது) ?**

**விடை :** மந்திரம் ஈந்த குரு, மந்திரம், அம்மந்திரத்திற்குரிய தேவாதி தேவன், ஆகியோரிடத்தில் அன்பில்லாதவனுக்கும், பகவானுடைய மகிமைகளைச் சொல்லுமளவில் குற்றங் குறைகளைக் கூறுகிறவனுக்கும்—அவன் எவ்வளவு நல்லவனாக யிருப்பினும் அப்படிப்பட்ட அநதிகாரிகள் (அயோக்கியர்) —செவிகளில் படும்படியாகச் சொல்லக்கூடாது. மனதில் நேர்ந்தபடியெல்லாம் சொல்லலாகாது.

**வினு : இந்த மந்திரத்தில் மட்டும் விசுவாசமும் அன்புமிருந்தால் போதுமா ?**

***சூ-ம். 4. மந்திரத்திலும் மந்திரத்துக்குள்ளீடான வஸ்துவிலும் மந்த்ரப்ரதனான ஆசாரியன் பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் கார்யகரமாவது.***

**விடை :** 1. அறியவேண்டிய எல்லா அர்த்தங்களையும் தன்னுள் கொண் டறிவிக்கிற இந்தத் திருமந்திரத்திலும்,

முமுட்சுவுக்கு { 2. சேஷித்வ—ஆண்டானையும், சரண்யத்துவ—அடையத்தகுந்தவனையும், ப்ராப்யத்துவ—அனுபவிக்கப்படுமவனையும்,

ஆகிற மூன்று தன்மைகளையுடைய ஈசுவர சொரூபத்தை உள்ளபடி உணர்த்துகையாலே, இம்மந்திரத்தினல் சொல்லப்படும் சருவேசுவரன் விஷயத்திலும்,

3. இந்த மந்திரம் ஆசாரிய சுவாதீனமாயிருக்கிறபடியால், அதை நமக்குக் கருணையுடன் உபதேசித்துபகரித்து, பகவத் கைங்கரியத்துக்கு அருகனைகும்படி செய்தருளிய ஆசாரிய விஷயத்திலும்,

அளவுகடந்த அன்பும் ஆதரணையுமுண்டானல் நாம் கடைத்தேறலாகும். அதிசயித்த சிரத்தை, பக்தி, விசுவாசங்கள் இல்லையென்ருல் உய்ய முடியாதென்பது உறுதி. ஏனெனில் அகிலாண்டகோடிகளும் இறைவனுடைமையாகும். அவ்விறைவன் மந்திரத்துக்குள் அடக்கம். அம் மந்திரம் ஆசாரியன் வசமாயிருக்கிறது. ஆதலின் மந்திரமும், மந்திரப்பொருளான ஈசுவரனும் மந்திரம் ஈந்த குருவும் நமக்கு முக்கிய குறிக்கோள்களாம்.

**வின: மந்திரத்தைமட்டும் உபதேசித்தார் ஒரு ஆசாரியர். மந்திரப் பொருள்களை மனத்தில் பதியும்படி தெரிவித்தார். ஒரு ஆசாரியர். இவ்விருவரிடமும் பிரேமம் அதிகரித்திருக்கவேண்டு மென்னமல், உபதேசித்த ஆசாரியர் பக்கலில் பிரேமம் கனத்திருக்க வேண்டுமென்று சொன்னதேன் ?**

**விடை:** மந்திர உபதேசம் செய்தவர் உபகாரக ஆசாரியர் எனப்படுவார். அர்த்தங்களைத் தெரிவித்தவர் உத்தாரக ஆசாரியார் எனப்படுவர். இவ்விருவரில் உத்தாரகரிடம் பிரியம் ஏற்படுவது இயல்பு. அதற்காக வற்புறுத்த வேண்டியதில்லை. அதுபோலவே, உபகாரகாசாரியரிடத்திலும் அன்பைச் செலுத்த வேண்டுமென்பதைக் காட்டுகைக்காகவே சொன்ன தென்றுணர்க.

**வின: இவ்விருவகைப்பட்ட ஆசாரியர்களும் வெவ்வேருகத் தான் இருப்பார்களோ? உபதேசாசாரியரே உத்தாரகராயேற்பட மாட்டார்களோ?**

**விடை:** ஒருவர் உபகாரகராகவும்ம், ஒருவர் உத்தாரகராகவும் ஏற்படலாம். அல்லது உபகாரகரே உத்தாரகராகவும்

ஏற்படலாம். உதாரணமாக: உடையவருக்குப் பெரிய நம்பி உபகாரகாசாரியர்; திருக்கோட்டியூர் நம்பி உத்தாரகாசாரியராவர். ஸ்ரீபட்டர், நஞ்சீயருக்கு உபகாரகரும் உத்தாரகருமாவார்.

**வினா: இவ்விரு வகையான ஆசாரியர்களைப் பாவிப்பதில் ஏற்றத் தாழ்வுகளான பேதமுண்டோ?**

**விடை:** பாழ் நிலத்தைப் பண் படுத்தியவனைப்போலேயாம் மந்திரமீந்த உபகாரகாசாரியர். பண்படுத்தப்பட்ட நிலத்தில் பயிர் வைத்துப் பலனெடுத்தவன் போலாவார் உத்தாரகாசாரியர். எம்பெருமானுடைய இரண்டு பாத மலர்களில் ஏற்றத் தாழ்விருந்தாலன்றோ இவ்விருவரிலும் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும். அப்படியில்லை யாதலால் இருவரும் சமானரேயாவர்.

**வினா: திருமந்திரம் தோன்றிய வரலாறு யாது?**

***சூ-ம். 5. ஸம்சாரிகள் தங்களையும் ஈசுவரனையும் மறந்து, ஈசுவர கைங்கர்யத்தையுமிழந்து இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே ஸம்சாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் தன் கிருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரம் சேரும்படி தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்.***

**விடை:** சம்சாரிகள் உய்யும் வண்ணம் பகவான் ஸ்ரீமந் நாராயணனே பதரிகாச்சிரமத்தில், குரு சிஷ்யராக அவதரித்து, அச்சம்சாரி தன்னையும், தலைவனையும், நெறியையும், பகையையும், பலனையும் அறிதலாகிய ஐம்பொருளறிவால் அடைவது மோட்சமாதலால், அதற்குரிய அர்த்தவிசேஷங்களைத் தன்னுள் கொண்ட திருமந்திரத்தை வெளியிட்டளினார்.

**வினா: சம்சாரிகள் என்பார் யார்?**

**விடை:** அனாதியான சரீர (அசித்) சம்பந்தத்தாலே ஆத்மாவை (சித்தை)த் தொடர்ந்து வருகிற பொய் நின்ற ஞானம் (அவித்தை) பொல்லாவொழுக்கம் (கரும) வாசனை, ருசி, அழுக்குடம்புகளாலே ஜனமரணாதி துக்கங்களை யடைந்து திரிகிற பத்த (கட்டுப்பட்ட) ஆத்மாக்கள்.

**வினு : இந்த சமுசாரிகள் திரிகின்றவிதம் எப்படி?**

**விடை :** இயற்கையாகவே ஆத்மாக்கள் அனைத்தும் பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தலையே சொரூபமாக உடையன. அங்ஙனமாயிருக்கிற **தங்களையும்,** தங்களுக்கு எக்காலத்திலும் ஆத்தும ரட்சகனை எஜமானனு (ஆண்டானு) யிருக்கிற **ஈசுவரனை**யும் மறந்து, உள்ள எஜமானனை (சேஷியான) ஈசுவர விஷயத்தில் குற்றவேல்கள் புரியும் உத்தமப் பயனை கைங்கரியத்தை யடையப் பெருமல் போனதுமன்றி, தான் பகவானுடைய அடியான் என்கிற இலக்கணத்துக்குத் தகாத புலன்களின் அடக்கமின்றி 'மேலிடுவதே' என்ற இருவித இழவுகளைப்பற்றியகவலையுமின்றி, அளவிலாத்துன்பங்களுக்கெல்லாம் பிறப்பிடமாய், எவராலேயும் கரைகாண வெண்ணுததா யிருக்கிற **சமுசாரமாகிற பெருங்கடலிலே** மூழ்கி, மூவகைப்பட்ட தாபங்களால் **நோவுபட்டுத்** திரிகின்றனர். ஏனவே, (1) '**தங்களையும்**' என்றதால் ஆத்தும சொரூபத்தையும், (2) 'ஈசுவரனையும்' என்றதால் பர சொரூபத்தையும், (3) 'ஈசுவரன் கைங்கரியத்தையும்' என்றதால் புருஷார்த்த (பல) சொரூபத்தையும் (4) 'சமுசாரப் பெருங்கடல்' என்ற விரோதி சொரூபத்தையும், (5) 'நோவுபட' என்றதால், அதிலிருந்து தப்புகிற வழியறியாமையாலே உபாய சொரூபத்தையும், கூறியவாருகும். ஆக, இவ்வைந்து அர்த்தங்களின் அறிவு (அர்த்தபஞ்சக ஞானம்) இன்றித் திரிகின்ருர்கள் என்பதே.

**வினு : இவ்வாறு நோவுபட்டுத் திரிகிற சமுசாரிகளுக்குக் கதி விமோசனம் தானென்ன?**

**விடை :** மேல் கூறிய ஐந்து அர்த்தங்களையும் நன்ருக அறிந்து இந்தப் பவக்கடலைக் கடந்து, கரைசேர, சகல சாஸ்திர சாரமான திருவெட்டெழுத்தாகிய திருமந்திரத்தைத் தானே ஆசாரியனும், சீடனும் பதரியில் அவதரித்துத் தன தியற்கைப் பெருங்கருணையாலே வெளியிட்டருளினுர். இதனை யறிதலே சமுசாரிகளுக்கு விமோசனமாகும்.

**வினு : தாமே சொன்னுரென்னுமல் 'வெளியிட்டார்' என்றது ஏன்?**

**விடை :** இப்போது புதிதாக முன்பில்லாததைக் கற்பித்துச் சொன்னுரென்பதில்லை. அனுதியான (முன்பு மறைந்திருந்த) திருமந்திரத்தைத் தான் சேதனருடைய இழவைக் கண்டு சகிக்கமாட்டாமல் உலகில் ஒளியுற விளக்கினுர்.

ஏனெனில். உடைமையழியும்படியை அவ்வுடைமை யுடையான் கண்டு கொண்டிருக்க முடியாததாதலின் தன்னுடைமையைத் தான் அடைய வேண்டி வெளியிட்டார் என்க.

**வினு: அப்படியேயாகிலும், ஆசாரியனும் அவதரித்து வெளியிட்டால் ஆகாதா? சீடனும் வந்தது எதற்காக?**

***மூ-ம்: 6. சிஷ்யனும் நின்றது—சிஷ்யன் இருக்கும் இருப்பு நாட்டார் அறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக.***

விடை: சிஷ்ய லட்சணங்களை உலகத்தார் அறியமாட்டாதவராய் இருந்ததைக் கண்டு, அவற்றையெல்லாம் தானே செயலளவில் செய்து காட்டுவதற்காகவே சீடனுகவும் வந்தவதரிக்க வேண்டியதாயிற்று.

**வினு: அந்த சிஷ்ய லட்சணங்களை உபதேசித்து அறிவித்தலாகாதோ?**

விடை: உபதேசத்தாலே அறிவிப்பின், தனக்கு உயர்வு தேடிக்கொள்ளவந்தான் போலும், என்று உலகோர் நினைக்கக் கூடுமென்றே! ஆதலின், தானே சீடனுயிருந்து, உத்தம சீடன் இலக்கணங்களையும், குருவுக்குச் செய்யும் பணிவிடைகளையும் செய்து காட்டினுல் 'நாமும் இப்படியிருக்க வேண்டும்' என்று விசுவாசித்து உலகத்தவர் அங்கீகரிக்கக் கூடுமாதலால், தானே சீடனுகவும் வந்தான்.

**வினு: சீடனுய்க் குருகுருவாசம் செய்து இந்த மந்திரத்தைக் கற்றுத்தான் ஞானம்பெற வேண்டுமோ? சாஸ்திரத்தால் ஞானம் அடையலாகாதோ?**

***மூ-ம்: 7. ஸகல சாஸ்திரங்களாலும் பிறக்கும் ஞானம் ஸ்வயமார்ஜிதம்போலே. திருமந்திரத்தால் பிறக்கும் ஞானம் பைத்ருகதநம் போலே.***

விடை: ஒருவன் தன் ஜீவனத்துக்காக இரவும் பகலும் தானே பாடுபட்டுச் சம்பாதிக்கும் திரவியம், மிக சிரமங்களை முன்னிட்டதாயிருக்கும். அதுபோல, சாஸ்திர அப்பியாசத்தால் ஒருவன் அடையும் தத்துவ ஞானமா

னது மிகப் பிரயாசை ரூபமானது. ஆசாரிய உபதேசத்தால் பெறும் திருமந்திரார்த்த ஞானமானது, பாட்டன்மார்கள் சம்பாதித்துவைத்துப்போன ஏராளமான திரவியம் போலே ஒருவிதபிரயாசையுமின்றி மிகச்சுலபமாக சுகமாகஅனுபவிக்கக் கூடியதாயிருக்கும்.

**வினு: இதனுல் தேர்ந்த முடிவு யாது?**

**விடை:** சாஸ்திரங்களை நாமே அப்பியாசம் செய்வதால் பெறும் ஞானத்தைக் காட்டிலும், அந்த சாஸ்திரங்களின் சாரங்களை யெல்லாம் தன்னுள் கொண்ட திருமந்திரப் பொருளையறியும் ஞானமே சிறந்தது.

**வினு: சாஸ்திரங்களிருக்கட்டும். பகவானுடைய மந்திரங்கள் மாத்திரம் ஒன்ரு? இரண்டா? எண்ணிலாத மந்திரங்க ளுண்டன்ரே? அவற்றில் எந்த மந்திரத்தைக்கொள்வது? எதைத் தள்ளுவது?**

**விடை:** மூ-ம். ***8. பகவன் மந்த்ரங்கள் தான் அநே கங்கள்.***

பகவானுடைய குணங்களுக்கும், அக்குணங்களுக்கு இருப்பிடமான அவதாரங்களுக்கும், அவ்வவதாரங்களில் நடத்திய லீலைகளுக்கும் வாசகங்களான மந்திரங்கள் எண்ணி லடங்கா.

**வினு: குணங்களுக்கும், அவதாரங்களுக்கும், செயல்களான லீலைகளுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.**

**விடை:** 1. அவதார மந்திரம் = ஸ்ரீ கிருஷ்ணன், 2. குண மந்திரம் = யசோதை பாலன், 3. லீலை மந்திரம் = தாமோ தரன் என்பன.

**வினு: பகவன் மந்திரங்கள் யாவும் அவற்றுள் சமமா? அல்லது அவற்றில் ஏற்றத் தாழ்வுகளான பேதமுண்டா?**

**விடை:** மூ-ம். ***9. அவை தான், வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டு வர்க்கம்.***

எல்லாப் பொருள்களினுள்ளும் புறமும் எங்கும் எப்போதும் நீக்கமற நிறைந்து பரவியிருக்கும் பரம் பொருளானபகவத்சொரூபத்தை வெளியிடுகின்றவை வியாபக மந்திரங்களென்றும், பகவத் அவதார, குண, செய்கைகளுள் ஓரொன்றை மட்டிலும் வெளியிடுகின்றவை அவ்வியாபக மந்திரங்களென்றும், இருவகைப்பட்ட மந்திரங்களுண்டு.

**வினா : இவ்விருவகை மந்திரங்களும் தம்முள் சமமா ?**

விடை : *மூ-ம். **10. அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் சிரேஷ்டங்கள்.***

சகல அவ்வியாபக மந்திரங்களைக் காட்டிலும் 'நாராயணாய வித்மஹே, வாஸுதேவாய தீமஹீ, தந்நோ விஷ்ணு ப்ரசோதயாத்' என்று விஷ்ணுகாயத்ரீயில் ஓதப் படுகிற நாராயண, வாசுதேவ, விஷ்ணு என்ற இந்த வியாபக மந்திரங்கள் மூன்றும் சிறந்தவை.

**வினா : வியாபக மந்திரங்கள் மூன்றுமாவது சமமா ?**

விடை : *மூ-ம். **11. இவை மூன்றிலும் வைத்துக் கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ராதனம்.***

மூன்று மந்திரங்களில், நாராயண மந்திரம்தான் முதன்மை பெற்றிருக்கிறது. ஆதலின், மூன்றும சமமல்ல.

**வினா : நாராயண மந்திரத்திற்கு முக்கியத்துவம் வந்தது எவ்வாறு ?**

விடை : சிறு (அவ்வியாபக) மந்திரங்களைக் காட்டிலும், சிறந்தவைகளான பெரிய (வியாபக) மந்திரங்கள் நாராயண, வாசுதேவ, விஷ்ணு என விஷ்ணு காயத்ரீயில் சொல்லப்பட்டிருக்கும் முறையில், நாராயண மந்திரமானது முதலில் ஓதப்பட்டிருக்கிறபடியாலும், சகலார்த்தங்களையும் நிறைவாகத் தன்னுள் கொண்டிருக்கிறபடியாலும், 'அஷ்டாக்ஷ ரத்தைக் காட்டிலும் உயர்ந்த மந்திரம் ஒன்று இல்லவேயில்லை' என்று சுருதித் தொகைகள் பலவற்றால் நிச்சயிக்கப்பட்டுள்ள படியாலும், திருவெட்டெழுத்தாகிய திருமந்திரமானது முதன்மை பெற்றது.

**வினா : மற்ற பெரிய மந்திரங்களிரண்டிற்கும் வந்த தாழ் வென்ன ?**

விடை : *மூ-ம். **12. மற்றவை யிரண்டுக்கும் அசிஷ்ட பரிக்ரஹமும் அபூர்த்தியுமுண்டு.***

மற்ற இரண்டு பெரிய மந்திரங்களான வாசு தேவ, விஷ்ணு மந்திரங்கள் 'பகவான் சகல வஸ்துக்களிலும் வசிக்கிறான்' என்றும், 'சர்வத்திலும் பரவியிருக்கிறான்' என்றும் முறையே வெளியிடுவதால், மதவாதிகளான பிறர் தங்கள் தங்கள் மாறுபட்ட கொள்கைகளுக்குத் தக்கபடியாக அவற்றின் பொருள்களை இசைவித்துக்கொள்ள இடமளிக்கிற படியால், அவை, பரம வைதிக சித்தாந்திகளல்லாதாருடைய

அங்கீகாரம் பெற்றனவாதலாலும், பகவத் சருவ வியாபகத்து வாதி சொருப, குண, விபூதிகளைப்பற்றிச் சப்தமாக திடப் படுத்திச் சொல்லாமையாலும், அதாவது, பகவான் இன்ன விதமாய் நீக்கமற நிறைந்துள்ளான் என்ற விவரத்தையும், நிறைந்து பரவப்பட்டவை இன்னின்னவை யென்பதையும், வியாபித்திருக்கிற பிரகாரம் இன்னபடியாக என்ற விவரத் தையும் தெளிவுபடுத்தாத மந்திரங்களாயிருக்கிறபடியாலும், வாசுதேவ மந்திரத்துடன் மூலத்திலில்லாத 'பகவதே' என்ற சொல்லைச் சேர்த்துச் சொல்லவேண்டியிருக்கிற குறைவினுலும், இந்த இரண்டு வாசுதேவ, விஷ்ணு நாமங்கள், நாராயண மந்திரத்தினும் குறைவுபட்டவையாயிருக்கின்றன. நாராயண மந்திரத்தை மற்ற குறுக்கு மதவாதிகள் தங்களிஷ்டப்படி அர்த்தங்களை மாற்றி வளைக்க முடியாது. வீர சைவனுயிருந்து வேதங்களைத் தன்னிஷ்டப்படி பொருள்படுத்திய வித்துவான் அப்பையதீக்ஷிதன், இந்த நாராயண மந்திரத்தைத் தன் இஷ்டப்படி மாற்ற முடியாமல் 'ண'த்வம் பாதிக்கிறதே என்று அதே கவலையால் மாண்டான்.' எனச் சரித்திரம் கூறுகிறது.

**வினு: நாராயண மந்திரத்தில் இந்தக் குறைவுகள் இல்லையோ? அதில் சொல்லப்படும் நிறைவுகளெவை?**

**விடை:** இல்லை. நிறைவுகள் எவையெனில், ஈசுவரனுடைய திவ்யாத்தும சொருபத்தையும், திவ்ய மங்கள விக்ரஹ வைபவத்தையும், இவை இரண்டினுடைய குண விசேடங் களையும், சராசரங்களின் உள்ளும் புறம்புமாயிருக்கிற விதங்க ளைப்பற்றியும் இன்னும் அறியப்பட வேண்டிய சகலார்த் தங்களையும் மிகத் தெளிவாக, சப்தமாகவே அறிவிக்கிறபடி யாலும் இந்த நாராயண மந்திரம் உயர்வற உயர்ந்து முதன்மை பெற்றது.

**வினு: நாராயண மந்திரம் சிஷ்களான பெரியோர் களுடைய அபிமானம் பெற்று அங்கீகரிக்கப்பட்டதா?**

**விடை:** *மூ-ம். 13.* **இத்தை வேதங்களும், ரிஷிகளும் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் விரும்பினுர்கள்.**

அதாவது, சிஷ்டர்களான வேத புருஷனும், மகரிஷிகளும் ஆழ்வார்களும், ஆசாரியர்களனைவரும் இந்த நாராயண மந்திரத்தையே மிகவும் போற்றி அங்கீகரித்துக் குரு சிஷ்யக் கிரமமாக உபதேசித்து வருகிற கௌரவமும் இதற்கு உண்டு. ஆகையாலும் இம்மந்திரம் முதன்மை பெற்று விளங்கு கிறது.

**வினு : இம்மந்திரமான சொல்லுக்கும், அதன் பொருளான ஈசுவரனுக்கும் ஏற்றத்தாழ்வு உண்டோ?**

**விடை :** உண்டு.

***சூ-ம். 14. வாச்யப்ரபாவம் போலன்று வாசகப்ரபாவம்.***

அதாவது, இந்த வாசகமான திருமந்திரத்தின் பெருமை, இதன் வாச்சியனுன ஈசுவரனுக்கில்லை.

**வினு: இதன் ஏற்றத்தைத் தெரிவிக்க.**

**விடை :** சூ-ம். ***15. அவன் தூரஸ்தனுனுலும் இது கிட்டி நின்றுதவும்.***

அதாவது, பகவான் அவதரித்திருந்த காலத்தில், மந்திர வஸ்துவான அவன் நெடுந்தூரத்திலிருந்தானுனுலும், அடியார்களுக்கு அவனது திருநாமமாகிய வாசகமானது துணையிருந்து காப்பாற்றிய பெருமையுடையது.

**வினு : அப்படி உதவின இடமுண்டோ?**

**விடை :** சூ-ம். ***16. த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே.***

பீஷ்மர், துரோணர், முதலிய பெரியோர்கள் அடங்கிய மகாசபையிலே, துரியன் ஏவலாலே துச்சாஸனன், துரோபதையின் கூந்தலைப் பிடித்து இழுத்து வந்து நிறுத்தித் துகிலை உரிய, அப்போது அவள் 'சங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்சுதா கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணுகதாம்'' என்று கோவிந்த நாமத்தைச் சொல்லியழைக்கவே, அவளுக்கு மானத்தைக் காத்துக் கொள்ள, அவசியம் வேண்டியதாயிருந்த ஒரு புடவைக்குப் பல புடவைகள் வந்து குவிந்தன. அவ்வாறு ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டாள் திரௌபதி. இங்குப் பகவானுடைய திருநாமமே யன்றோ ரட்சித்தது?

**வினு : நாராயண மந்திரத்தின் பெருமையைச் சொல்லும்படி கேட்டால் நீர் கோவிந்த நாமத்தின் மகிமையைச் சொல்லுகிறீரே?**

**விடை :** ஒரு சிறிய மந்திரமும், நாராயண மந்திரத்தின் ஏகதேசமுமான கோவிந்த நாமமே இவ்வரிய பெரிய காரியத்தைச் செய்ய உதவியதென்றல் (கைமுதிக நியாயத்தின் படி) பெரிய மந்திரங்கள் மூன்றிலும் சிறந்த திருவஷ்டாக்ஷர மகா மந்திரத்தின் சக்தியைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ?

**வினு : இன்னமும் இம்மந்திரத்தின் வைபவம் யாது ?**

**விடை : ஸூ-ம். 17. சொல்லும் க்ரம மொழியச் சொன்னலும் தன் ஸ்வரூபம் கெட நில்லாது.**

அதாவது பகவானுடைய மந்திரம் தவிர, மற்ற சாமானிய மந்திரங்களுக்குச் சில கட்டுப்பாடுகள் உண்டு. அவையாவன: அம்மந்திரத்தில் நம்பிக்கையும் விசுவாசமும் வேண்டும்; காலம், இடம், விரதம், நியதி முதலியனவற்றைக் கவனிக்க வேண்டும்; ஜபிக்க வேண்டும். பிறகு மந்திர சித்தியடைய வேண்டும். இவ்வளவும் தவருமல் பூர்த்தியாலுல்தான் அம்மந்திரம் வேலை செய்யும். ஆனல், இந்தத் திருமந்திரமோ என்ருல் பெற்ருேர், பிறந்தபோது 'நாராயணன்' என்று தம் பிள்ளைக்கு பெயரிட்டு, ஆபத்துக் காலத்தில் அப் பெயரை அழைத்தாலும், அல்லது ஏளனமாக அந்த நாமத்தைச் சொல்லிக் காட்டினுலும், அல்லது அர்த்தம் தெரியாமல் சொன்னுலும் சாதுக்களைப் பகைத்து, அப்பகையை வெளிப்படுத்தி அவர்களுக்குக் கோபமுண்டாகும் பொருட்டு பகவந் நாமத்தைக் கொக்கரித்துப் பழித்துச் சொன்னுலும், மற்றும் எந்தக் காரணத்தை முன்னிட்டுக் கூறினுலும்நாராயண மந்திரத்தைச் சொன்னல், சொன்னவருடைய பாவங்களைப் போக்கிக் காப்பாற்றுவதில் குறைவுபடுதல் இல்லை. நெருப்புச் சுடும் என்ற விவரம் தெரியாத குழந்தை அந்நெருப்பைத் தொட்டால் எப்படி அதன் சுடும் சுபாவம் தவருமல் இருக்குமோ அதுபோல இந்த நாராயண மந்திரமானது தன்னைச் சொல்லுப வர்கள் எப்படிச் சொல்லினும் தனது காக்கும் தருமத்தினின் றும் தவருமல் காப்பாற்றியே தீரும் பெருமையுடையது.

**வினு : இந்த மந்திரம் தன்னைப் பாராயணம் செய்பவருக்குச் சகலவித பலன்களையும் தருமா ? விளக்குக.**

**விடை : ஸூ-ம் 18. இதுதான் 'குலந்தரும்' என்கிற படியே எல்லா அபேக்ஷிதங்களையும் கொடுக்கும்.**

அதிகாரிகள் மூவகைப்படுவர் :—புதிய செல்வத்தை விரும்புகிறவனும், இழந்த செல்வத்தை விரும்புகிறவனு மான இருவகைப்பட்ட **ஐச்வரியார்த்தி**, ஆத்துமானுபவத்தை விரும்புகிற **கைவல்யார்த்தி**, இவ்விருவகை அதிகாரிகளுக் கும் அவரவர்களுடைய விருப்பங்களை இத் திருமந்திரம் தருகின்றது. மூன்ருமவனுகிய **பகவதனுவ முமுட்சுவுக்கு** எவற்றை விடவேண்டும், எவற்றைப் பற்றவேண்டும் என்ற விஷயங்களைப் பற்றித் தன் பெரிய திருமொழியில் சொல்ல

வந்த இடத்தில் 'குலந்தரும்' என்கிற பாட்டிஞல் இந்த மந்திரத்தின் மகிமையை ஒருதடவை போல் ஒன்பது தடவை முதற்பத்தாகிய பதிகத்திலேயே அருளிச் செய்திருக்கிருர் திருமங்கையாழ்வார்.

**விஞ:** அஃதெவ்வாறு?

**விடை:** **குலந்தரும்** = 'பகவானுக்கும் அவன் உயிர் நிலேயான பாகவதருக்கும் இவ்வான்மா அடிமை' என்ற சேஷத்வஞான மாகிற குலத்தைத்தரும். (தொண்டக்குலம்)

**செல்வம் தந்திடும்** = அந்தத் தொண்டர் குலத்துக்குத் தக்கபடியான பகவத் பாகவத கைங்கரியமாகிய பெருஞ் செல்வத்தைத்தரும்.

**அடியார் படுதுயராயின வெல்லாம் நிலந்தரம் செய்யும்** = தேகத்தில் ஆத்ம புத்தியாவது ஆத்மாவைப் பரமாத்மா வென்று பிரமிக்கும் புத்தி. (அதாவது ஆத்மாவைச் சுதந்திரனென்று எண்ணுதல்) தனக்கும் பிறருக்கும் தான் அடிமை என்கிற அந்ய சேஷத்வம். தன்னேத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்றெண்ணுகிற ஸ்வரக்ஷணேஸ்வாந்வயம். செய்யும் பணிவிடைகளுக்குத் தானே கருத்தாவென்று நினேத்தலாகிற கர்த்ருத்வபுத்தி; அத்திருப்பணியால் வந்த பலனே அனுபவிக்க உரிமையுடையவன் தானே என்றெண்ணுகிற ஸ்வபோக்த்ருத்வ பூத்தி முதலான இச் சொரூப விரோத குணங்களேத் தரைமாட்டமாக்கும்.

**நீள் விசும்பருளும்** = பகவதனுபவத்திற்கு இடைஞ்சலில்லாத பரமபதவாசம் கொடுக்கும்.

**அருளொடு பெரு நிலமளிக்கும்** = பரமபதம் கொடுத்த கிருடையுடன் ஈசுவரன், தன்னேயனுபவிக்கும்படியான எல்லேயில்லா ஆநந்தத்தைக் கொடுக்கும்.

**வலந்தரும்** = அவ்வனுபவத்தாலேற்படும் அன்பின் காரியமான கைங்கரிய சுகத்தில் 'நான் செய்த கைங்கரியத்தாலன்ரே எம்பெருமானுக்கு உகப்பாயிற்று' என்ற கர்த்ருத்வ புத்தியும், 'இக்கைங்கரியத்தால் எனக்கு எவ்வளவு ஆனந்தம்? நான் செய்த பாக்யமே பாக்கியமென்ற ஸ்வபோக்த்ருத்வ புத்தியுமாகிற அகங்கார மமகாரங்களே வெற்றிகொள்ளத்தக்க பலத்தைக் கொடுக்கும்.

**மற்றுந்தந்திடும்** = மற்றும் ஆத்தும சொரூபத்திற்கு அனுகூலமான எல்லாவற்றையும் தரும்.

**பெற்றதாயினும் ஆயின செய்யும்** = பகவானுக்கு நாம் அடிமை என்பது அவனடியாருக்கும் நாம் அடிமைப்பட்ட

போதுதான். இத்தகைய ஞானமுடைய அதிகாரிக்கு ' சாஸ்திர சட்டத்தின்படி நடக்கவேண்டுமே' என்னும் கட்டுப்பாட்டுக்காக வல்லாமல், இயற்கையான அன்பின் காரியமாக வருமவற்றை யெல்லாம் செய்யும்.

**நலந்தரும் சொல்லை** = அர்த்தங்களை யெண்ணிப் பார்க்காமல் பொதுவாக மந்திரத்தை வாயால் உச்சரித்த மாத்திரத்திலேயே பக்தியைப் பிறப்பித்துக் கைங்கர்ய ருசியை உண்டாக்குகிற திருமந்திரத்தை,

**நான் கண்டு கொண்டேன்** = இப்படியொரு மந்திரம் உண்டென்றறியாதிருந்த நான் கண்டேன்;

**நாராயணு வென்னும் நாமம்** = அந்த மந்திரந்தான் ("நமோ நாராயணு யேதீமந்த்ரஸ் ஸர்வார்த்தஸாதக:") என்கிற திருவெட்டெழுத்தாகிய திருமந்திரம் '**ஓம் நமோ நாராயணுய**, என்பதாம்.

இவ்வுரை பூருவாசாரியர் இட்ட கட்டளை. இனி யாவருக்கும் ரஸமாயிருக்கும் உரையும் கீழே காட்டப்பட்டுள்ளது,

**குலந்தரும்** = பண்டைக் குலத்தைத் தவிர்ந்து தொண்டக் குலத்தில் சேர்க்கும்; நித்ய முக்தர் குலம் தரும்.

**செல்வந் தந்திடும்** = இளைய பெருமாளை 'லக்ஷ்மணே லக்ஷ்மீ சம்பந்ந:' என்றும், விபீஷணுழ்வாரை 'அந்தரிக்ஷ: கதச்ச்ரீமான்' என்றும் வால்மீகி சொன்னபடியான நீங்காத செல்வம் தரும். குலேசருக்கு அஷ்டைச்வரியம் கொடுத்தது போலவும் இகபர சௌக்கியங்களைத் தரும்.

**அடியார்...செயும்** = பிரகலாதாழ்வார், பாண்டவர்கள் முதலான தன் பக்தர்களுடைய சகல துயரங்களையும் நிலமட்டமாக்கிக் காத்ததுபோல் இம்மந்திரம் அடியார்களைக் காப்பாற்றும்.

**நீள் விசும்பருளும்** = துருவனுக்கு ஒரு புதிய உலகம் உண்டுபண்ணி, சகல அண்டங்களும் அந்தத் துருவ மண்டலத்தை வலம் வருவதாகிய உயர் பதவியைக் கொடுத்து போலச் செய்யும்.

**அருளொடு... அளிக்கும்** = அர்ச்சிராதியாலே பரமபதம் கொடுத்துக் காப்பாற்றும் .

**வலந்தரும்** = சிறிய திருவடியானவர், கடலைத் தாண்டவும், ராக்கத சமூகத்தினரை அனுயாசமாகச் சம்மாரம் செய்யவும், சஞ்சீவி பருவதத்தைத் தூக்கி வரவும் முதலான காரியங்களைச் செய்யப் பலம் வந்தது தாரக மந்திர பலத்தாலன்றோ? சேதுவாம்

திருவணையும் கடலில் அமிழ்ந்து போகாமல் தாங்கி நின்றதும் மந்திர பலமே. ஆதலின் பக்தர்களின் அபார பெருமை களுக்கும் காரணம் இம்மந்திர பலமே.

**மற்றும் தந்திடும்**=துரோபதைக்கு ஒரு புடவை வேண்டியதற்கு அநேக புடவைகளைக் கொடுத்தது.

**பெற்ற தாயி...செய்யும்**=பிரகலாதாழ்வானுடைய தாயார் விஷம் கலந்த பாலைக் கொடுத்தாள். பகவான் அந்த விஷத்தைப் போகக்கினார். காரணம் மந்திர சக்தியே.

**நலந்தரும்...நாமம்**=திருமந்திரத்தைப் பாராயணம் செய்கின்றவர்களுக்குப் பகவத் பக்தியைக் கொடுத்துப் பவக்கடலைத் தாண்ட வைத்துப் பேரின்ப நலத்தைத்தரும் என்று திருமங்கையாழ்வார் தான்பெற்ற நன்மையை அனுபவித்துக் கண்டவராதலால் நம்மனைவருக்கும் இங்ஙனம் உபதேசித்தார்.

**வினு: பகவதனுபவிகளான முமுட்சுக்களுக்குத்தான் இம்மந்திரம் உதவுகிறதோ? மற்ற ஐசுவரியார்த்தி கைவல்யாதிகாரிகளுக்கு உதவுவதில்லையோ?**

விடை: *மூ-ம்.* ***19. ஐச்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக் கொடுக்கும்.***

இவ்வுலக, இந்திர உலகாதி சொர்க்கலோக வாழ்வுகளாகிய ஐசுவர்யங்களை ஆசைப்படும் அவர்களுக்கு இந்த மந்திரம் உபாயமாய் நின்று அடைவிக்கும்; அதே விதமாக ஆத்துமானுபவரூபமான கைவல்யத்தை விரும்பும் அதிகாரிக்கும், உத்தம புருஷார்த்தமான பகவதனுபவத்தை ஆசைப்படும் முமுட்சுவுக்கும் இந்த மந்திரம் உபாயமாயிருந்து அடையும்படி செய்யும்.

**வினு: நாராயணனையே உபாயமெனப் பற்ருமல், தங்களுடைய சுதந்திர முயற்சிகளாகிய உபாயந்தரங்களான கருமயோக ஞானயோக பக்தியோகப் பிரவிருத்திகளைச் செய்யுமவர்களுக்கு இந்த மந்திரத்தால் ஆவதென்ன?**

விடை: *மூ-ம்.* ***20, கர்மஞான பக்திகளிலே இழிந்தவர்களுக்கு விரோதியைப் போக்கி அவற்றைத் தலைக் கட்டிக் கொடுக்கும்.***

அதாவது கருமஞானாதி மோட்ச மார்க்கங்களில் பிரவேசிக்கிறவர்களுக்கு, ஜபம், அக்னிகாரியமாகிய ஓமம் வளர்த்தல் முதலிய கருமங்களில் இந்த மந்திரத்தை உதவியாகக்

கொள்ளும்போது, அவற்றின் இடையூறுகளுக்குக் காரண மான இவனுடைய பாபங்களைப் போக்கி நிறைவேற்று விக்கும்.

**வினு: கருமயோகமென்றுலென்ன?**

**விடை:**—யக்ஞம், தானம், தவம், தியானம், சந்தியாவந் தனம், தேவபூஜை, பித்ருபூஜை, மனித பூஜை, பசு, காக்கை முதலிய பிராணிகளின் பூஜை முதலிய கடன்களைச் செய்தல், அக்னியில் நெய்யைச் சொரிந்து செய்யும் அக்னி ஹோத்திரம் தீர்த்த யாத்திரை, புண்ணிய ஸ்தலவாசம், க்ருச்ர, சாந்திரா யணம், விரதம் நான்கு மாத விரதம், கந்த பல மூலாதிகளை உணவாகக் கொள்ளுதல், சாஸ்திராப்பியாசம், சமாராதனம், ஜபம், தருப்பணம், முதலான சரீரப் பிரயாசையால் செய்யப் படும் காரியங்கள். இதனுல் பாபங்கள் நசித்து, அதன் பயனுகப் புலனடக்கம் ஏற்படுகின்றது.

**வினு: ஞானயோகமென்றுல் என்ன ?**

**விடை:**—I கருமயோகத்தாலேற்பட்ட புலனடக்க பலத்தால், இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்யா ஹாரம், தாரணம், தியானம், சமாதி ரூபமான எட்டு அங்கங்களோடு கூடிய யோகாப்பியாசம் செய்து இவனுடைய ஞானத்திற்கு ஆத்துமாவைக் குறிக்கோளாக்குதல். (இது ஆத்மானுபவி செயல்) II பகவதனுபவியான ஞானி, தன் பகவதாராதன ரூபமான பலசங்கமற்ற கரும யோகத்தாலேற்பட்ட தூய அந்தக் கரணத்தைக் கொண்டு இருதய கமலம், சூரியமண்டலம், அக்னி மண்டலம் முதலான இடங்களிலே பகவான் அந்தரி யாமியாக எழுந்தருளியிருக்கும் திவ்யமங்கள சொரூபத்தைத் தனது தியானத்திற்கு விஷயமாக்கி. யோக பலத்தாலே அனு பவ காலத்தைப் பெருக்கிக் கொண்டு இருத்தலேயாம்.

**வினு: பக்தியோகமென்றுல் என்ன?**

**விடை:** ஞானயோகத்தின் பயனுக, ஞானங்கனிந்த நலமெனப் பரிணமித்து, தைலதாரையைப்போலேஇடைவிடாமல்சருவேசு வரனுடைய சொரூப, ரூப, குண அனுபவரூபமான மந்திரவுச் சாரண அனுபவத்தை அதிசய அன்புடன் செய்து, ஊழ்வினை கழியும்படி பிரார்த்தித்து, ஆடிப்பாடி, பகவானுடைய திருநாம சங்கீர்த்தனுதிகளால் அனுபவித்தலாம். ஆக, இவ்வுபா யாந்தரங்களான கரும, ஞான பக்திகளைச் சகாயமாகக் கொண்டுபகவானுகிய நற்பயனையடையும் அதிகாரிகளாவார்.

**வினு: பிரபந்நன் என்பான் யாவன்?**

**விடை:** கீழே சொன்னவர்களைப்போல் கருமஞானுதிகளை மோட்சோபாயங்களாகக் கருதாமல், அவற்றைப் பகவானுடைய கட்டளை ரூபமான திருப்பணிகளெனக் கருதி, அவற்றைப் பகவான் முகமலர்த்தியின் பொருட்டுச் செய்கிறவன் பிரபந்நன். ஆதலின், ஈசுவரனே உபாயனும், உபேயனும ஆவான் என்ற திடநம்பிக்கையுடன் இவன் இருப்பான். உபாயாந்தரபரன் குரங்குக் குட்டியைப்போலே பற்றுவதெல்லாம் பற்றித் தன்னையும் பற்றியி நப்பவன். பிரபந்நனுவெனில் பூனைக்குட்டியைப் போலே விடுவதெல்லாம் விட்டுத் தன்னையும் விட்டிருக்கிறவனுவான்.

**வினு: இத்தகைய பிரபந்நனுக்கு இம்மந்திரம் செய்வதுயாது?**

**விடை : மூ-ம். 21.பிரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூப ஜ்ஞானத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும்.**

அதாவது, தன்னையடைந்தவரைக் காக்கின்றதான தன் காரியத்திற்குப் பிறருடைய, பிறவற்றினுடைய் உதவியை எதிர்பாராத ஈசுவசனுடைய சுதந்திர சொருபத்திற்கும், பகவத் சேஷத்வ பாரதந்தரியமாகிய சேதனனுடைய சொருபத்துக்குச் சிறிதும் சேராத சேதன சுதந்திர சக்தியால் செய்யப்படும் உபாயாந்தரங்களை விட்டு, ஈசுவரனே உபாயோபேயன் என்ற சொருபத்திற்குப் பொருத்தமான பிரபத்தி மார்க்கத்திலே பிரவேசித்தவர்களுக்கு, அதற்கு அனுகூலமான பகவத் பாரதந்தரியஞானத்தை (உடலானது உயிரின் இஷ்டப்படி இயங்குமேயொழியத் தன்னிஷ்டமென்ப தில்லாதிருப்பது போன்ற அறிவை)த் தெளிவாகப் பிறப்பித்து, அர்த்தங்களை அறிவிப்பதால், பிறந்த ஞானத்தை வளர்த்துப் போது போக்குகைக்கும் உதவுவதாய், 'தேனும் பாலும் அமுதமுமாய திருமால் திருநாமம் 'என்கிறபடி மந்திர தேவதையான ஈசுவரனைப் போலேயே இத்திருமந்திரமும் ஸ்வயம் போக்யமாயிருக்கும்.

**வினு: ஸ்வயம் போக்கியமாயிருத்தல் என்பதை விளக்குக.**

**விடை :** கடலில் மூழ்கி முத்துக்களை எடுப்பவன் கரையில் காத்துக்கொண்டிருக்கும் முத்து வியாபாரிகளிடம் ஒரு ஆணி முத்தை ஒரு மூட்டைத் தானியத்துக்கு விற்றுன். அந்த வியாபாரி அதே முத்தைக்கடைத் தெருவுக்குக்கொண்டு போய் ஆயிரம் ரூபாய்க்கு விற்றுன். அதை வாங்கியவன் பொன்னுடன் சேரவைத்து ஒரு ஆபரணமாக்கி ஒரு அரச

னுக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு விற்ருன். அவ்வரசனே அவ் வாபரணத்தைத் தானே அணிந்து அனுபவித்தான். ஒரு ஆணி முத்தானது, ஒரு மூட்டை தானியத்திற்கு ஒருவனுல் மதிக்கப்பட்டது. மற்ருெருவனுல் ஆயிரம் ரூபாய்க்கு ஈடாகக் கருதப்பட்டது. இன்ஞெருவன் ஐயாயிரத்துக்கு மதித்தான். இவர்கள் போலேதான் இதர பலன்களுக்காகப் பகவன் மந்தி ரத்தை உபயோகப் படுத்துபவர்கள். அந்த அரசன் எப்படி அந்த ஆணி முத்தாபரணத்தைக்கொண்டு வேருெரு லாபத்தை யும் எதிர்பாராமல். அதைத்தானே சிரசில கிரீடத்தில் சேர்த்து அனுபவித்தானே அதுபோலவே பிரபன்னர்கள் இத்திருமந்தி ரத்தை, இதர பிரயோஜனங்களுக்காக அநுசந்திக்காமல், ராஜ குமாரர்கள்பரிமள தாம்பூல மாத்திரையை வாயிலிட்டு அதன் ரஸத்தை அனுபவிப்பதுபோல அநுபவிப்பார்கள். இதற்குத் தான் ஸ்வயம் போக்யம் என்பது பொருளாகும்.

**வினு: இம்மந்திரத்தில், ஆத்துமா கடைத்தேறுவதற்கான அர்த் தங்களுண்டோ? அவையாவை?**

**விடை:** உண்டு. அவை :

*சூ-ம். **22. மற்றெல்லாம் பேசிலும் என்கிற படியே. அறியவேண்டு மர்த்தமெல்லாம் இதுக் குள்ளே யுண்டு.** சூ-ம். **23. அதாவது அஞ் சார்த்தம்.***

திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி, எட்டாம்பத்து, 10-ம் திருமொழி மூன்ரும் பாட்டில் அருளியபடி "நின் திரு வெட்டெழுத்துங்கற்று மற்றெல்லாம் பேசிலும்" என்று ஆத்மா உய்வதற்கு அவசியம் உணரவேண்டிய அர்த்த விசேடங்க ளெல்லாம் இந்தத் திருமந்திரத்திலிருக்கின்றன. அவற்றைப் பற்றி (ஐந்து அர்த்தங்களை) முன்பே தெரிவிக்கப்பட்டிருக்கின் றன. எப்படி யென்ற விவரங்களை, மந்திர விவரங்களை யறிந்த பின் சொல்லப்பட்டிருப்பதைக் காண்க.

**வினு: மந்திரார்த்தத்தின் வைபவம் இன்னதென்பதைத் தெரி விக்க.**

**விடை:** *சூ-ம். **24. பூர்வாசாரியர்கள் இதில் அர்த் தம் அறிவதற்கு முன்பு தங்களைப் பிறந்தார்க ளாக நினைத்திரார்கள்; இதில் அர்த்தஞானம் பிறந்த பின்பு, 'பிறந்தபின் மறந்திலேன்' என் கிற படியே இத்தை யொழிய வேருென்ருல் கால க்ஷேபம் பண்ணியறியார்கள்.***

**விடை:** அதாவது, நாத, யாமுன, எதிவராதிகளான நமது பூர்வாசாரியர்கள் இம்மந்திரத்தில் சொல்லப்படுகிற அர்த்தங்களை அறிந்ததற்கு முன்பு, தங்களை ஒரு ஜன்மமென்று கருதவேயில்லை. இதில் ஓதப்படும் ஐம்பொருளறிவு தங்களுக் குண்டான பின்பு, திருச்சந்த விருத்தம் 64-ஆம் பாட்டில் திரு மழிசைப் பிரான் அருளியபடி 'அன்று நான் பிறந்திலேன்பிறந்த பின் மறந்திலேன்' என்று வேத சாஸ்திர இதிகாச புராணங் கள், ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் எல்லாவற்றாலும் போது போக்கும் போது, இம்மந்திரார்த்தத்தை யுட்கொண்டே நிர்வகிப்பார்கள்.

**வினா: வாசகமாகிய இத்திருமந்திரமே சகலத்தையும் செய்யா நிற்க, மந்திரதேவதையாகிய ஈசுவரனிடத்தில் ஆசாரி யர்கள் ஊன்றுகைக்குக் காரணமென்ன?**

**விடை:** மூ-ம். **25. வாசகத்திற் காட்டில் வாச்யத் திலே ஊன்றுகைக்கு அடி, ஈச்வரனே உபாயோ பேயமென்று நினைத்திருக்கை.**

(1) (வாசகம்=திருமந்திரம்), (வாச்யன்=ஈசுவரன்) (வாச்யம்=ஐந்தார்த்தம்)

(2) (கருமஞான பக்திகளையே மோட்சோபாயங்களாகப் பற்றி ஈசுவரனை யடைகிறவர்கள, உபாயாந்தரபரர்)

(3) (ஐசுவரியம், கைவல்யம் முதலிய இதர பலன்களை விரும்பி பகவானிடம் கேட்கிறவர்கள், உபேயாந்தரபரர்)

நம் பூருவாசாரியர்கள் உபாயாந்தரபரர், உபேயாந் தரபரர் போலல்லாமல், அடைவிக்கிறவனும் (உபாயனும்) அவனே; அடைந்தனுபவிக்கப்படுகின்றவனும் அவனே (உபேயன்) என்றிருப்பவர்களாதலால், இம்மந்திரார்த்தங்க ளில் ஊன்றி, அந்த அர்த்தங்களின்படியே செயல் முறைகள் வரை நடந்தார்கள்.

**வினா: இம்மந்திரார்த்தின் முகவுரையாக இதுவரை இவ்வள விரிவாகச் சொன்னது ஏன்?**

**விடை:** இத்திருமந்திரத்தின் வைபவத்தையும், அர்த்தங் களின் பெருமைமைகளையும் பகுத்தறிவுடைய சேதனர் அறி வார்களானால், தங்களுக்கு இது அவசியம் வேணுமென ஆசாரிய உபதேச மூலமாக இதை யுணர்ந்து உய்வார்க ளென்ற திருவுளக் கருத்தாலே 'திருமந்திரத்தினுடைய சீர்மைக் குப் போரும்படி' என்று ஆரம்பித்து, இதுவரையிலும் ஸ்வாமி பிள்ளை லோகாசாரியர் விரித்துரைத் தருளினார்.

ஸ்ரீ:

## "ஓம் நமோ நாராயணுய"

**வினு : இம் மந்திரத்திற்கு வாக்கியார்த்தம் என்ன ? விளக்குக**

விடை : இதற்கு வாக்கியார்த்தம் இரண்டு வகையில் சொல் லப்படுகிறது. அவை :

**மூ-ம் : 26. இது தன்னில் சொல்லுகிற அர்த்தம், ஸ்வரூபமும் ஸ்வரூபானு ரூபமான ப்ராப்யமும்; ஸ்வரூபமும், உபாயமும் பலமும் என்னவுமாம்.**

முதல் யோசனை : 'ஸ்வரூபமும், சொரூபானு ரூபமான பிராப்பியமும்' என்பதாம்.

இரண்டாவது யோசனை : 'சொரூபமும், உபாயமும், பலமும்' என்பதாம்.

முதல் யோசனையில், ஆத்தும சொரூபத்தைக் கருதி வாக்கியார்த்தம் அருளிச் செய்யப்படுகிறது.

இரண்டாவது யோசனையில், திருமந்திரத்திலுள்ள பதங் களின் கிரமப்படி வெளியாகிற அர்த்தங்கள் சொல்லப்படு கின்றன.

1. அதாவது, இவ்வாத்துமாவின் சேஷத்துவ பாரதந் திரியங்களிரண்டும் 'சொரூபம்' என்ற பெயரால் அழைக்கப் படுவதால், 'சொரூபமும்' என்றும், அந்த சொரூபத்திற்குத்தக்க செயல்களான கைங்கரியங்கள் இவன் அடைகிற பயனுதலால், 'சொரூபானு ரூபமான பிராப்பியமும்' என்றும் கூறப்பட்டதாம்.

(உ-ம்) கற்புடையவளுக்குக் கற்பென்பது சொரூபம்; அதற்கேற்ப அவள் கணவனுக்குச் செய்யும் பணிவிடைகளே அவளுக்குப் பெரு வாழ்வாகிய பயன்.

2. திருமந்திரத்தில் 'ஓம்'என்பது முதல் பதம்; 'இது, 'ஆத்துமா எம்பெருமானுக்கே அடிமை' என்ற சொரூபத்தை வெளியிடுகிறது.

'நம :' என்பது இரண்டாவது பதம்; இது 'ஆத்துமா பகவானுக்கே பரதந்திரன்; ஆத்துமாவுக்குச் சுதந்திரமே கிடை யாது; இவனை ரட்சிக்கும் பொறுப்பு ஈசுவரனுடையது' என்ற உபாயத்தை வெளியிடுகிறது.

'நாராயணுய' என்பது மூன்ரும் பதம் ; இது, ஆத்துமா வின் பகவத் பாரதந்திரியத்திற்குத் தக்க பலம் கைங்கரியமாத

லால், அந்தக் கைங்கரியமாகிய பலத்தைப் பற்றிச் சொல்லு கிறது.

(உ-ம்) கற்பு. (ஓம்). கற்புடைய தருமபத்தினியைக் காப் பாற்றும் பொறுப்பு கணவனுடையது (நம:). கணவனுடன் சேர்ந்து வாழ்தலாகிய இன்பம் (நாராயணாய).

ஆத்துமா, மனைவி; பரமாத்மா, கணவன். இதுதான் வேதரகசியம்.

**வினு: இந்த ஆத்துமா அடையும் பலம் எத்தகையது? விவரிக்க.**

**விடை: மூ-ம்: 27. பலமிருக்கும்படி ப்ரமேய சேக சேகரத்திலும் அர்ச்சிராதிகதியிலும் சொன் ேனும்.**

ஒருவன் பகவானுடைய காரணமில்லாக் கடைக் கண் பார்வையாகிற திருவருளுக்கு இலக்கானது முதல் சரீர சம்பந்தம் விடுகின்ற வரையில், அவனுடைய ஞான முன் னேற்றப் படிகளைப்பற்றி, சுருக்கமாகப் 'பிரமேய சேகரம்' என்ற நூலிலும், உடலைவிட்டு உயிர் பிரிந்துபோய் பிரம்மானுபவம் பெறுகிறவரையில் ஏற்படுகிற சம்பவங்களை விரிவாக 'அர்ச்சி ராதிகதி' என்ற நூலிலும் ஸ்வாமி பிள்ளை லோகாசாரியர் அரு ளிச் செய்துள்ளார். பிரமேய சேகரத்தின் கருத்து:

1. **அத்வேஷம்:** பகவத் கருணையினால் இவனுக்குப்பகவத் விஷயத்தில் முன்பிருந்த வெறுப்பு நீங்குதல்.

2. **ஆபிமுக்யம்:** பகவத் பாகவதரைத் தேடி வருதல்.

3. **'த்யாஜ்யோபாதேயஜ்ஞானம்':** சாராசார விவேக முண்டாகி, அசராங்களில் பற்று நீங்கவும், சாரங்களானவற் றைப் பற்றத் துணிவுண்டாதலுமாகிய அறிவு.

4 **'சாத்விகசம்பாஷணம்':** சத்துக்களிடத்தில் ஆத்து மார்த்தமான விஷயங்களைப் பற்றிய வார்த்தைகள் பேசுதல்.

5. **'சதாசாரிய பதாஸ்ரயணம்':** அறிவும் ஆற்றலும் மிக நன்குயிருக்கப்பெற்ற ஆசிரியனை அடைதல்.

6. **'தத்துவஞானம்':** பரத்துவ நிச்சய ஞானம் பெறு தல்.

7. **'ப்ராப்யாந்தர த்யாகம்':** பகவத் விஷயத்திற்குப் புறம் பான விஷயாதிகளில் பற்றறுதல்.

8. '**பரம ப்ராப்யத்தில் த்வரை**' உயர்வற உயர்ந்த பயனுகிய பகவத் கைங்கரியானுபவத்தில் நிறைந்த ஆசை.

9. '**ஸர்வ ஸங்கபரித்யாக பூர்வகமான ஸித்தோபாய ஸ்வீகாரம்**': உபாயாந்தர, தேவதாந்தர, மந்திராந்தர, உபேயாந்தர முதலான சகல சுயநலப் பற்றுக்களை மிக நன்ருய் விட்டு, ஈசுவரனையே தஞ்ச மெனப் பற்றுதல்.

10. '**போகபூமிக்குச் செல்ல த்வரை**': இங்கிருக்கும் நாள் பஞ்சபூதவுடல் சம்பந்தமானது. 'விண்ணுளார் பெருமானுக்கடிமை செய்வாரையும் செறும் ஐம்புலன்களாதலின், பகவதனுபவ விரோதியான இவ்வுடலைவிட்டு மீளா நெறி சென்றடைய ஆசையும் அலமாப்பும் அதே ஞாபகமும் உண்டாகி, விரைவில் பெறக் கருதி, 'கூட்டும் விதியென்று கூடுங்கொலோ' என்றும் 'கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ' என்றும் கருதும் நிலையடைதல்.

**அர்ச்சிராதி சதி:** (மீளா நெறி). இதன் சுருக்கம்:

பரமபதமடையும் முக்தாத்மா, தேகத்தை விடுகிற காலத்தில், சுழிமுனை நாடியின் வழியாக வெளிக்கிளம்பின பின்பு, அர்ச்சி, அக்னி, தினம், சுக்கிலபக்ஷம், உத்தராயணம், வருடம் முதலியவற்றிற்கு அதிகாரிகளான தேவதைகள், வாயு, சூரியன், சந்திரன், மின்னல் தெய்வம், வருணன், இந்திரன், பிரம்மா ஆகிய இவர்களுடைய உலகங்களின் வழியாகப் போகிறுன். இந்த ஆதிவாகிகர்கள, முக்தாத்மாவைக் கொண்டாடிப் பூசித்துத் தங்கள் தங்கள் பதங்களில் நின்றும் மேல் மேல் உலகங்களை அடைவிக்கிருர்கள். அவர்களில் மின்னலுக்கு அபிமானியான அமானவன் என்பான் தன்னுலகம் வந்த முக்த புருஷனை அங்கிருந்து பிரம்மப் பிராப்தியளவும் (பிரமத்தையடைகிற வரையிலும்) வழிநடத்துகிருன். மற்ற இந்திர வருணுதியர் தங்கள் தங்கள் உலகங்கள் வழியாகப் போகையில் சகாயம் செய்கிறவர்களாக மாத்திரம் அமைவார்கள். (இவ்விஷயங்களைப்பற்றி சாரீரக மீமாம்ஸை, 4. அத்தி. 3-ம் பாதத்தில தெளிவாகக காணலாம்.) பிறகுதான் விரஜையில் குளித்தல், மறு பிறவிக்குக் காரணமான சூக்குமசரீரமும் கழிதல், அமானவருடைய தொடர்பு, திவ்விய சரீரம் அடைதல், பிரம்மத்தைப் போலாதல், நித்திய சூரிகள் வந்தெதிர்கொண்டு அழைத்துச் சென்று வாழ்த்தி, வழிநடத்த வைகுந்தம் புகுதல், சித்திரமாமணி மண்டபத்தில் சகலலோக ஏகாதிபத்ய சாம்ராஜ்ய அத்விதீய சக்கரவர்த்தியாய்ச் செங்கோல் தாங்கிப் பூமகள், புவிமகள், ஆய்மகள் முதலானேரான

காச்சிமார்களுடன் ஆதிசேஷனுகிய கோப்புடைய சீரிய சிங்கா சனத்தின் மீது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாரயண பரப் பிரம்மத்திஞல் இந்த முக்தாத்மா சன்மானிக்கப்படுதல், நித்திய முக்தருடன் கூடிக் குளிருதல் முதலியனவாம்.

**விஞ: இந்த திருமந்திரத்தின் அக்ஷரக்கிரமத்தையும் பதக்கிர மத்தையும் தெரிவிகக.**

விடை: *மூ-ம்:* ***28. இதுதான்-எட்டுத் திருவக்ஷர மாய், மூன்று பதமாயிருக்கும்,***

**1. ஓம், 2. ந, 3. ம, 4. நா, 5. ரா, 6. ய, 7. ணு, 8. ய** - ஆக எழுத்துக்கள் எட்டாம்.

1. **ஓம்** என்பது முதற்பதம்;
2. **நம:** என்பது இரண்டாம் பதம்;
3. **நாராயணுய** என்பது மூன்ரும் பதம்.

**விஞ: பிரணவ மின்றியே எட்டெழுத்துக் கணக்காக இம் மந்திரத்தைச் சிலர் சொல்லுகின்றனரே அது சரியா?**

**விடை:** பிரணவத்தை யொழிய அஷ்டாக்ஷர மந்திரத்தைச் சொல்லுவது வேத சம்மதமாகாது. வேத விதிக்குப் புறம் பாகச் சொல்லப்படுவது அவைதிகமாகும். அவைதிகமான சைவமதங்கள்தான் அவ்வாறு சொல்லும்.

**விஞ: சைவாகமத்தில் ஏன் அப்படிச் சொல்லப்படுகிறது?**

**விடை:** சைவர்கள் தங்கள் பஞ்சாக்ஷரத்துக்குப்போல அஷ் டாக்ஷரத்துக்கும் பிரணவமில்லாமல் செய்ய வேண்டுமெனக் கருதிச் சைவப் புலவர்கள், 'நாராயணுய' என்ற பதத்தை நார+அயனுய எனப் பிரித்து ஆறெழுத்தாக்கி, நமப் பதத்துடன் சேர்த்து எட்டெழுத்தாகக் கணக்கீட்டுத் தலையில்லா முண்டமாக்கினர். அவர்களுடைய சிவபஞ்சாட்சரத்திற்குப் பிர ணவத்தைக்கூட்டிஞல் ஆறு எழுத்தாகிப் பாஞ்சாட்சரமெனும் பெயர் பறந்து விடுகிறது. ஆதலால், சைவர் சொல்லும் கூற்றை ஒழிக்க வேண்டியதே.

அந்த உயிரில்லா உடல்போன்ற பஞ்சாக்ஷரம் போலன்று திருவஷ்டாக்ஷர மந்திரம். வேதத்தில் இம்மந்திரத்திற்கு எழுத் துக் கணக்கைச் சொல்லுகிற இடத்தில 'ஓமித்யேகாக்ஷரம்= (ஓமென்று ஓரெழுத்து), 'நம' இதி த்வே அக்ஷரே=(ந, ம: என்று இரண்டெழுத்துக்கள்,) 'நாராயணுய இதி பஞ்சாக்ஷ ராணி=(நாராயணுய என்று ஐந்தெழுத்துக்கள்) ஆக எட் டெழுத்துக்களென்று எழுத்துக்கணக்கை வெகு தெளிவாகச்

சொல்லப்பட்டிருக்கிறது. பதங்களின் வரிசைக்கிரமத்தைப்பற்றி அதே வேதத்தில் 'ஓம்' இத் யக்ரே வ்யாஹரேத்=(ஓமென்பது முதற்பதமாயிருக்கிறது); 'நம' இதி பச்சாத்'=(அதற்கடுத்த பதம் நம வென்பது), 'நாராயணாய இதி உபரிஷ்டாத்=(அதற்கும் அடுத்தது நாராயணாய என்ற பதமாம்) என விவரித்துள்ளது. ஆதலால், பிரணவத்தைச் சேர்த்தே அஷ்டாக்ஷர மந்திரம் ஓதப்படுவதென்பதை உணர்க.

**விஞ : இந்த மூன்று பதங்களும் என்ன அர்த்தங்களை வெளியிடுகின்றன ?**

**விடை** : மூ-ம், **29. மூன்று பதமும் மூன்று அர்த்தத்தைச் சொல்லுகிறது.** மூ-ம். **30. அதாவது, சேஷத்வமும், பாரந்தரியமும், கைங்கரியமும்.**

ஆத்துமாவின் இலக்கணம் : சேஷத்துவ பாரந்தரியங்கள். அவற்றிற்கேற்ற பயன் கைங்கரியம். இதைக் கருதித்தான் முன்பு வாக்கியார்த்தம் அருளினபோது இவ்வபிப்பிராயத்தை வெளியிட்டார் என்பது இப்போது விளங்குகிறது.

**விஞ : இந்த மூன்று பதங்களில் முதற்பதத்தின் விவரம் யாது?**

**விடை** : மூ-ம். **31. இதில் முதற்பதம் ப்ரணவம்.**

இம்மந்திரத்தில் அமைந்துள்ள மூன்று பதங்களுள் முதலாவதாக பிரணவம் இருக்கிறதென்ற விளக்கம் முன்பே காட்டப்பட்டது.

**விஞ : 'ஓம்' என்ற முதல்பதத்திற்கு 'பிரணவம்' என்று ஏன் பெயராயிற்று ?**

**விடை** : 'ப்ராணாந் ஸர்வாந் பரமாத்மநீ ப்ரணாமயதீ தஸ்மா துச்யதே ப்ரணவ:' அதாவது, சகலஆத்துமாக்களும் பரமாத்மாவை வணங்குகின்றன' என்ற பொருளைப் ப்ரணவம் வெளியிடுவதால், ஆத்துமாக்கள் பகவானுக்குச் சேஷபூதர்கள் (அடியார்கள்) என்பதை 'ஓம்' ஞாபகப்படுத்துகிறது.

**விஞ : முதற்பதப் பொருள் என்ன ? அதன் மற்றக் கருத்துக்களும் யாவை ?**

**விடை** : மூ-ம். **32. இது 'அ' என்றும், 'உ' என்றும், 'ம' என்றும் மூன்று திருவக்ஷரம்.**

இந்த 'ஓம்' என்ற பிரணவ எழுத்துக்கு இரண்டு வகையில் பொருள் சொல்லவேண்டியிருக்கிறது. எப்படியெனில், இந்த சொல்லுக்கு இரண்டு நிலைகளுண்டு :

1. இந்த ஒற்றை எழுத்து மூன்றெழுத்துக்களாகப் பிரிந்து நிற்கிற நிலையொன்று. அப்போது மூன்று எழுத்துக்களும், மூன்று பதங்களாகவும் மூன்று அர்த்தங்களை வெளியிடுவதாகவும் அமைந்திருக்கும். இந்நிலையை வடநூலார் அஸம்ஹிதாகாரம் என்பர். (பிரிந்து தோற்றுவது)

2. 'ஓம்' என்று ஓரெழுத்தாய், ஒருபதமாய், ஒரு பொருளை யுணர்த்துவதாயமைந்திருக்கும். இதை ஸம்ஹிதாகாரமென்பர் (சேர்ந்திருப்பது) வடநூன் முனிவர். இவ்விரண்டு படிகளாலும், ஆத்தும சொரூபத்தை இந்தப் பிரணவம் சகல வேதசாரமாக நிச்சயித்துச் சொல்கிறது.

**வினு : இந்தப் பிரணவம் சகல வேதசாரமென்பதெவ்வாறு ?**

**விடை :** மூ-ம். **33 மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டினாற் போலே மூன்று வேதத்திலும் மூன்று அக்ஷரத்தையும் எடுத்தது.** மூ-ம். **34. ஆகையால், இது சகலவேத ஸாரம்.**

**விடை :** ருக்கு, யசுர், சாமவேதங்கள் மூன்றும் முறையே பூ: புவ: சுவ: என்கிற ஒலிகளின் (காரண சப்தங்கள் அல்லது வியாக்ருதிகளின்) விரிவுகளேயாம்; இம்மூன்று ஒலிவடிவங்களான பூ: புவ: சுவ: என்னும் காரண ஒலிகளுடன் ஈசுவரன் தன் சங்கற்பத்தையும் கூட்டி 'ஓம்' என்ற பிரணவத்தை யுண்டாக்கினுன். உதாரணம்: தயிர் நிறைந்த மூன்று தாழிகளைத் தனித்தனியாகக் கடைந்து ஒவ்வொன்றிலும் உண்டான வெண்ணெய்த் திரள்கள் மூன்றையும், ஒரு திரளாகத் திரட்டிவிட்டால், மூன்று தாழிகளின் வெண்ணெயும் அந்த ஓர் திரளில் சேர்ந்தேயிருப்பதுபோல, தனித்தனியாக ஒவ்வொரு வேதத்தின் காரண ஒலிகளை ஒன்றுபடுத்திய ஒற்றை எழுத்தே பிரணவமாதலால், 'ஓம்' சகல வேதசாரமாக விளங்குகிறது.

## அகாரார்த்தம்

**வினு: வேதசாரமான பிரணவத்தில் அமைந்துள்ள அ, உ, ம என்ற மூன்று எழுத்துக்களில் முதலெழுத்தான அகரத்தின் பொருள் யாது ?**

**விடை: மூ-ம் 35. இதில் அகாரம் ஸகல சப்தத்திற்கும் காரணமாய், நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே, ஸகல ஜகத்துக்கும் காரணமாய், ஸர்வரக்ஷகஞன எம்பெருமானைச் சொல்லுகிறது.**

வேதங்களும் அவற்றின் விரிவுரைகள் போன்ற இதிகாச புராணுதிகளாகிய யாவும் ஒலிமயமானவை. அவ்வொலிகள், நாம ரூபங்களையுடைய சகல ஜீவ ஜட சமூகங்களையும், அவற்றிற்கு இருப்பிடங்களான அகிலாண்ட கோடிகளையும் உணர்த்துகின்றன. ஆதலால், எல்லா வொலிகளும் வேதங்களில் இடம் பெறுகின்றன. அவ்வேதங்கள் பிரணவத்தில் லயமடைகின்றன. அந்தப் பிரணவம் அகாரத்தில் லயமடைகிறது. அதனுல், சகல சப்தங்களுக்கும் அகாரம் மூலகாரணமாகிறது.

ஒலிகள் பெயர்களாகின்றன. அதாவது சொற்கள் (வாசகங்கள்) ஆகின்றன; அச்சொற்களால் சொல்லப்படும் பொருள்களுக்கு வாச்சியங்களாகின்றன. வாசகங்களுக்கெல்லாம் அகரம் காரணமாவதுபோல், சகல தோற்றங்களான, தோன்ருதவையான பொருள்களுக்கும் (வாச்சியங்களுக்கும்) காரணப் பொருள் அந்த அகரத்திற்குரிய பரம் பொருளேயாம்.

மேலும், இந்த அகாரமானது நாராயண பதத்தின் சுருக்கச் சொல்லாக ஏற்பட்டிருப்பதாலும் அகரப் பொருள் அந்த நாராயணனே யாகவேண்டும். எப்படியெனில் 'நாராயணன்' என்ற சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. அவை: (1) நாரங்களுக்கு இருப்பிடமாகவுள்ளவன்; (2) நாரங்களை இடமாகவுடையவன் என்பனவாம். இந்த இரண்டு வித அர்த்தங்களை அகாரத்தின் உடல் பொருளும் உயிர்ப் பொருளும் வெளியிடுவதாலும் அகரமானது நாராயண பதத்திற்குத் தோற்றுவாயாயிருக்கும். ஆக,

1. அகரத்தின் உடல்பொருள் (புறப்பொருள்) கீழேகாட்டிய காரணங்களால், அகாரவாச்சியன் சர்வ ஜகத் காரணன் என்ருகிறது.

2. வடமொழி இலக்கண விதியின்படி, அகரத்தின் உயிர்ப் பொருளை ஆராய்ந்தால், 'அவ'=ரக்ஷணே என்று பொருள் பட்டு, அகாரவாச்சியன் 'சர்வஜகத் பரிபாலனம் செய்வோன்' என்றபொருள் கிடைக்கிறது.

ஆக; அகாரத்தின் புறப்பொருள், நாராயணன் சகல ஜகத் காரணனென்றும், அகப்பொருள் நாராயணனே சகல உலகங்களையும் காப்போன் என்றும் ஆகிறது. இதற்குச் சுருதிகளின் இசைவு மிகவுண்டு. அவற்றை எழுதப்புகின் மிகவிரியும். ஒன்றிரண்டு மாத்திரம் இங்குக் கூறப்படுகிறது.

சுருதி : 'அகாரோவை ஸர்வாவாக்' = சமஸ்த வாக்குகளும் அகாரமாயே யிருக்கும். (உ-ம்) மண்ணால் செய்யப்பட்ட பாண்டங்கள் யாவும் மண்ணேயாம் என்பதுபோல.

கீதை : 'அக்ஷரணும் அகாரோஸ்மி' = அருச்சுனா! எழுத்துக்களில் நான் அகரமாயிருக்கிறேன்.

தொல்காப்பியம் : 'மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்' என்ற சூத்திர உரையில், நச்சிஞர்க்கினியர் 'அகரம் திருமாலை உணர்த்தும் எழுத்து' என்று தெளிவாக உரைத்துள்ளார்.

திருக்குறள் : 'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே யுலகு' என்பன போன்ற பல திடமான சாஸ்திர சம்மத பலமுண்டு.

இவற்ருல், சகல காரணனும், சர்வரட்சகனும் ஆன திரு நாராயணனே அகரப் பொருளுக்குரியவன் எனப்பட்டது.

**வினு : உலகங்களைக் காப்பதென்பது எவ்வாறு?**

**விடை :** மூ-ம் **36. ரக்ஷிக்கையாவது — விரோதியைப் போக்குகையும், அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும்.**

அதாவது, ஈசுவரன் சேதனர்களைக் காத்தலென்பது, அவர்களுக்குத் துன்ப காரணங்களான வேண்டாதவற்றை விலக்குவதும், இன்பங்களான வேண்டியவற்றைக் கொடுத்தலுமேயாம். இந்த இரண்டு செய்கைளும் நிகழ்த்தப்பட்ட பொழுதுதான் 'காத்தல்' என்ற தனது தருமம் பூரணமாகும்.

**வினு : காத்தல் தொழில் எல்லாவிடத்திலும் சமமாகத்தான் நிகழுமோ? அல்லது ஏதாவது ஏற்றத் தாழவுண்டோ?**

**விடை;** மூ-ம் **37. இவையிரண்டும் சேதனர் நின்ற நின்ற அளவுக்கு ஈடாயிருக்கும்.**

அவரவர்களுடைய மனோவாக்குக் காயங்களின் அமைபபின் செயலான அறிவின் பக்குவ நிலைமைகளுக்குத் தக்கபடியாக, ஈசனுடைய காத்தல் வியவகாரமென்பது அமையும்.

**வினா :** **அஃதெப்படி ?**

**விடை :** எப்படியெனில், **ஆத்துமாக்கள்** மூவகைப்படுவர். அவர்கள்: சமுசாரிகள், முமுட்சுக்சள், முக்தநித்யர். இம் மூவகைப்பட்ட அதிகாரிகளுக்கும் வேண்டியவையும், வேண் டப்படாதவையும் வித்தியாசமாகத் தானேயிருக்கும். ஆதலின் ஈசனுடைய காப்பும் பேதப்படுமன்றோ?

**வினா : அவ்வதிகாரிகளின் வேண்டப்படாதனவும், வேண்டப் படுவனவுமானவைகளின் பேத விவரமென்ன ?**

**விடை:** மூ-ம். **38. ஸம்சாரிகளுக்கு விரோதி; ஸத்ரு பீடாதிகள் அபேக்ஷிதம் - அன்னபானாதிகள்; முமுக்ஷுக்களுக்கு விரோதி ஸம்சார ஸம்பந்தம்; அபேக்ஷிதம்-பரமபத ப்ராப்தி; முக்தர்க்கும் நித்யர்க்கும் விரோதி கைங்கர்யஹாநி; அபேக்ஷிதம்-கைங்கர்யவ்ருத்தி.**

1. இம் மூவகைப்பட்டவர்களில், தேகத்தையே ஆத்துமா வென்றிருக்கும் அஞ்ஞானிகளாகிற சமுசாரிகளுக்கு, எதிரி களால் ஏற்படும் துன்பங்களும், முக்கனல் போன்ற மூவகைப் பட்ட - (1) தன்னாலே வரும் துன்பம், (2) பிறரால் வரும் துன்பம், (3) தெய்வீகமாய் வரும் துனபம் முதலான அளவு கடந்த துன்பங்களும் வேண்டப்படாதவை.

சோறு, தண்ணீர், ஆடை ஆபரணங்கள், தனம், பொன், வாகனாதிகள், மூவகைப்பட்ட ஆசைக்குரிய கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவரிடம் உறவு- இவை முதலியன வேண்டுமவை.

2. உலக வாழ்க்கையில் சலிப்படைந்து, இவ்வளவு நாட் கள் எவற்றை நிலையென நம்பியிருந்தானோ அவ்வளவும் பொய் யென அறிந்து, தேக சம்பந்தத்தின் விளைவுகள் தீமையே யாமென நெஞ்சில் பட்டு, தேகம் நானல்ல அதற்குமேல் பகவானுக்கே அடிமைப்பட்டுப் பிரகாசிக்கும் ஆத்மா ஒன் றுண்டு என்ற ஞானம் அடைந்து, இத்துன்பங்களினின்றும் விடுதலையடைந்து பரமபத பகவதனுபவத்தையடைய ஆசை யுடைய முமுட்சுக்களுக்கு விலக்கப்பட வேண்டியது தேகத் தின் ஓட்டுறவு; கொடுக்கப்பட வேண்டியது அடியார் குழாங்க ளுடன் கூடி, பகவதனுபவத்தை நித்தியமாய் அனுபவிக்கும் வாழ்வு.

3. முக்தரைப்போல் சமுசாரத்திலிருந்து விடுபட்டவ ராகாமல் நித்தியமாய்ப் பகவானிடத்திலேயே இருந்து வாழ்கிற அநந்தன், கருடன், சேனைநாதன், சுதரிசனர், பாஞ்சசன்னியன் முதலானோரான நித்திய சூரிகளுக்கு வேண்டப்படாதவை: பகவானுக்கு இவர்களுடைய சொரூபத்திற்கு அனுகூல விருத்திகளைச் செய்யும்போது ஏற்படும் இடைஞ்சல். வேண்டியது: கைங்கர்யங்களுடைய அபிவிருத்தி.

இவ்வாறு அதிகாரிகளுக்குத் தக்கவிதமாக வேண்டாதவற்றை விலக்கி, வேண்டியவற்றைச் செய்தலாகிற காத்தல் தருமம் பேதப்பட்டிருக்கும்.

**வினா: இந்த கரும பூமியில்தான் விரோதங்களேற்படுவது இயற்கையாகும்; பரமபதத்தில் வாழுமவருக்கும் விரோதி (இடைஞ்சல்) உண்டென்று தெரிகிறதே அஃதெப்படி?**

**விடை:** இவ்விடத்திலேற்படும் இடைஞ்சல்களுக்குக் காரணம் தேகாத்மாபிமானம். அவ்விடத்திலேற்படும் இடைஞ்சலுக்குக் காரணம் அவனுடைய வடிவழகு. இங்கு, அஞ்ஞான காரியம்; அங்கு, ஞானத்தின் அதிசயம். இங்கு சப்தாதி விஷயாந்தரானுபவத்தால் பகவத் கைங்கர்யத்தை மறக்கிறான். அங்கு பரமானந்தமான பகவதனுபவத்தால் தன்னை மறக்கிறான்.

**வினா: இதை நிரூபித்துக் காட்ட உதாரணம் கூறுக.**

**விடை:** ஸ்ரீராமபிரானைத் தவிர மற்றொன்றையும் மற்றொருவரையும் அறியாதவன் பரதாழ்வான். இவனைத்தவிர இதர விஷயமறியாதவன் சத்ருக்னாழ்வான். இவன், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனாரின் ஆடவர் பெண்மையவாவும் வடிவழகு, பரதாழ்வானுக்குத்தான்செய்யும் திருப்பணிகளுக்குப் பெரிய சத்ருவாயிருப்பதாகக் கருதினான். 'பெருமாளுடைய திருமேனியை ஏறிட்டுப் பார்க்காமல் திருவடிகளிலேயே நோக்காகச் செல்' என்று சுமித்திரையாரும் இளையவருக்குப் புத்திமதி சொல்லி வனவாசத்துக்கு உடன் செல்ல அனுமதிக்கிறார். இவற்றால், நித்தியருக்கும் முக்தருக்கும் பரமபதத்தில் ஈசுவர சௌந்தரியம் அவர்கள் செய்யும் கைங்கரியங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறதென்றுணர்க. இங்கு, அவனுடைய மாயை விரோதி; அங்கு, அந்த மாயவன் மயக்கு விரோதி.

**வினா: ஈசுவரன்தான் அனைவரையும் காப்பாற்றுகிறானே? உலகில் பெற்றோர்கள் முதலானவரும், தேவதைகளும் காப்பதில்லையோ?**

**விடை:** மு-ம். **39. ஈச்வரனை யொழிந்தவர்கள் ரக்ஷகர்களல்லரென்னுமிடம் ப்ரபந்ந பரித்ராணத்ராணத்திலே சொன்னேம்.**

நித்தியமான ஆத்தும பந்துவாய், எக்காலமும், எல்லாவிடத்தும் கைவிடாமல் நம்மைக் காக்கிறவன் ஈசுவரனே யொழிய, அநித்தியமான சரீர சம்பந்திகளான பெற்ருரும், உற்ருரும், மற்ருேரும் நமக்கு உதவமாட்டார்கள். தங்கள் தங்களையே காப்பாற்றிக் கொள்ள முடியாதவர்கள் ஆகிற கீழ்ப்பட்டவரான தேவர்களும் நமக்கு ரட்சகராகமாட்டார்கள். இவ்விஷயத்தைபபற்றி 'பிரபன்ன பரித்ராணம்' என்ற நூலில் பிள்ளை லோகாசாரியர் விரிவாகத் தெளிவுபடுத்தியிருக்கிருர். அதில் கண்டுணர்க.

**வினு: விரித்துரைக்காவிடினும் சுருக்கமாக அவற்றைப்பற்றிச் சொல்லுக.**

**விடை:** அன்பிற் சிறந்தவள் **பெற்ற தாய்** அல்லவா ? அப்படியிருந்தும் பிரகலாதனைப் பெற்ற தாயாகிய கயாது விஷங்கலந்த பாலை மகனுக்குக் கொடுத்துக் கொல்ல முயற்சித்தாள்.

கைகேசி ஸ்ரீராமபிரானைக் காட்டிற்குத் துரத்தினள். உலகில் இன்னும் எத்தனையோ தாய்மார்கள் பெற்ற சிசுக்களைக் கொல்லுகிற கோரங்களைக் காண்கிருேம். ஆதலின், தாய் நமக்குக் காப்பாகமாட்டாள்.

**தகப்பன்** காப்பவனல்லன் என்பதை இரணியகசிபுவினிடத்திலும், பணக்காரரிடத்திலும் காணலாம்.

**புத்திரர்** காப்பாளராகாரென்பதைப் பிரகலாதனிடத்திலும் ருத்திரனிடத்திலும்,தற்காலம் ஒவ்வொருவீட்டிலும் காணலாம்.

**சகோதரர்** விஷயமோவெனில், வாலியிடத்திலும், இராவணன் தன் தமயனை குபேரனிடத்தில் நடந்துகொண்டதைக் கூறும் கதையிலும், பெரியோர்களான மூதாதைகள் சம்பாதித்து வைத்துப்போன சொத்துகளைப் பங்கிடும் பொழுதும் காணலாம்.

**கணவன்மார்** காப்பவரல்லர் என்பதை நளன், பாண்டவர் முதலானேரிடமும், தற்காலம் நவீன முறை விவாக தம்பதிகளிடத்திலும் மலிந்திருக்கக் காணலாம்.

**சூரிய சந்திராதியர்** தாம் நம்மைக் காக்குமவர்களென்ருலோ அவர்கள் பகவானுடைய கட்டளையை மீறி நடக்காமல்

உதயாத்தமனங்களைநடத்திக்கொண்டிருப்பவராதலாலும், ராகு கேதுக்களால் பொலிவிழந்து திரிகிறவர்களாதலாலும், இரணியன், இராவணன் முதலானோர் கையிலகப்பட்டு இழிதொழில் புரிந்தவர்களாதலாலும் ஆகமாட்டார்கள்.

**இந்திரன்** இராட்சதரால் பீடிக்கப்படுகிறவனாதலாலும், சாபங்களைப் பெற்றலைகிறவனாதலாலும், இந்திரஜித்துவினால் சிறைபட்டவனாதலாலும் பிறரைக் காக்கும் வல்லமையில்லாதவனும்.

**சிவன்** ரட்சிக்கமாட்டானோ வென்னில், தாபத்துடன் வருவார் மேலே நெருப்பை வாரிக் கொட்டுவாரைப் போலே, தழல் நிற வண்ணனாய், 'அறுத்துத்தா பொறித்துத்தா' வென்று தன்னையடைந்தவரிடம் கேட்பவனாய், வாணனைப் 'பூ வாடாமல் காற்பாற்றுகிறேன்' என்று உறுதி கூறி வரங் கொடுத்து, ஸ்ரீகண்ணன், வாணனுடைய ஆயிரம் தோள்களையும் தன் சக்கரப் படையால் அறுத்துத் தள்ளியபோது ஒன்றும் செய்ய முடியாதவனாய்ப் பார்த்துக்கொண்டேயிருந்து ஓட்டம் பிடித்தவனாயும், தன்னுடைய பிதாவென்பதையும், லோக குருவென்பதையும் பாராமல் பிரம்மாவினுடைய தலையைக் கொய்து பிரம்மகத்திப்பாபத்தால் பிரம்மாவின் மண்டையோடு கையில் ஒட்டிக் கொள்ளவே, அந்தப் பாபத்தைப் போக்கிக் கொள்ள வழி தெரியாமல்,ஊர் ஊராய்த் திரிந்து அந்தக் கபால ஓட்டிலே பிச்சை யெடுத்து அலைந்தவனாதலால், அவனும் நமக்குக் காப்பாக மாட்டான்.

**பிரமன்** மதுகைடபரிடத்திலே அகப்பட்டு மறைகளைப் பறிகொடுத்து, அழுது புலம்பினவனாதலாலும், சிவனால் தலையறுப்புண்டவனாதலாலும் பரிபாலன கர்த்தாவாகமாட்டான். ஆதலால், சருவேசுவரனான ஸ்ரீமந் நாராயணனே சர்வ ரட்சகனாவானே தவிர, மற்று யாரும் காப்புக்குரியராகமாட்டார்.

**வினா : இந்த அகாரத்தில் இன்னும் தெரியவரும் பொருள் ஏதேனும் உண்டோ?**

**விடை :** உண்டு; அதாவது அகரமாகிய முதற்பதத்தில் 'அகரப் பொருளான தனிப் பெருங் கடவுள், திருவுக்கும் திருவாகிய செல்வனாயிருத்தலை வெளி யிடுகிறதை உணரலாகும்.

**வினா : அஃதெவ்வாறு ?**

**விடை :** மூ-ம் : **40. ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதி வேண்டுகையாலே இதிலே ஸ்ரீஸம்பந்தமும் அநுஸந்தேயம்.**

அதாவது, அகாரத்தின் உடற்பொருள், ஈசுவர னுடைய உலக காரணத்தைச் சொல்லுகிறது; உயிர்ப்பொருள், இறைவனுடைய சர்வ பாலனத்தை வெளியிடுகிறது என்று முன்பு சொல்லப்பட்டதன்றே? இவ்விரண்டு அர்த்தங்களில் உயிர்ப் பொருளான உலகப் பாதுகாப்பைச் செய்யும்போது, கருணைக் குணம் முன் தோன்ற வேண்டும். கருணையில்லாத வனுக்கு மற்றவரைக் காப்பதென்பது ஏற்படாதல்லவா? கருணையின் வடிவே பிராட்டியாதலால், 'ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதி வேண்டுகை' எனப்பட்டது. ஆனல், இங்கு உயிர்ப் பொருளால் பிராட்டி சம்பந்தமுண்டென்று காட்டியிருப் பினும், உடற் பொருளாலும், அதாவது உலகங்களை ஈசன் சிருட்டிக்கும்போதும், மாயா சொரூபியாகிய பிராட்டியின் இருப்பு உண்டு. ஆகவே, ஈசுவரனுடைய சிருட்டிதசையிலும், காக்கும் போதும், அனுபவ தசையிலும் (பிரபுவையும் பிராட் டியையும் சேர்த்தே) பிராட்டியின் சம்பந்தத்தை ஒப்புக் கொண்டேயாக வேண்டுமாதலால், அகாரார்த்தத்தில் ஈசு வரன் லட்சுமிநாயகன் என்பதும் பெறப்படுகிறது. இத்துடன், அகாரத்தால், ஈசுவரனுடைய உலக காரணத்துவமும், உலக ரட்சகத்துவமும், இலக்குமி நாயகத்துவமும் தெரியலாயிற்று.

**வினு : இப்படி மூன்று தசைகளிலும் பிராட்டியின் சம்பந்தம் செல்ல வேண்டியிருக்க, உலகப் பாதுகாப்பு சமயத்தில் மட்டிலும் பிராட்டி சம்பந்தத்தை இவர் அருளியதேன்?**

**விடை :** இங்குச் சொல்லப்படுகிற பிராட்டியின் உறவு, மூவகைப்பட்ட சேதனருடைய பரிபாலன காரியத்துக்கே பிராட்டி உபயோகப்படுவது முக்கியமாதலால், 'ரக்ஷிக்கும் போது பிராட்டி சம்பந்தம்' என்று அருளிச் செய்தார்.

**வினு : ஈசுவரன் உலகத்தைக் காப்பாற்றும்போது பிராட்டி எவ்வகையில் உபயோகப்படுகிருள்? பாலனமே முக்கிய மென்பது எக்காரணத்தால்?**

**விடை :** இறைவனுடைய எல்லாப் பெருமைகளும் உலகப் பாதுகாப்பிற்கென்றே ஏற்பட்டிருக்கின்றன. அகாரத்தின் உயிர்ப்பொருளால் கிடைத்த ஈசுவரனுடைய சருவபரிபாலன காரியத்தைச் செய்வது எப்போதெனில், ஜீவர்கள் இவ னிடம் வந்து அடைகிற சமயத்தில், இந்த ஆத்துமாக்களின் பெருங் குற்றங்களைக் கண்டு, அல்லது தனது இயற்கைக் குணமாகிய சுதந்திரத்தாலே வெகுண்டு அகற்றிவிடலாமல் லவா? அவ்வாறு வந்தடைந்த சேதனரை ஈசுவரன் கைவிடா மல் காப்பாற்றுவதற்கு உதவியாக அவனுடைய இயற்கைப்

பேரருளைக் கிளப்பிவிட்டு, காரியம் அனுகூலமாகும்படி சிபாரிசுகளைச் செய்வதற்குப் பிராட்டி உதவுகிறாள். அவளுடைய புருஷகாரமில்லையென்றால், ஈசுவரன், வந்த சேதனரைக் காக்க வழியில்லை. காக்கிற கடவுள் காப்பாற்றாமல் போனால் கடவுளின் மற்றப் பெருமைகளால் நம்போன்றவர்களுக்கு என்ன பயன்? ஆதலால், காத்தல் தொழிலே கடவுளுக்கு முக்கியமானதென்பதில் தடை இல்லை.

**வினா: 'லக்ஷ்மீ சம்பந்தம்' என்னாமல், 'ஸ்ரீ' சம்பந்தமென்று பிராட்டிக்கு ஸ்ரீயென்று பெயரிட்டழைத்ததேன்?**

**விடை:** இந்த 'ஸ்ரீ' என்ற சொல்லுக்கு இரண்டுவகைகளில் பொருள் சொல்லப்படுகின்றன. எவ்வாறெனில், செய்வினையாகவும், செயப்பாட்டு வினையாகவும் பொருள்கொள்ளப்படுகிறது. அவை:

(1) 'ச்ரயத இதி ஸ்ரீ:, (2) ச்ரீயத இதி ஸ்ரீ:'

**I. செய்வினை:** 'ச்ரயத இதி ஸ்ரீ:'=அவனை நித்தியமாகச் சேவிக்கிறாள். இதனால், இவள் அவனைவிட்டுப் பிரியா நிலைமை வெளியாயிற்று.

**II. செயப்பாட்டுவினை:** 'ச்ரீயதே இதி ஸ்ரீ:'=சேதனர்களால் நித்தியமாகச் சேவிக்கப்படுகிறாள். இதனால், இவளுக்குச் சேதனர்களிடமுள்ள நித்திய சம்பந்தம் வெளியாகிறது.

ஆக, இவ்விரண்டு அர்த்தங்களால், பிராட்டிக்கு அகாரத்தில் சம்பந்தம் இருப்பதுபோல, மகரத்திலும் சம்பந்த மிருக்கிறதென்பதை வெளியிடுவதற்காகவே 'லக்ஷ்மீ' என்னாமல 'ஸ்ரீ' என்ற பெயரால் சொல்லப்பட்டாள் என்றுணருக.

**வினா: அகாரத்தில் ஸ்ரீசம்பந்தமுண்டென்பதைப்பற்றித் தக்கோர் யாரேனும் எழுதி இருக்கின்றனரா?**

**விடை:** மிச்ரர் குலத்திலே பிறந்தவரும், ஆழ்வான் சீடரும், சகல வேதங்களையும் முறையாகக் கற்றுத் தேர்ந்தவருமான ஸ்ரீ சேனாதிபதிஜீயர் என்பவர் இதைப்பற்றிச் சொல்லியுள்ளனர். என்னவென்றால்,

**ஸூ-ம். 41. அத்ர பகவத் சேநாபதி மிச்ரர் வாக்யம்:—'அவன் மார்பு விட்டுப் பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப் பிரிவது.'**

—என்றருளியுள்ளார். அதாவது, பரம்பொருளான நாராயணன் திருமார்பிலே நித்திய வாசம் பண்ணுகிறவள், அம்மார்பை விட்டு 'அகலகில்லேன் இறையும் என்றலர்மேல்

மங்கை யுறைமார்பா' என்று சடகோபனிட்ட சாஸனப்படி, பிராட்டி பெருமானை விட்டுப் பிரிதலென்ப தில்லாதது போல, அவனுக்கு வாசகமான இந்த அகாரத்திலேயும் அவளுடைய சம்பந்தம் இல்லையென்பதில்லை. நித்திய சேர்த்தி யுண்டென்பது நிச்சயம்.

**வினு : ஈசுவரனுக்குரிய சொல்லான அகாரத்திலும், ஜீவர்களைக்குறிக்கிற சொல்லான மகாரத்திலும் இவளுடைய சம்பந்தமிருக்கிற தென்பதற்கு ஒரு உதாரணம் காட்டி விளக்குக.**

விடை : சூ-ம். **42. பர்த்தாவினுடைய படுக்கையையும் பிரஜையினுடைய தொட்டிலையும் விடாதேயிருக்கும் மாதாவைப்போலே ப்ரதம சரம பதங்களை விடாதேயிருக்கும் இருப்பு.**

பிராட்டி தன்னுடைய பகவத் அநந்யார்ஹ சேஷத்வ சொரூபத்திற்கு (கற்பு என்ற தன் தருமத்திற்கிணங்க) த்தக்கபடியாக ஈசுவரனை மகிழ்விக்கும் பொருட்டு,பர்த்தாவினுடைய படுக்கையிலிருக்கும் பத்தினியைப்போலவும், தாயானவள் குழந்தையைப் போற்றும் பொருட்டு அதன் தொட்டிலைத் தாலாட்டுப் பாடி ஆட்டிக் கொண்டிருப்பது போலவும், ஈசுவரனைச் சொல்லுகிற முதற்பதமான அகாரத்தையும், தன் குழந்தைகளான சேதனர்களுக்கு வாசகமான மூன்றும் பதமான மகாரத்தையும் ஆராய்ந்து பார்த்தால், அவ்வவ் விஷயத்தில் தனக்குண்டான பத்தினியாகிற நிலைமைக்கும். தாயாகிற தன்மைக்கும் தகுந்தபடி மணவாளனை மகிழ்விக்கை, மக்களை ரட்சிக்கை என்ற தன்னிரு தன்மைகளுக்கும் பொருத்தமானவற்றை எப்போதும் உடையவளாகையாலே, அகாரத்திலும் மகாரத்திலும் 'ஸ்ரீ சம்பந்தம்' உண்டென்று சொல்லப்பட்டது. இவளுக்கு அகாரம் படுக்கை; மகாரம் தொட்டில்.

**வினு : அவனுக்கு வாசகமாகாத மகாரத்தில் இவள் தோற்றுகையைச் சொல்ல வேறு காரணமுண்டோ?**

**விடை :** உண்டு; அதென்னவெனில், சிலர் அவன் தோன்றுமிடத்தில் இவளும் தோன்றுதல் நிச்சயமாதலாலே, இவளைச் சேதன கோடியில் சேர்ந்தவளல்லவென்றும், ஈசுவர கோடியில் சேர்ந்தவளென்றும் சொல்லுகின்றனர். அந்த அபிப்பிராயத்தைக் கண்டிக்கவேதான் இவளுக்குச் சேதன கோடிகளின் சம்பந்தம் சொல்லப்பட்டது.

**வினா: அப்படியானால், அவனுக்குரிய அகாரம் இவளுக்கு வாசகமாகாவிடில், அவன் தோற்றுமிடத்தில் இவளும் தோற்றுவது எப்படி சித்திக்கும்?**

**விடை:**—எப்படி யென்றால், அகாரத்தில் ஈசுவரன் குணங்களுடன் கூடித் தோற்றுவதுபோலே, இவளும் குணங்களைப் போலக் கூடியே தோன்றுகிறாள். ஆதலால், அகாரத்தில் 'ஸ்ரீவிசிஷ்டம்' சொல்லப்பட்டது.

**வினா: பிராட்டி சேதனரில் சேர்ந்தவளா? ஈசுவரனில் சேர்ந்தவளா? எது நிச்சயம்?**

**விடை:** 'ம' என்ற ஒலியை ஆராய்ந்தால் பிராட்டி சேதன கோடியில்தான் சேர்ந்தவள் என்பது நன்கு விளங்கும். அஃதெவ்வாறெனில், **ம்**—ஜீவ வாசகம், ஆண்பால்; **மா**—லட்சுமியின் பெயர், பெண்பால். ஆக, அகாரத்தில் கல்யாண குணங்கள் எவ்வாறு ஈசுவரனை விட்டுப் பிரியாமலிருக்கின்றனவோ அதுபோல, பிராட்டியும் பிரானைவிட்டுப்பிரியாமலிருப்பதால், ஸ்ரீசம்பந்தம் சொல்லப்பட்டது. ஈசுவர சொரூபத்தில் சேர்ந்தவளாயிருப்பதால் அகார வாச்சியமும், சேதன கோடியில் சேர்ந்தவளாதலால் மகார வாச்சியமும், ஆக இரண்டு சம்பந்தமும் இவளுக்குண்டென்கைக்காக 'ப்ரதம சரம பதங்களை விடாதே யிருக்குமிருப்பு' என்று சொல்லப்பட்டது.

**வினா: மகாரத்தில் இப்போது அர்த்தபலத்தால் கிடைக்கிற பிராட்டி சம்பந்தம், சப்தமாகவே எங்குக் கிடைக்கிறது?**

**விடை:** மகாரத்தின் விவரணமான 'நார' சப்தார்த்தத்தில் 'பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்கள்' என்று சப்தமாகவே சொல்லப்படுகிறபடியால், மகாரத்தில் ஸ்ரீ சம்பந்தம் கிடைப்பதுடன், பிராட்டி சேதனரில் சேர்ந்தவளாகிறாள் என்பதும் நிச்சயம்.

**வினா: அகார மகாரங்களில் பிராட்டிக்குச் சம்பந்தமுண்டென்பதை நிருபிக்க எடுத்துக்காட்டு உண்டோ?**

**விடை;** மூ-ம். ***43. ஸ்ரீநந்தகோபரையும் க்ருஷ்ணனையும் விடாத யசோதைப் பிராட்டியைப்போலே.***

நந்த கோபருக்கும் கண்ணனுக்கும் மத்தியில் யசோதைப் பிராட்டியிருந்த இருப்பை, ஸ்ரீ ஆண்டாள் தன் திருப்பாவையில் (17-ம் பாட்டு) 'அம்பரமே தண்ணீரே' என்றதில் வெளியிட்டிருப்பதைக் காணலாம். இவ்வுவமையினால்

பிராட்டி உகாரத்திற்குரிய பொருளாய், அகாரத்திற்கும் மகாரத்திற்கும் மத்தியில் இருக்கிருள் என்று தோன்றினுலும், இவ்விடத்திற்கு, அகார மகாரங்களான இரண்டு பதங் களையும் பற்றிக்கொண்டு இருக்கிருளென்ற பொருளே மிகவும் பொருத்தமுடையதாகும்.

**வினு : இந்த அகாரத்தில் (நான்காம் வேற்றுமைஉருபு மறைவு பட்டிருப்பதால்) அகார வாச்சியனுக்கு இந்த ஆத்துமா அடிமை யென்றிருக்க, பிராட்டிக்கும் இவன் அடிமை என்பது எவ்வாறு பொருந்தும்?**

விடை : *மூ-ம்.* **44. *ஒருவனடிமை கொள்ளும்போது க்ருஹிணிக்கென்றன்றே ஆவணவோலை எழுது வது; ஆகிலும், பணிசெய்வது க்ருஹிணிக்கிறே. அதுபோலே நாம் பிராட்டிக்கு அடிமையாயிருக் கும்படி.***

அதாவது, உலகத்தில் ஒருவன் அடிமைகளைத் தனக்காக் கிக்கொள்ளும்போது, தன் பேருக்குத்தான் அடிமைச் சீட்டு என்கிற உடன்படிக்கைப் பத்திரத்தை எழுதிக் கொள்ளுவானேயொழிய, தன்னுடைய 'மனைவிக்கும் இவர் அடிமை' என்று எழுதிக்கொள்ளும் வழக்கமில்லை. ஆயினும் இந்த அடிமைகள், அடிமைத் தொழில்களைச் செய்வது எஜமானிடத்தில் அவ்வளவில்லை; அவ்வீட்டுக்குத் தலைவி யான தன்னை எழுதிக்கொண்ட எஜமானுடைய மனைவி யிடத்தில் தான் பணிசெய்யக் காண்கிறோம். 'பதிக்கு உரிமை யானதெல்லாம் பத்தினிக்கும் உரிமையாமன்றோ' என்கிற பதி-பத்தினி நியாயத்தாலே, அ கா ர த் தி ல், 'ஆத்து மாக்கள் ஈசுவரனுக்கு •உரியவர்கள்' என்ற பொருள் கிடைத்தபோதே, அவ்வகராத்தின் அர்த்தபலத்தால் கிடைத்த 'பெரிய பிராட்டிக்கும் நாம் அடிமைகள்' என்ற உரிமை கிடைக்கிறது.

**வினு : எக்காரணத்தாலும் அவனும் அவளும் பிரிந்திருத்த லென்பதே யில்லையோ ?**

விடை: *மூ-ம்..* **45. *ஆகப்பிரித்து நிலையில்லை.***

மேலே சொன்ன பல காரணங்களால் ஈசுவரனுக்கும் பிராட்டிக்கும் ஒரு சிறிதும் பிரிந்திருத்தலென்பதே கிடையாது.

**வினா: அகாரார்த்தத்தில் கிடைக்கிற 'பாகவதருக்கு அடிமை நாம்' என்ற பாகவத சேஷத்துவத்திற்கும் பிராட்டி சேஷத்துவத்திற்கும் வேறுபாடு உண்டோ?**

**விடை:** *உண்டு. பிராட்டிக்கு நாம் அடிமை என்றது போல, பாகவதருக்கும் நாம் அடிமை என்று அர்த்த பலத்தாலே ஏற்பட்டாலும், பிராட்டிக்கு 'விஷ்ணு பத்னீ' என்று அவனுக்குப் பாரியை என்கிற சம்பந்த (பதவி) ஏற்றமிருப்பதால், பிராட்டிக்கு நாம் அடிமை யென்பதற்கும் பாகவதருக்கு ஆட்பட்டிருப்பதற்கும் வித்தியாசம் உண்டு.*

**வினா: 'விஷ்ணுபத்னீ' என்பதால் மாத்திரம்தான் அவள் எஜமானி (சேஷி)யாகிறாளா?**

**விடை:** *இல்லை ஜீவகோடிகளுக்கு மாதாவென்று ஏற்படுவதாலும் பிராட்டி சேஷியாகிறாள். ஆக, பிராட்டி பத்தினீ யெனப்படுவதாலும், தாய் என்றேற்படுவதாலும் இருவகையிலும் சேஷியாகிறாள்.*

**வினா: இவ்வாறு இருவிதங்களாலும் பிராட்டிக்குத் தலைமை (தலைவியாயிருத்தல்) கிடைத்திருக்க, விஷ்ணுபத்தினீ என்பதால் மட்டிலும் தலைவியாயிருத்தலைச் சொல்ல வேண்டிய காரணமென்ன?**

**விடை:** *உலகில் சதிபதிகள் இருவருக்கும் சகல தருமங்களிலும் சம உரிமை யிருப்பினும், குடும்பக் கடமைகளைச் செய்ய ஏற்படும்போது, பதியின் அனுமதியின்படியேதான் பாரியை நடந்து கொள்ள வேண்டுமாதலால், இவ்விருவரில் கணவன் (தலைவன்) முதன்மை பெற்றவனாகிறான். மனைவி (தலைவி) முதன்மை பெறுவதில்லை. ஆகையால், ஒரு வீட்டிற்குப் பதி முக்கியனாக இருக்கிறான். அது போல, ஈசுவரகாரியமான உலகப் பாதுகாப்பிலும், மோட்சோபாயத்திலும் பிராட்டிக்குச் சுதந்திரமிருப்பதாகச் சொல்ல முடியாது. அக்காரியங்களுக்குத் தலைவனான ஈசுவரனே பிரதானன். ஏனெனில், இவள் ஈசுவரனைக் கொண்டு சேதன காரியத்தைச் செய்து வைக்கிறாள். மேலும் அவனுக்குப் பத்தினி என்கிற சம்பந்தத்தால் நமக்குத் தாய் ஆகிறாளாதலின், 'விஷ்ணுபத்னீ' என்ற பதவியால் பிராட்டிக்குச் சேஷித்வமுண்டென்பதில் குறைவில்லை,*

**வினா: இவ்விருவரின் பிரிக்க முடியாத நிலைமைக்கு ஒரு உதாரணம் காட்டி விளக்குக.**

**விடை:** *ஸூ-ம்.* **46.** ***ப்ரபையையும், ப்ரபாவானையும், புஷ்பத்தையும் மணத்தையும் போலே.***

தருமம் ஒளி; தருமி சூரியன்; தருமமாகிய ஒளிக்கும் தருமியாகிய சூரியனுக்கும் பிரிவு இல்லை. மலரின் தருமமான மணத்திற்கும், தருமியான மலருக்கும் பிரிவினை இல்லை. இவற்றைப் போல, தரும தருமிகளைப் பிரிக்கமுடியாது. எனவே, பிராட்டிக்கும் பிரானுக்கும் பிரிந்திருத்தலில்லை.

**வினு: இவ்விருவருமான சேர்த்தி நமக்குக் குறிக்கோள் தானே?**

விடை: **ஸூ-ம். 47. ஆக, இச்சேர்த்தி உத்தேச்யமாய் விட்டது.**

அதாவது நமக்குப் புருஷார்த்தமாய் விட்டது.

**வினு: இவ்விருவருமான சேர்த்தியைப் பெருவாழ்வாகக் கருதாவிடில் என்ன குலைறவு ஏற்படும்?**

விடை: பெருமானைப் பேணுமல் பிராட்டியை மாத்திரம் பிரித்து விரும்பின இராவணன் தண்டிக்கப்பட்டு இறந்தான். பிராட்டியை விரும்பாமல் பெருமானைத் தனியாகப் பிரித்து ஆசைப்பட்ட சூர்ப்பனகை மானபங்கமடைந்தாள். ஆனுல், பிராட்டிக்குத் தன் மகள் திரிசடையை உதவி, யாதொரு தீங்கும் ஏற்படாதபடி நோக்கி, பிராட்டியின் அருள் ஆசிகள் பெற்று, பெருமாளை வந்து சரண்புகுந்த விபீஷணுழ்வானைப் போலே, இருவரையும் சேர்த்து அருள் பெற்ற போதன்றே வாழலாகும்!

**வினு: அகாரத்தில் தொனிக்கும் பொருள் இனியும் ஏதேனும் உண்டோ?**

விடை: உண்டு. அதுவே உயிர்நாடி போன்றதாகும்.

**வினு: அச் சிறந்த பொருளைத் தெரிவிக்க.**

விடை: **ஸூ-ம். 48. இதிலே, சதுர்த்தி ஏறிக்கழியும்.**

இந்த அகாரத்தில் நான்காம் வேற்றுமை உருபு 'கு' என்ற பொருட்டுப் பொருள், "தாத்வர்த்யே சதுர்த்தீ வக்தவ்யா" என்கிற சூத்திரத்தால் தோன்றி, 'ஸுபாம் ஸுலுக்' என்கிற வட மொழி இலக்கணச் சூத்திரத்தால் மறைந்திருக்கிறது.

அதாவது, இந்த அகாரத்தின் உயிர்ப்பொருளால் ('அவ' ரக்ஷணே என்ற தாதுவினுல் பெறப்பட்ட) ஈசுவரனுடைய சருவ ரட்சகத்துவத்தில், இந்த நான்காம் வேற்றுமையுருபு அர்த்தபலத்தால் கிடைக்கிறது. சப்தமாகக் கிடைப்பதில்லையாதலால், சூத்திரப்பிரமாணங்களைக் கொண்டு தொக்கியிருப்பதாகக் கொள்ளவேண்டும். இதற்கு விவரமெவ்வாறெனில்

ஒருவன் காப்பவனுனல், அவனுல் காக்கப்படுமவை சிலவுண்டென ஏற்படுகின்றது. ஆதலால், காக்கப்படும் பொருள்கள் 'யார்பொருட்டு இருக்கின்றன' என்ற கேள்வி பிறந்தால் 'காக்கிறவன் பொருட்டு இருக்கின்றன' என்ற பதில் கிடைக்கிறபடியால், காக்கிற, காக்கப்படுகிற வஸ்துக்களிரண்டையும் இந்த நான்காம் வேற்றுமையுருபு பிணைக்கிறதென்றுணரவேண்டும். அதனுல் சதுர்த்தி தோன்றி மறைந்ததென்றது. உதாரணமாக, பால், சர்க்கரை என்று இரண்டுபொருள்களிருக்குமேயானுல் இவ்விரண்டையும் சம்பந்தப்படுத்துவதற்கு வேற்றுமை உருபு வேண்டும். 'பாலின் பொருட்டுச் சர்க்கரை' என்றபோது இரண்டின் பிணைப்பும் பொருள்படுகிறது. அதுபோலத்தான் 'தலைவன் பொருட்டு அடிமைகள்' என்ற அர்த்தம் அகாரத்தில் தொக்கியிருக்கிறது,

**வினு: நான்காம் வேற்றுமைதான் சொல்லவேண்டுமோ? மற்ற வேற்றுமை உருபுகள் தொக்கியிருக்கின்றன வென்னலாகாதோ ?**

**விடை:** மூ-ம். ***49. 'சதுர்த்தியேறினபடி யென்?' என்னில்,*** மூ-ம். ***50. நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே.***

ஏனெனில், அகாரத்திற்கு விரிவான நார்ாயணபதத்தில் 'ஆய' என்ற நான்காம் வேற்றுமையுருபு வெளிப்படையாகக் காணப்படுகிறபடியால், அந்த நாராயண பதத்தின் சுருக்கமான அகாரத்திலும் நான்காம் வேற்றுமை யுருபுதான் மறைந்திருப்பதாகச் சொல்லவேண்டும். மற்ற வேற்றுமைகளைப் புகுத்தினுல் சுருக்கவிரிவு என்ற முறைக்குச் சேராது.

மேலும் ஈசுவரன், சேதனர் என்று மட்டிலும் கொண்டால் இருவருக்குமுள்ள சம்பந்த விவரம் விளங்காது. ஆனுல், நான்காம் வேற்றுமையுருபாகிய 'கு' என்பதை ஈசுவரன் என்ற பெயரோடு சேர்த்து 'ஈசுவரனுக்குச் சேதனர்' என்று பார்த்தால், அகாரப்பொருளாகிய இறைவனுடைய பயனுக்காக இந்தச் சேதனர்களிருக்கின்றனர் என்ற பொருள் தெளிவாக விளங்குகின்றது.

**வினு: இந்த நான்காம் வேற்றுமை யுருபினுல் என்ன பொருள் கிடைக்கிறது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**விடை: மூ-ம். 51. இத்தால் ஈச்வரனுக்கு சேஷமென்கிறது.**

விடை: அகாரத்தின் அகப்பொருளாகிய உயிர்ப்பொருளால்வந்தது நான்கனுருபாகையாலே, ஈசுவரனுக்கு ஆத்துமாக்கள் உயிருக்குடல்போல அவனுடைய சுவாதீனத்திலிருக்கஇசைந்திருத்தல் என்னும் பொருள் கிடைக்கிறது. சந்தனம், பூசிக்கொள்ளுகிறவனுக்கும், மலர், சூடிக்கொள்ளுகிறவனுக்கும், தாம்பூலம், தின்று சுவைக்கின்றவனுக்கும் ஏற்பட்டிருக்கின்றனவேயன்றி தமக்கொருநன்மையுமில்லை; அதுபோல இவ்வாத்துமாக்கள் ஈசனுக்குரியவராய், அவனுடைய இஷ்டத்திற்கிசைந்தவராய், தங்கள் சொந்தமென்பதொன்றின்றியே அவன் அதீனராயிருத்தலாம்.

**வினா: இதுதானா பேரின்பம்? விபரீதமாகவன்றோ இருக்கிறது? துக்கம்தொலைந்ததைப் பற்றிச் சொல்லுகிற இந்த இடத்தில் துக்கரூபமான அடிமைத்தனத்தையா சொல்லுவது?**

**விடை: மூ-ம். 52. 'சேஷத்துவம் துக்க ரூபமாகவன்றோ நாட்டில் காண்கிறது' என்னில்,**

**மூ-ம். 53. அந்த நியமமில்லை; உகந்த விஷயத்துக்குச் சேஷமாயிருக்குமிருப்பு சுகமாகக் காண்கையாலே.**

ஆசை என்பது மனவுணர்ச்சியின் நெகிழ்ச்சியேயாம். இது, இருவகைப்படும். ஒன்று சரீர அபிமானத்தா லேற்படும் தாமசகுணத்தின் காரியமான அஞ்ஞான ரூபமான ஆசை. இது காமம் எனப்படும். மற்றொன்று இறைவனுடைய உயர்வற உயர்ந்த மங்களகரமான குணங்களையறிந்து, அந்த ஞானத்தாலேற்படும் சொரூபானுரூபமான ஆசை. இது பக்தி எனப்படும். அறியாமையின் ஆசையால் ஏற்படுவது துக்கமாம். அறிவான ஆசையாகிய பக்தியால் ஏற்படுவது இன்பமேயாம். ஒருவன் ஒருவிஷயத்தில் ஆசைவைத்தான் என்றால், அவன் அவ்விஷயத்திற்கு அடிமையாகிவிட்டான் என்பதுதான் அர்த்தம். அதாவது சேஷப்பட்டான் என்பதே. உலக விஷயங்களில் ஆசை வைப்பது பந்தமாகும்.

பகவத் விஷயத்தில் ஆசை வைப்பது பந்த விடுதலையாகும். ஆசைப்பட்ட பகவத் விஷயத்தை அனுபவிப்பதே ஆசைப்பட்டவனுக்குச் சுகமாகும். ஆக, சொரூப ஞானத்தால் வந்த பகவத் சேஷத்வம் பேரின்பமயமாகும் என்பதில் யாதொரு தடையுமில்லை.

**வினு: இவனுக்கு ஞானகாரியமான பகவத் சேஷத்வம் எப்படித் தலையெடுத்தது?**

**விடை:** *மூ-ம்:* ***54 அகாரத்தில் கல்யாண குணங்களைச் சொல்லுகைமாலே இந்த சேஷத்வமும் குணத்தாலே வந்தது.***

*ஆத்துமாக்கள் செய்திருக்கும் எல்லையில்லாத குற்றக் குவியல்களை யெல்லாம், ஈசுவரன் எண்ணுமல் அவர்களை மன்னித்து, காப்பதற்கு உபயோகமான வாத்ஸல்யாதி கலியாண குணங்கள் அவனிடம் அளவற்றுப் பிரகாசமாயிருக்கின்ற பெருமையையும், இறைவனுடைய இறைமைக் குணங்களாகிற உலககாரணுதி ஒப்புயர்வற்ற அதிசய குணங்களையும் இந்தச் சேதனன் கண்டு, அவன் பெருமைகளுக்குச் தோற்று அகாரப் பொருளாகிய பரனுக்கு அடிமையாகிறன்.*

**வினு: இது ஒரு விதத்தில் சரியாயினும், ஒரு விதத்திற்குச் சரியாயில்லை. ஒரு மனைவியானவள் தன் கணவன் குணவானுய் அழகுடையவனு யிருப்பதால் தான் கற்புடையவளா யிருப்பாளோ? அவன் குணக் கேடனுய், குரூபியாய் நோயாளியா யிருப்பின் அவள் கற்புக்குச் சந்தேகந்தானே? அதுபோல, ஈசனுடைய குணுதிசயங்கட்குத் தோற்றுத்தான் ஆத்துமா அடிமையா?**

**விடை:** *இல்லையில்லை.*

*மூ-ம்:* ***55 சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்.***

*உகந்த விஷயமாகிய ஈசுவரனிடத்தில் கல்யாண குணங்கள் உண்டென்பதைக் காட்டுவதற்கு உலக உபமானமாக 'சேஷத்வமும் குணத்தாலே வந்தது' என்று சொன்னதேயொழிய, ஆத்துமாவின் இயற்கை நிலைமையைப்பற்றிச் சொல்லவில்லை. ஆத்துமாவின் சொரூபத்தை நிரூபித்தால், பந்த நிலைமையிலும், விடுதலையடைந்த பின்னுன நிலைமையிலும், பல திடமான சுருதிகளின் சொற்படி சகல ஆத்துமாக்களும் பரமாத்துமாவுக்கே உரிமைபட்டவராயிருக்கின்றனர். உலகத்தில் மாதா பிதாக்களுக்குப் பணிவிடை செய்வதைக் குண காரணமாகக் கொள்ளுவதைக் காட்டிலும், தன் கடமையெனவும் கடமையைச் செய்வதே சுகரூபமான தென்றும் புத்திரன் கருதுவதுபோல, ஆத்துமாவுக்கு ஆத்துமாவான ஈசுவரனுக்குத்தான் பாத்தியப்பட்டிருப்பதுச் சரீர சம்பந்தத்தாலல்*

லாத ஆத்துமாவுக்குரிய சுகரூபமாயிருக்கும். இதற்கு நிரு பாதிகமாய்ச் சுகரூபமாயிருக்கும் என்று சொல்லுவார்கள்.

**உபாதிகமாவது :** ஒரு தருமியினிடத்தில் ஒரு உபாதியி ஞல் உண்டாகும் தருமம். அது வந்தேறி. இயற்கை யல்ல. (உ-ம்) உஷ்ணமான பாத்திர சம்பந்தத்தால் தண்ணீருக்கு உண்டான வெப்பம்போல.

இது அப்படியல்ல, நிருபாதிக மாகையாலே. ஆத்துமா வின் இயற்கையான தருமம் சேஷத்துவமாம். மூவகைப்பட்ட பத்த, முக்த, நித்தியரான ஆத்தும வருக்கத்திற்கும் பகவத் சேஷத்துவமே சொரூபமென்பதில் யாதொரு தடையுமில்லை.

**வினு 'சேஷத்துவமே' என்று தேற்றேகாரத்தால் சொல்லப் பட்டதேன்?**

**விடை:** மூ-ம். **56. சேஷத்வமில்லாதபோது ஸ்வ ரூபமில்லை.**

ஆத்துமாவுக்குப் பகவத் சேஷத்துவ ஞானம் இல்லாமற் போனுல், சுதந்திரம் தலையெடுத்து, 'நான்' 'எனது' என்ற அகப்பற்றுப் புறப்பற்றுக்கள் நடையாடும். அதனுல் ஞானுநந்தத் துவமாகிற ஆத்துமாவின் சொரூபம் அழிந்துபோகும். எங் ஙனமெனில், மனைவி தன் நிறை குணங்கள், அழகு, கல்வியறிவு, செல்வம், ஆகிய எல்லாவற்றையும் தன் கணவன் மகிழ்ச்சிக்கு உபயோகிக்காமல் தன் சுயநலத்திற்காகவோ, பிற ருக்காகவோ கருதுவாளாயின் அவளுடைய 'கற்பு' என்கிற சொரூபமும் அழிந்ததாக எண்ணப்படுவது போலாகும். ஆத்து மாவின் பகவத சேஷத்துவ ஞானம் கெடுகிறதாகையால், அதைத் தவிர்க்கவேதான் 'சேஷத்வமே' என்று தேற்றே காரம் உபயோகிக்கப்பட்டது.

**வினு : ஆத்துமாபகார மென்ருல் என்ன?**

**விடை :** மூ-ம். **57. ஆத்துமாபகாரமாவது - ஸ்வ தந்தரமென்கிற நினைவு; ஸ்வதந்த்ரமாம்போது இல்லையாய்விடும்.**

இறைவனுடைய வஸ்துவான ஆத்துமாவை எனதென்று நினைத்தாலாகிய எண்ணம் எல்லா பாவங்களுக்கும் முக்கிய மூலகாரணமாகும். அதாவது ஈசுவரனுக்கு ஆத்தும விஷயத் திலுள்ள பாத்தியத்தை (உரிமையை) அபகரிக்கையாம். பக வானுக்கே உரிமையான ஆத்துமவஸ்துவைத் 'தனக்குத்தான் உரிமையாகும்' என்று நினைக்கை. உண்மை நன்ஞானம்

பாதிக்கப்பட்டதாலே பகவானுடைய உடைமையைத் தன்னுடைமையென்று கருதும் (அந்யதாக்ஞானம்-ஒன்றை மற்றொன்ருகக் கருதுதல்) அறியாமை ஏற்படுவதால், ஞானத்தையும், ஞானத்திஞல் அனுபவிக்கப்படும் ஆநந்தத்தையும் இழந்து விடுகிறேம். ஆகையால், ஆத்துமாவின் அசாதாரண தருமமான தன் சொரூபமில்லே.

**விஞ: ஆக, இதுவரையில் அகாரத்தில் நமக்குத் தெரியவந்த அர்த்தங்கள் யாவை?**

**விடை:** 1. அகார்த்தின் உடற்பொருளால் இறைவனுடைய சர்வ காரணத்துவமும்,

2. 'அவ' ரக்ஷணே என்கிற உயிர்ப் பொருளால் ஈசனுடைய காத்தல் தருமமும்,

3. காத்தலால் இறைவனின் ஸ்ரீயப்பதித்துவமும், அதஞல் கல்யாண குணங்களேயுடையனென்பதும்,

4. மறைந்த நான்கனுருபால் ஆத்துமாக்கள் பகவானுக்கு அடிமைகள் என்ற சேஷத்துவ சொரூபமும் சொல்லி, அதஞல் இவர்களுடைய அடிமைகளேக் கொள்ளுமவன் சேஷியாகிறபடியால் அகாரவாச்சியன் சர்வசேஷி என்று அவனுடைய ஒப்புயர்வற்ற தலேமையும், அகாரத்தில் தெரிய வந்த அர்த்தங்களாம்.

## உகாரார்த்தம்

**விஞ: பிரணவத்தில் இரண்டாவதும் நடுவெழுத்துமான உகாரத்தின் பொருள் என்ன?**

**விடை:** இந்த உகரமானது, முதல் பதமாகிய ஓம் என்றதில் 'ஓ' என்று தொடங்கி 'ம்' என்று முடிகிறது. அந்த 'ஓ' என்ற எழுத்து அகரமும் உகரமும் சேர்ந்து ஓ என்ருகிய கூட்டெழுத்து. இவ்விரண்டும் உயிரெழுத்துக்கள். முடிகிற 'ம்' என்பது மெய்யெழுத்து அகரமும் உகரமும் ஒரு சேர்க்கை. மூன்ருமெழுத்து மகரம் தனியெழுத்து. அகரத்துடன் உகரம் சேர்ந்து வருகிற இட அமைப்பை ஒட்டி 'உ' என்ற எழுத்து; தேற்றேகாரமாக மாறுதலடைகிறது. அப்போது, முதலிரண்டு எழுத்துக்களின் பொருளமைப்பை யனுசரித்துப் பார்த்தால்,

அ+ஆய+உ=ஏ என்ருகிறது. (அதாவது, அ=ஈசுவரன்; ஆய=கு)ஈசுவரனுக்கு; உ=ஏ, ஈசுவரனுக்கே; ம=சேதனர். ஆக, அகரப் பொருளான திருமாலுக்கே சேதனர்-சேஷபூதர் ஆகின்றனர். அதஞல்தான்,

**மூ-ம். 58. ஸ்தானப்ரமாணத்தாலே உகாரம் அவதாரணார்த்தம்**—என்று பிள்ளைலோகாசாரியார் அருளிச் செய்கிறார்.

**வினு: இதனால் நமக்குத் தெளிவாகிற பொருள் யாது?**

**விடை: மூ-ம். 59. இத்தால் பிறர்க்கு சேஷமன்றென்கிறது.**

தேற்றேகாரம் உபயோகிக்கப்படுகிற இடங்கள் இரு வகைப்பட்டிருக்கும். அவற்றில் ஒன்று, பிறவற்றின் உறவை உண்டுபண்ணுகிறது. மற்றொன்று பிறவற்றின் ஒட்டுறவைக் கழிக்கிறது. இவ்விருவகைகளுக்கும் உதாரணம்:

(1) 'இராமன் வில்லாளியே' இந்த வாக்கியத்தில் வில்லாளி+ஏ=வில்லாளியே என்று வந்திருக்கிறது. இந்த ஏகாரத்தால், இராமனைப் போன்ற வில்லாளிகள் பலருண்டு. அவர்களில் இராமனும் ஒருவனாகிறான் என்று பிறரையும் இராமனையும் இது சேர்த்து வைக்கிறது.

(2) 'இராமனே வில்லாளி' என்ற வாக்கியத்தில் தேற்றேகாரமானது 'இராமன்+ஏ' என்று சேர்க்கப்பட்டிருக்கிறதைக் காண்க. இதன் கருத்து யாதெனில், இராமன் ஒருவனே வில்லாளியாகிறான்; மற்றொருவருமில்லை யென்று, பிறருடைய சேர்க்கையைத் தேற்றேகாரம் கழிக்கிறது.

இந்த இரண்டு வகைப்பட்ட தேற்றேகாரங்களில் இரண்டாவதில் 'இராமனே' என்ற பிரயோகம் போல அகாரத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற உகாரமானது, அகார வாச்சியனுக்கே மகாரவாச்சியனான ஆத்துமா அடியான்; தனக்கும் பிறருக்கும் இவன் அடியவனல்ல வென்று பிறவற்றின் சம்பந்தத்தைக் கழிக்கிறது. அவ்வாறு கழிக்கப்பட்ட போதுதான், ஈசுவரனுக்கே இவ்வாத்துமா உரியவன் என்கிற 'பகவதநந்யார்ஹ சேஷத்துவம்' கிடைக்கிறது.

**வினு: அகாரத்தில் மறைந்துள்ள நான்கனுருபாலே பகவத் சேஷத்துவம் கிடைத்திருக்கும் போது அந்யசேஷத்துவம் எப்படி வந்து புகும்? புகின் நீங்குவதெப்படி?**

**விடை:** உலகவழக்கில் ஒருவனுக்குப்பாத்தியப்பட்ட வீடு,வயல் புத்திரர், அடிமைகள் முதலானவை பிறருக்குப் பாத்தியப்படவும் காண்கிறோமென்றோ? அதுபோலே, ஈசுவரனுக்கு இந்த ஆத்துமா அடிமையென்பதும் மாறி, தனக்கும் பிறருக்கும்

அடிமையென்றும் ஆகிவிடக்கூடும். ஆனல். இந்த உகாரமாகிய தேற்றேகாரம் அகாரத்துடன் சேருவதால், ஈசுவரனுக் கடிமையோ, பிறருக்கடிமையோ என்ற சந்தேகத்தை நீக்கி ஈசுவரனுக்கே ஆத்துமா அடிமையேயொழியப் பிறருக்கில்லை யென்று சப்தமாக அந்நியருறவைக் கழித்துவிடுகிறது.

**வினு : இவ்வுகாரத்துக்கு இன்னும் வேறுபொருள் ஏதேனு முண்டோ ? அஃதென்ன ?**

விடை: *மூ—ம்.* **60. பெரிய பிராட்டியாருக்குச் சேஷ மென்கிறதென்றுஞ் சொல்லுவார்கள்.**

இதுவரை உகாரம் தேற்றேகாரமாக வைத்துப் பொருள் சொல்லப்பட்கிது. இனி, பாஞ்சராத்திரம் அல்லது பகவத் சாஸ்திரத்திலும், இராமாயண உரைகளிலும் இந்த பிரண வத்திலுள்ள நடு எழுத்தாகிய உகாரமானது 'லக்ஷ்மி' வாசக மாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வகையில், அகாரப் பொருளான இறைவனுக்கும், உகாரப்பொருளாகிய இறைவி இலக்குமிக்கும், மகரப்பொருளாகிய ஆத்துமா அகாரத்தில் மறைந்த நான்கனுருபின்படி அடிமை என்று, இதைப் பிரணவப் பொருளாகவும் கொள்ளலாம்.

**வினு - இவ்விருவகைப்பட்ட அர்த்தங்களில் எதை முக்கிய மாகக் கொள்ளவேண்டும் ? ஏன் ?**

விடை. *மூ-ம்.* **61. அதிலும் அந்நிய சேஷத்வம கழி கையே ப்ரதானம்.**

உகாரத்துக்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லப்பட்டன. அவை :

1. தேற்றேகாரப் பொருள், 2. லட்சுமி வாசகமாதல், இவ்விரண்டனுள் 'லட்சுமிக்கு வாசகமாக உகாரத்தைக் கொள்ளுவதைக் காட்டிலும், ஏகாரப்பொருளான அந்நிய ருடைய கூட்டுறவு கழிக்கப்படுகிற அர்த்தமே முக்கியமானது. ஏனெனில்,

1. அகாரத்தில் நான்கனுருபினல் கிடைத்த பகவானுக் கடிமையென்ற பதவிக்கு விரோதியான சுதந்திர சுய காரிய உணர்ச்சி கழிக்கப்படுகிறபடியாலும்,

2. உகாரம், ஏகாரமாகமாறி அந்நியருக் கடிமையென் பது கழிக்கப்படுகிறபடியாலும்,

3. உத்தமசாஸ்திரக் கோட்பாடுகளுக்கு இது ஒத்திருக் கிறபடியாலும்,

4. இனிமேல் சொல்லப் போகிற நம, நாராயண பதங்களின் அர்த்தங்களுக்குப் பொருத்தமாயிருக்கிறபடியாலும்,

உகாரத்தை லட்சுமி வாசகமாகக் கொள்ளுவதைக் காட்டிலும், அந்யசேஷத்துவ நிவிருத்தியைத் தெரிவிக்கிற தேற்றேகாரப் பொருளாகக் கொள்ளுவதே சிறந்ததாகும்.

**வினு: உகாரத்தைப் பிராட்டிக்கு வாசகமாகக் கொள்ளுவதில் ஏற்படும் குறைவு யாது?**

**விடை:** 1. அகாரத்தில் ஏற்கனவே 'ஸ்ரீ சம்பந்தம்' சொல்லப்பட்டிருப்பதால், அகாரவாச்சியனை நாராயணனுக்கு அடிமை இவ்வாத்துமா வென்றபோதே 'பதிபத்னி' நியாயத்தால், அவளுக்கும் அடிமையென்று அர்த்தத்தால் கிடைத்து விட்டது. மறுபடியும் உகாரத்தை லக்ஷ்மியின் வாசகமாக்கி, பிராட்டிக்கும் அடிமை யென்று பொருள்படுத்த வேண்டிய அவசியமில்லை. மிகச் சுருக்கமான பிரணவத்தில் இரண்டிடத்திலும் ஒரே அர்த்தத்தைக் கொள்ளுவதும் சரியல்ல.

2. விரிவு, சுருக்கம் என்ற விவரணக் கிரமத்துக்கும் சரிப்படவில்லை.

3. நாதமுனி முதலான நம்பூருவாசாரியர்கள் உகாரத்தை அந்நிய சம்பந்தக் கழிவுக்கே உபயோகமாக்கிப் பொருள் கூறிப் போந்தனர். ஆதலால், லட்சுமிக்கு உகாரத்தை வாசகமாக்குவதாலும் தேற்றகாரப் பொருளே சிறந்ததாம்.

(உ-ம்) ஒரு பெண்ணுக்குத் திருமாங்கல்யதாரணம் ஆகிவிட்டால், யாரும் மறுபடி பெண்பேச வரமாட்டார்கள்.

அதுபோலவே, உகாரம் தேற்றேகாரமாக மாறுவதிலும் பொருளாகிறது.

**வினு: அந்நிய சேஷத்துவம் அவ்வளவு கொடியதா?**

**விடை:** ஆம். அதன் கொடுமையை விளக்கிக் காட்டக் கூறப்படும் உவமை:

### சூ-ம். 62. தேவர்களுக்கு சேஷமான புரோடாசத்தை நாய்க்கிடுமாப்போல, ஈசுவரசேஷமான ஆத்மவஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு சேஷமாக்குகை.

அதாவது, யாகங்களில் இந்திராதி தேவர்களை ஆராதிக்கத் தயார் செய்து வைத்திருக்கும் பதார்த்தங்களை, பார்க்கவும் தொடவும் யோக்கியதை யில்லாத நீசப் பிறவியான நாய்க்கு

இடுகிற மூடனைப் போல, எம்பெருமானுக்கே எல்லா விதங்களாலும் சேஷமான இவ்வாத்துமாவை, சமுசாரிகளான பிரம்மாதி தேவர்களுக்கும், தனக்கும் உரிமை யுண்டெனக் கொள்வது மூடத்தனமாகு மென்றுணருக.

**வினா: பிரம்ம ருத்திராதி பெரிய தேவர்களையும் சமுசாரிக ளென்னலாமா?**

**விடை:** *சாஸ்திரம் அங்ஙனமே சொல்லுகிறது. மகாபாரதம்:*

**1. "ஆப்ரஹ்ம ஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யாவஸ்திதா:, ப்ராணிந: கர்மஜநிதா: ஸம்ஸார வசவர்த்திந:**

(இ - ள்) *பிரம்மா முதல் புழு வரையிலுமான உலகத்திலுள்ள சகல பிராணிகளும் கருமங்களால் தள்ளப்பட்டுப் பிறந்து, சமுசாரத்தில் உழலுகின்றனர்.*

**2. "நாந்யம் தேவம் நமஸ்குர்யாத்**
**நாந்யம் தேவம் நிரீக்ஷயேத்,**
**நாந்யம் ப்ரஸாத மாரோஹேத்**
**நாந்யம் ஆயதநம் விசேத்."**

(இ - ள்) *ஸ்ரீ ஹரிபரந்தாமனைத் தவிர, இதர தேவதைகளை வணங்காதே; கண்டு களிக்காதே; அவர்களுண்ட மிச்சத்தை யுண்ணாதே; அவர்களுக்காட்படாதே.*

*இவை போன்ற பல எடுத்துக் காட்டுகளுண்டு. விரிவஞ்சிவிடப்பட்டது.*

*ஆக, உத்தமக் கற்புடைய மங்கையர்க்கரசியைப் போல இருக்குமாறு வற்புறுத்துகிறது உகாரார்த்தம் என்றுணர்க.*

**வினா: பிராட்டிக்கு சேஷமென்பதிலும் அந்ய சம்பந்தப் பற்று கழிகையே முக்கியமென்றதுபோல பகவத் சேஷத்வத்தைக் காட்டிலும், அந்ய சேஷத்துவம் கழிகை முக்கியமாகுமோ?**

**விடை:** *சூ-ம்.* ***63. பகவத் சேஷத்வத்திலும் அந்ய சேஷத்வம் கழிகையே ப்ரதானம்.***

*இறைவனுக்கு ஆத்துமா அடிமைப்பட்டிருப்பதைக் காட்டிலும், பிறருடைய சம்பந்தப் பற்று அறவே விட்டொழித்தலே ஆத்துமாவுக்கு முக்கியமாக வேண்டியது.*

**வினா: இதற்கு மேற்கோளுண்டோ?**

**விடை:** உண்டு.

*சூ-ம்.* ***64. "மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்கையாலே.***

அதாவது, எமகிங்கரர் சம்பாஷணையைத் திருமழிசை யாழ்வார் நான்காம் திருவந்தாதி 68-ம் பாட்டில்,

**"திறம்போல்மின் கண்டீர் திருவடிதன் ஞமம்**
**மறந்தும் புறந்தொழா மாந்தர்—இறைஞ்சியும்**
**சாதுவராய்ப் போதுமின்க ளென்ருன் நமனுந்தன்**
**தூதுவரைக் கூவிச் செவிக்கு"**

என்றருளியுள்ளார் "எம்பெருமானுடைய திருநாமத்தை பஜனம் பண்ணுமல் போனுலும் பிற தேவர்களையோ, பகவத் சம்பந்தம் பெருத மானிடரையோ துதித்து ஆட்படாத பிரபன்னரைக் கண்டுவிடுவீர்களேயானுல், ஓ தூதுவர்களே, அவர்களுக்கு உடனே சாஷ்டாங்க தண்டனிட்டு வணங்கி வெகு தூரமாய் விலகிச் சாதுக்களாய்ப் போவீர்களாக; அவர்களிடம் அபசாரப்படாதீர்கள்" என்று அந்நிய சேஷத்துவத்தின் கொடுமையை ஆழ்வார் அருளியிருப்பதை யுணர்க. இதே கருத்தை வற்புறுத்த பாகவதத்திலும் பிரமாண பலமுண்டு. உரைக்கின் விரியும்.

**வினு: இதற்குப் பொருத்தமாக உதாரணமொன்றை சொல்லிக் காட்டுக.**

**விடை:** உலகத்திலே ஒரு மனைவி தன் கணவனுக்கு உகப்பாகப் பணிவிடைகள் செய்யாமல் போனுலும் அந்நிய புருஷனைத் தன் முக்கரணங்களாலும் நினையாதிருத்தலே அவனுக்குச் சந்தோஷத்தைத் தருவதாயிருக்கும். இவள் கற்புடையவளேயாவாள். அவ்வாறின்றிக் கணவனையும் மயக்கிக் கொண்டு, பர புருஷருடைய சகவாசத்தையு முடையளாயிருப்பாளேயானுல், கற்பிழந்தவளாய்த் தன் கணவனுல் கைவிடப்பட்டவளாவாள் என்பதில் தடையுண்டோ? ஆதலால், இவ்வாத்துமா 'எம்பெருமானுக்கே உரியவன்' என்ற கற்புடையவனு யிருத்தல் வேண்டும். தேவதாந்தர, மந்திராந்தர முதலான பற்றுக்களை விட்டு, அகாரவாச்சியனுன திருமகள் நாதனுடைய முகமலர்த்திக்கேயாக இவனுடைய சகல காரியங்களும் அமையப் பெற வேண்டு மென்பதே முடிவு. இங்ஙனே தான் பகவதநந்யார்ஹசேஷத்துவ மென்பது. இதைத்தான் உகாரம் போதிக்கிறது.

**வினு: பிறருக்கு அடிமையல்ல வென்பது உகாரப் பொருளுனா யின் தனக்குத்தான் அடிமை என்று பொருள்கொள்ளலாகாதோ?**

**விடை:** மூ-ம். **65. இத்தால் தனக்கும் பிறர்க்கும் உரித்தன்று என்கிறது.**

அதாவது, அந்நிய சேஷத்துவ நிவிருத்தியைச் சொல்லும் இந்த உகாரத்தால், 'பிறர்' என்றதனால், எம்பெருமானைத் தவிர்ந்த பிறரில் தானும் ஒருவனாகையாலே, தனக்குத்தான் உரியவனுமல்லன் என்றும், தன்னைத் தவிர மற்ற சமுசாரிகளுக்கும் அடிமை யல்லன் என்றும் சொல்லப்படுகின்றதென்றுணர்க.

**வினா: அப்படியானால் 'பிறர்' என்றதால் எம்பெருமானைத் தவிர மற்றொருவரையும் வேண்டாமெனில் அவனுடைய அந்தரங்கரான அடியார்களையும் பிறரில் சேர்க்கவேண்டியது தானே?**

**விடை:** அப்படியல்ல; அவனுடைய உயிர் நிலையான மெய்ஞ்ஞானியரை யொழிய மற்ற தேகாத்மாபிமானிகளான சமுசாரிகளைத் தான் 'பிறர்' என்ற சொல்லின் பொருளாகக் கொள்ள வேண்டும். ஈசுவரனுக்கு நாம் அடிமைகள் என்றபோதே அவனுடைய உயிர்போன்ற அடியார்களுக்கும் அடிமையாகிறோம் என்பதாம். பகவத் பாகவதர்களை ஒன்று படுத்தியே பேசவேண்டு மல்லாமல் பிரித்துப் பேசலாகாது. பாகவதரல்லாதார்தான், சமுசாரிகள் எனப்படுவார். அவர்களுக்குத்தான் பிறர் என்ற பட்டம் கொடுக்கிறோம். அவர்களுக்கு நாம் அடிமையல்ல.

ஆக, இந்த உகாரத்தால் அந்நிய சேஷத்துவம் சப்தமாகக் கழிக்கப்படுகிறது. தனக்குத்தான் அடிமையல்ல வென்றது அர்த்தத்தால் கிடைக்கிறது.

**மகாரார்த்தம்**

**வினா: மகாரத்தின் பொருள்யாது?**

**விடை:** மூ-ம். 66. ***மகாரம் இருபத்தஞ்சாம் அக்ஷரமாய் ஜ்ஞாநவாசியுமா யிருக்கையாலே ஆத்மாவைச் சொல்லுகிறது.***

இந்த 'ம' என்ற எழுத்தானது, 'க' முதலான வடமொழி எழுத்துக்களின் வரிசை முறையில் 25-ஆம் எழுத்தா யிருக்கிறது. அவற்றால் நமக்குக் கிடைக்கின்ற பொருள்:

**க, $க_1$ என்ற எழுத்துக்கள் தொடங்கி, '$ப_3$' என்ற எழுத்து வரை:**

க, $க_1$, $க_2$, $க_3$, ங=மண், நீர், தீ, காற்று, விசும்பு (பூதங்கள் ஐந்து)

ச, $ச_1$, $ஜ_2$, $ஜ_3$, ஞ=குறி, குய்யம், கால், கை, வாய், (கருமேந்திரியம் ஐந்து)

ட, $ட_1$, $ட_2$, $ட_3$, ண=நாசி, நா, கண், தோல், காது (ஞானேந்திரியம் ஐந்து)

த, $த_1$, $த_2$, $த_3$, ந=நாற்றம், சுவை, உரு, ஊறு, ஒலி (விஷயங்கள் ஐந்து)

ப=மனது; $ப_1$=அகங்காரம்; $ப_2$=மகத்து; $ப_3$=பிரகிருதி. —ஆக இருபத்து நான்கு தத்துவங்களுடன் கூடிய பிரகிருதியின் காரியாவஸ்தையே சரீரமாக விளங்குகிறது. இதற்கு அறிவில்லை யாதலால், 'அசித்' என்று பெயராகிறது. இந்த 24 எழுத்துக்களுக்கப்பாலுள்ள எழுத்து 'ம' என்பது. ஆகையிஞல், 24 எழுத்துக்களிஞல் சொல்லப்படும் தேகத்தைக் காட்டிலும் அப்பாற்பட்ட வஸ்துவை 'ம' என்ற எழுத்து குறிக்கிறது.

அதாவது, இந்த 25-ஆம் எழுத்தாகிய மகாரம் "மந' ஜ்ஞானே; 'மந' அவபோதநே" என்கிற தாதுக்களுடைய கருத்தைக் கொண்டிருக்கிறது. 'ஜ்ஞானம்' என்று அறிவைச் சொல்லுகிறபடியால், மகாரத்துக்குரிய பொருள் அறிவையுடையவஞதல் வேண்டும். அந்த அறிவு, தன்னைத்தான் உணரவும், உணர்த்துவதற்குச் சாதனமாயு மிருக்கும். இதஞல் ஆத்மாவாகிய மகரப்பொருள் ஞானமயன் என்று தெரிகிறது. மேலும் 'அவபோதநே' என்பதால், பிறவற்றையும் உணர்வதற்குச் சாதனமா யிருக்கும் ஞானத்தைத் தன் தருமமாக (குணமாக) உடையவஞகவும் இருக்கிற ஆத்துமாவைச் சொல்லுகிறது. ஆக, மகாரமானது ஞான சொரூபஞன ஆத்தும வாசகமாகிறது.

**விஞ: ஆத்துமாவைப்பற்றிச் சொல்லுகையில், பிரகிருதியைப்பற்றிய விஷயம் சொல்லப்பட்டதேன்?**

**விடை:** ஏனெனில், நமது சம்பிரதாயத்தில் தத்துவங்கள் மூன்ருகும். அவை: சித்து, அசித்து, ஈசுவரன். இம்மூன்றனுள், 'சித்து' என்ற ஆத்துமாவை முன்னுக வைத்துச் சொல்லப்பட்டிருப்பதை ஆராய்ந்தால், பந்த, மோட்சங்கள் சித்துக்கே யொழிய, மற்ற இரண்டு தத்துவங்களுக்குமில்லை யென்பதைக் கருதியே யென்றுணரலாம்.

ஈசுவர தத்துவத்தைப்பற்றி அகாரத்தில் சொல்லப்பட்டது. இன்னும் நாராயண பதத்திலும் சொல்லப்படும்.

அறிவுடையது சித்து; அறிவற்றது அசித்து. இந்த சித்து, அசித்துக்களிரண்டும் ஈசுவரனுக்கு உரியவை யென்றிருந்தாலும், அறிவில்லா அசேதனத்தின் பகவத் சேஷத் துவத்திற்

கும், அறிவுள்ள சேதனனுடைய பகவத் சேஷத்துவத்திற்கும் உள்ள வித்தியாசம் தெரியும்பொருட்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் அறிவற்ற அசேதனத்தை பிரதான மற்றதாகவும், அறிவுள்ள ஆத்துமாவைப் பிரதானனாகவும் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

**வினா: ஆத்துமா பகவானுக்கு அடிமையென்று சொன்னது போல, பிரகிருதியும் ஈசுவரனுக்குரியதென்று ஏன் சொல்லவில்லை?**

**விடை:** *பிரதானனான ஆத்துமா ஈசுவரனுக்குரியவன் என்று சொன்னபோதே பிரதானமற்ற பிரகிருதியும் பகவானுக்குரியதென்று சொல்லப்பட்டதே யாகும்.*

**வினா: ஆத்துமாவுக்கு ஞானானந்தங்களிரண்டும் குணங்களா யிருக்க, அறிவுடைமையைப்பற்றி மாத்திரம் சொல்லி ஆநந்தத்தைப்பற்றிச் சொல்லாமல் விட்டதேன்?**

**விடை:** *அனுகூல ஞானமே ஆநந்தமாகையால், ஞானத்தைச் சொன்னபோதே ஆநந்தத்துவம் அர்த்தத்தால் கிடைத்த தாகும்.*

**வினா: ஆத்துமவாசகமான மகாரமானது, ஒரு ஆத்துமாவின் நாமதேயமாகத்தானே கொள்ளவேண்டும்?**

**விடை:** *மூ-ம்.* **67. இதுதான் ஸமஷ்டி வாசகம்;** *மூ-ம்.* **68. ஜாத்யேக வசனம்.**

*அதாவது, எம்பெருமானுக்கே உரியதென்ற தன்மையி லும், பிரகிருதி தத்துவத்திற்கு அப்பாற்பட்ட இருபத்தைந்தாம் தத்துவம் ஆத்துமா வென்பதிலும், ஞானந்தமயமானது என் பதிலும், ஞானத்தைக் குணமாகக் கொண்டிருக்கும் சொரூபத்தி லும் சகல ஆத்துமாக்களும் ஒரே சொரூப சுபாவங்களோடு விளங்குகிறபடியை இந்தப் பிரணவத்தின் கடைசி எழுத்தான மகாரமானது ஆத்துமகோடிகளின் சமூகத்திற்கே பெயரா யிருக்கிறதாகக் கொள்ளவேண்டும்.*

**வினா: ஒருமையைக் காட்டும் மகார வாசகத்தைச் சமூக வாசகமாகக் கொள்வது எப்படி?**

**விடை:** *ஜாதியைக் குறித்துச் சொல்லப்படுகிற ஒருமையாவது, தானியங்களை விற்பவன், 'இந்த அறையில் நெல்; இந்த அறை யில் சோளம்; அடுத்த அறையில் கம்பு;' என்று ஒருமையில் சொல்லுவதால், அந்தந்த அறைகளில் ஒரே ஒரு நெல், ஒரே ஒரு சோளம், ஒரே ஒரு கம்பு என்று பொருள்*

கொள்ளாமல் அந்தந்தத் தானிய இனத்தைப் பேசும் ஒருமையா கத்தான் கொள்ளப்படுகிறது. இந்தத் தானியங்கள் பன் மையேயாம். இதனையே ஜாதி ஒருமைப் பெயரென்பர். அது போல இந்த மகாரத்தின் ஒருமையும் ஆத்தும சமூக ஜாதி யையே குறிப்பதாகு மென்றுணர்க.

**வினு : இதனுல் ஆத்துமாவின் எந்த சொருபம் சொல்லப் படுகிறது ?**

**விடை :** மூ-ம். ***69. இத்தால் ஆத்மா ஜ்ஞாதா வென்று, தேகத்தில் வ்யாவ்ருத்தி சொல்லிற்று யிற்று.***

அதாவது, இந்த மகாரத்தால் பகவானுக்கடிமையான இந்த ஆத்துமாவானவன், அறிவையுடையவனென்று அசே தனமான தேகத்தைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று ஆத்துமாவின் வேறுபாடு சொல்லப்பட்டது.

**வினு : உலகில், நான் தேவன் ; நான் மனுஷ்யன் ; நான் பருத் தவன் முதலான புத்தி வியவகாரங்கள் நடவா நிற்க, ' நான் ' என்கிறதற்கு அர்த்தமாகிற ஆத்துமா தேகத் தைக் காட்டிலும் வேருனவனென்று எப்படிச் சொல்ல முடியும் ?**

**விடை :** மூ-ம். ***70. தேகத்தில் வ்யாவ்ருத்தி தத்வ சேகரத்திலே சொன்னேம்.***

எப்படியெனில், ' என்னுடைய தலை,' என்னுடைய கை, என்னுடைய கால், என் மனது, என் புத்தி, என் உடம்பு என்று ' என்னுடைய ' என்ற சொல்லுக்குப் பொருளான ஆத்துமாவைக் காட்டிலும் இவை வேறுபட்டுத் தோற்றுகை யாலும் ' ஆத்துமா ' நான் என்று தோற்றுகையாலும், தேகமும் புலன்கள் முதலானவைகளும் ஒரு சமயத்தில் தோன்றியும், ஒரு சமயத்தில் தோன்ருமையாலும், ஆத்துமா எப்போதும் தோற்றுகையாலும், அகக்கரணங்கள் புறக்கரணங்கள் முதலியன பலவாகையாலும், ஆத்துமா சரீரத்தில் ஒருவ னுகையாலும், ஆத்துமா தேகத்தைக் காட்டிலும் வேறு பட்டவன் என்று கொள்ளவேண்டும். இதற்கு ஆன்மிய நூல்களின் ஆதரவு மிகவுண்டு. இப்படி இன்றித் தேகமே ஆத்துமா வென்பது சாஸ்திர, யுக்தி, அனுபவங்களுக்கு விரோதமாகும். இதைப்பற்றி, ' தத்வ சேகரம் ' என்ற நூல்

வாயிலாகப் பிள்ளை லோகாசாரியார் விரிவாகவும், தெளிவாக வும் அருளிச் செய்துள்ளார். அதில் கண்டுதெளிக.

**வின : ஞானத்தை ஆத்துமாவாகச் சொல்லலாகாதோ ?**

**விடை :** சொல்லக் கூடாது. ஏனெனில், 'நான் அறிவு' என்று எவனுவது சொல்லக் கேட்டதுண்டா ? 'நான் அறி கிறேன்' என்றல்லவோ சொல்லுகிறேம். 'என்னுடைய அறிவு முன்பு மட்டமாயிருந்தது; இப்போது சாஸ்திராப்பியா சத்தாலும், குரு உபதேசத்தாலும், பல பெரியோர்கள் வாயில் கேட்டதாலும் என்னுடைய ஞானம் தெளிவடைந்துள்ளது' என்று ஒருவன் சொல்லுமளவில், அறிவிற்கும் அப்பாற் பட்டதாய், அறிவுக்கு ஆலயமான வஸ்து ஆத்துமாவென்பது விளங்குகின்ற படியால், அறிவும் ஆத்துமாவல்ல. அறிவுக்கு இருப்பிடமானவனும் தேக, இந்திரிய, மன, பிராணுதிகளுக் கும் அப்பாற்பட்ட ஞான வடிவனுன ஆத்துமா ஒருவன் உண்டென்பதாயிற்று. ஒளியே சூரியனல்ல. ஒளிக்கு இருப்பிடமாயுள்ளவன் சூரியன் என்பது போலக்கொள்க.

**வின : ஆத்துமாவின் ஞான சொரூபமான நிலைமையைச் சொன்னபின், ஞானத்தின் தருமமான பகவத் சேஷத் துவத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய முறையிருக்க, இந்தப் பிரணவார்த்தத்தில் முதலில் ஆத்துமாவின் சேஷத்துவ ஞானமான தருமத்தைப்பற்றி முன்பு சொல் லிய பிறகு தருமியைச் சொன்னது ஏன் ?**

விடை : மு-ம் : **71. மணத்தையும் ஒளியையுங் கொண்டு பூவையும் ரத்தத்தையும் விரும்புமாப் போலே, சேஷமென்று ஆத்மாவை ஆதரிக் கிறது.**

அதாவது, மலரை அனுபவிக்கிறவனும், ரத்தின பரீட்ச கனும், மலரின் தருமமான மணத்தையும், ரத்தினத்தின் தருமமான பிரகாசத்தையும் கொண்டு, தருமிகளான மலரை யும் ரத்தினத்தையும் விரும்புவது கண்கூடு. அது போல, சேஷத்துவ ரஸிகர்கள், 'ஆத்துமா எம்பெருமானுக்'கே அடிமையான தென்கிற அதன் அசாதாரண சொருபத்தை நிர்ணயிக்கிற தருமத்தைக் கண்டு ஆதரிக்கின்றனர். அந்த பகவதநங்யார்ஹ சேஷத்துவ ஞானமின்றி, ஆத்மா எப்பேர்ப் பட்ட ஞானநந்த அமலத்துவாதி பெருமைகளை யுடைத்தா யிருப்பினும், ஆத்துமாவைப் பற்றிய ஏற்றம் இல்லையாகி, தள்ளுபடி செய்யவேண்டிய பதார்த்தங்களோடு சேர்த்து விட வேண்டியதுதான். மணமும், ஒளியும் இல்லாவிடில்

எவ்வாறு மலரும், ரத்தினமும் பயனற்றனவோ அது போலவேதான் ஆத்துமவிஷயமுமாம்.

ஆக, ஆத்துமாவிற்கு இரண்டுவித நிலைகளுண்டு. ஒன்று, பகவானுக்குரியது என்பது. மற்றொன்று ஞான வஸ்து வென்பது. இவ்விரண்டு நிலைகளில் இதன் முக்கிய மான, சொரூபத்தை நிரூபித்துக் காட்டுகிற 'எம்பெரு மானுக்கே அடிமை' என்ற தருமத்தை அழுத்தமாகவும் திருத்தமாகவும் அகார உகாரங்களில் முக்கியமாகச் சொல்லி, பின் மகாரார்த்தத்தில் ஆத்துமா சொல்லப்பட்டது.

**வினு : சேஷத்துவ ஞானமில்லாவிடில் ஆத்துமாவைப் பற்றிய முடிவு யாது ?**

விடை : மு-ம். ***அல்லாதபோது " உயிரினுற் குறைவிலம் " என்கிறபடியே த்யாஜ்யம். அது தோன்ற சேஷத்வத்தைச் சொல்லிப் பின்னை ஆத்மாவைச் சொல்லுகிறது.***

உலக வழக்கிலுள்ள ஒரு உதாரணத்தால் ஆத்துமாவின் நிலையை அறிக. ஒருவன், தன் மனைவி கற்பையிழந்து விபசாரியாயிருப்பாளாயின் மானமுள்ள கணவன், 'எனக்கு மனைவியில்லை; அவள் இறந்தாள்' என்றுதான் எண்ணுவான். ஒரு மனைவிக்குக் கற்பன்றோ பெருமைதருவது ? ஆதலால், கற்பை முந்துறச் சொல்லிப் பின்னுல் மனைவி என்று குறிக்கப் படுகிருள். அதுபோல, ஆத்மா நாயகி; ஈசுவரன் ஆத்தும காந்தன். ஆதலால், ஆத்துமாவிற்குப் பெருமை 'பகவதநந் யார்ஹ சேஷத்துவ ஞானமாகிற' கற்பு. அஃதில்லை யென் ருல், ஆழ்வார் இட்ட சாசனப்படி " உயிரினுற் குறைவிலம் " என்று ஆத்துமா நசித்ததென்றே சொல்லலாம். புகை வண்டியின் இன்ஜினுக்கு முன்னுல் வைக்கப்படும் சர்ச்சு லைட்டின் ஒளி, வண்டி செல்லும் வழியைக் காட்ட உபயோகப் படாமல், பல்வேறு திசைகளில் அவ்விளக்கின் ஒளி வீசுமேயானுல், விளக்கிருந்தும் பயனில்லையாகி விடுவது போலே, ஆத்துமாவின் தருமமாகிய ஞானமானது பகவத் சொரூபாதிகளை விஷயீகரிக்கவே பயன்பட வேண்டும். இதற்குத்தான் பகவதநந்யார்ஹ சேஷத்துவ சொரூப முடை யது ஆத்துமாவென்று நிரூபிக்கப்பட்டது. அதை முந்துறச் சொல்லி, பிறகு ஆத்துமா ஞானமுள்ள வஸ்துவென்று தேகத் தினும் வேறுபட்டிருக்கும் அதன் இயற்கையை (அறி வுடைமையை)ச் சொல்லப்பட்டது.

**வினா : பிரணவத்தால் தேர்ந்த முடிவான பொருள் யாது?**

**விடை :** *சூ-ம்.* **72.** ***ஆக, ப்ரணவத்தால் "கண்ணபுர மொன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்குரியேனோ" என்கிறபடியே ஜீவபரஸம் பந்தஞ் சொல்லிற்று.***

*கீழே சொன்ன எல்லாவற்றாலும், அதாவது பிரணவத்தின் மூன்றெழுத்துக்களான அகர, உகர, மகரத்தின் பொருள்களால் கிடைத்துள்ள கருத்தை, திருமங்கையாழ்வார்தம் பாசுரத்தில் ("கண்ணபுர மொன்றுடை யானுக்கு + 'அ' = நான்கனுருபும் கூட்டிப் பொருள் காண்க. அடியேன் = பகவத் விஷயத்தில் ஈடுபட்டவனுக்குத்தான் 'அடியேன்' என்ற பட்டம் பொருந்தும். இதனால் மகார வாச்சியனை ஆத்துமாவின் முக்கியமான சேஷத்துவம் வெளியிடப் பட்டிருப்பதை யுணர்க. ஒருவர்க்கு உரியேனோ = உகாரார்த்தம். அந்ய சேஷத்துவத்தை அடியோடு தொலைத்து எம்பெருமானுக்கே உரியதான அநந்யார்ஹ சேஷத்வம் கிடைத்தது.) "கண்ணபுர மொன்றுடை யானுக்கு என்று ஈசுவரனுக்கும், 'அடியேன்' என்று இந்தச் சேதனனுக்கும் உள்ள சேஷ சேஷிபாவ சம்பந்தத்தை (ஆண்டான் அடிமை என்ற முறையை) அருளிச்செய்தார்.*

**வினா : இந்தப் பாசுரத்தில் ஆத்துமாவின் முக்கியமான சேஷத்துவ தருமந்தான் சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய சேஷியான ஈசுவரனின் முக்கிய அடையாள தருமம் சொல்ல வில்லையோ?**

**விடை :** *சூ-ம்,* **73.** ***இத்தால் "தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு" என்றதாயிற்று.***

*பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி 97-ம் பாட்டில் இதற்குச் சமாதானம் அருளியுள்ளார்.*

*"தாமரையாள் கேள்வனென்று = அகார வாச்சியனை ஈசுவரன், சேஷ பூதனை சேதனனுடைய அன்பு நிறைந்த குற்றேவல்களை அங்கீகரிக்கிறவனன்றோ. அவன் திருமகள் நாதனாயிருக்கிற சொரூபத்தை யருளினார். இது அகாரார்த்தம்.*

*ஒருவனையே நோக்கும் = உகாரார்த்தம்.*
*உணர்வு = மகாரார்த்தம்.*
*-ஆக, பிரணவப் பொருளை அருளிச்செய்தார்.*

**வினு : அகாரத்தில் மறைந்த நான்கனுருபின் பொருளைச் சொன்னதுபோல, அந்த அகாரத்திலுள்ள உயிர்ப் பொருளான காத்தல் தருமத்தின் விசேஷம் வேறென்று மில்லையா ?**

**விடை : மூ-ம். 74. *அகாரத்தாலும், மகாரத்தாலும் ரக்ஷகனையும் ரக்ஷ்யத்தையும் சொல்லிற்று; சதுர்த்தியாலும் உகாரத்தாலும், ரக்ஷணஹேதுவான ப்ராப்தியையும் பலத்தையும் சொல்லிற்று.***

*அதாவது, 'காத்தல்' தருமத்தை வெளியிடுகிற உயிர்ப் பொருளால், அகாரமானது, ஸர்வலோக பரிபாலன கர்த்தாவான ஈசுவரனைச் சொல்லிற்று. இறைவன் காப்போனுகும்போது காக்கப்படும் பொருள்கள் இன்னவையென்பதை மகாரம் சொல்லிற்று. ஆத்துமா, பகவானுக்குரிமையாயிருக்கிற இருப்பை (விவாஹம் நிச்சயிக்கப்பட்டது போல)ச் சொல்லுகிறது மறைந்திருக்கும் நான்கனுருபு. நிச்சயித்து மணம் முடித்து விட்டாலும், கற்புடையவளான போதன்றே கணவனுடைய அபிமானத்தைப் பெற முடியும். அதுபோல, ஆத்துமா அநந்யார்ஹமான போதன்றே சொரூபம் நிலைப்பது? அப்போதுதான் பகவத் சம்பந்தம் பலம் தருவதும் அனுபவிப்பதும். அதைத்தான் உகாரம் சொல்லுகிறது.*

**வினு : யாருக்குப் பலம் ? காப்பவனுக்கா ? காக்கப்படுகிற பொருளுக்கா ?**

**விடை :** *'என்னை அடிமை கொண்டு நீ யுகக்க வேண்டும்; எனினும், ''உன்னை உகப்பிக்கும் கைங்கரியத்தை நான் பெற வேண்டு'' மெனினும் இருவருக்கும் அனுபவம் கிடைத்ததாகிறது.*

**: இனிமேல் அடுத்த பதங்களின் கருத்துக்களையும் சொல்லியருள்க.**

**விடை :**—*இந்த முதற்பதமான பிரணவத்துக்கு அடுத்த பதங்களான ''நம, நாராயணுய'' என்கிற இவ்விரண்டு பதங்களுக்கும் 'மந்திர மிச்சம்' என்று பெயர் சொல்லப்படுகிறது. இந்த இரண்டு பதங்களும், முதற்பதமான பிரணவத்திற்கு விவரமாயிருக்கும். அதில் மிகச்சுருக்கமாகவும், அனுமானத்தால் அர்த்தமாகவும் சொல்லப்பட்ட கருத்துக்களை இந்த இரண்டு பதங்களில் சப்தமாகவும், தெளிவாகவும் சந்தேகமறக் காணலாம். முதலில் பதங்களின் விவரண முறையைக் காண்க.*

**வினா : அதெவ்வாறு ?**

**ஸூ-ம். 75. இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது. ஸூ-ம். 76. உகாரத்தை விவரிக்கிறது -நமஸ்ஸு; அகாரத்தை விவரிக்கிறது-நாராயண பதம்; மகாரத்தை விவரிக்கிறது - சதுர்த்தி; நாரபத மென்றும் சொல்லுவர்கள்.**

விடை :—அதாவது, உ = நம :
அ = நாராயண
ம = ஆய, நாரா : } என்று விவரிக்கப் படுகிறது.

**வினா : 'உகாரத்தை விரிக்கிறது 'நம:' என்பதெப்படி ?**

விடை : பிரணவார்த்தைச் சொன்னபோது, உகாரத்தால் அந்நியருக்கு இவன் அடிமையல்ல என்ற பொருள் பெறப் பட்டது. அந்நியரென்றால், அகரப் பொருளான ஈசுவரனைத் தவிர மற்ற ஆத்துமாக்களாவர். பிறரில் இவனும் ஒருவனுகையாலே, தனக்குத்தான் அடிமையல்லவென்று அர்த்த பலத்தால் கிடைக்கிறது. இப்படி அர்த்தத்தால் கிடைக்கிற தனக்குத்தான் அடிமையல்ல யென்னும் இந்த அர்த்தத்தை, 'ந, ம:' என்ற பதமானது சப்தமாகச் சொல்லிக் கழிக்கிறபடியால், உகாரத்துக்கு 'நம :' பெருக்கமாயிருக்ககிறது.

**வினா : அகாரமாகிற சுருக்க பதத்துக்கு நாராயண பதம் எப்படிப் பெருக்கமாகிறது?**

விடை : அகாரத்தில் சொன்ன ஈசுவரனுடைய காத்தல் சொரூபத்தை விவரிக்கும் போது, அவன் உள்ளும் புறமும் நிறைந்து இருந்து காக்கிறன் என்றும், அவனால் காப்பாற்றப்படுகிற வஸ்துக்களாகிய சேதனுசேதனங்கள் இன்னின்னவை யென்றும், அவற்றைக் காப்பதற்கு உபயோகமாகத் தன்னிடத்தில் அவசியமிருக்க வேண்டிய குணங்கள் இன்னவை யென்றும், காக்கின்ற விதத்தையும், அவன் சேதனருக்குத்தானே அடைவிக்கிறவனுயும், அடையப்படுபவனுயும் இருக்கிற இயற்கைகள் இன்னின்னவையென்றும் தெளிவாகச் சப்தமாகச் சொல்லுவதாலே, அகாரத்துக்கு நாராயண பதம் பெருக்கமெனப் பட்டது.

**வினா : மகாரத்துக்கு விரிவு, நாராயண பதத்தில் வெளிப் படையாயிருக்கிற நான்கனுருபு எப்படியாகிறது ?**

விடை : அகாரார்த்தத்தில், உயிர்ப் பொருளென்னும் தாதுவர்த்தத்தால் கிடைத்த மறைந்துள்ள நான்காம் வேற்றுமையுரு

பிஞல், காக்கப்படும் வஸ்துவான ஆத்துமாவினுடைய அடிமைத் தனத்தை, ஈசுவரனுடைய சந்தோஷத்திற்குப் பயன் படுத்த வேண்டியிருக்கும்படியான 'கைங்கரியப் பிரார்த்தனையை' அது விவரிக்கிறபடியால், மகாரத்தின் விரிவு 'ஆய' என்ற நான்கனுருபு எனச் சொல்லப்பட்டது.

**விஞ: மகாரத்துக்கு விவரம், நாராயண பதத்தின் முதற் பகுதி 'நார' பதமுமாகும் என்றதன் கருத்தென்ன ?**

**விடை :** ஆத்துமாவிற்கு நிரூபக தருமம் (முக்கிய அடையாளம்) சேஷத்துவம் என்றும், நிரூபித சொரூப தருமம்(அறிவுடைமை) என்றும் இருவகையில் சொன்னதைப் பிரணவத்தில் அறிந்தீரல்லவா? அவ்விரண்டனுள் சேஷத்துவப் பிரகாசத்துக்கு 'ஆய' என்ற சதுர்த்தி, விவரணமாயிற்று; ஆத்துமாவின் நித்தியத்துவமும், ஞானநந்தங்களை ஒரே மாதிரியாக சகலாத்துமாக்களும் உடைத்தாயிருக்கின்ற தன்மையும், ஆத்தும சமூகத்தின் பன்மையையும் காட்டுவதாக இருப்பதால், மகாரத்துக்கு "நாரா :" என்ற பதம், பெருக்க பதமாகச் சொல்லப்பட்டது. சேஷத்துவத்திற்குச் சதுர்த்தி விவரணமானுற்போல, ஆத்துமாவின் 'அறிவுடைமைக்கு நாரபதம் விவரமாகும்.

**விஞ : எழுத்துக்களின் வரிசைக் கிரமமாக, அதாவது, அகாரத்தின் விவரணம், உகாரத்தின் விரிவு, மகாரத்தின் விவரம் சொல்லவேண்டியிருக்க, முறை மாறி முதலில் உகாரத்தின் விவரணத்தைச் சொன்னதேன் ?**

**விடை :** மூ-ம். ***77. அடைவே விவரியா தொழிகிறது, விரோதி போல் அநுபவிக்க வேண்டுகையாலே.***

இருவித காரணங்கள் :

1. நாராயண பதத்தில் இவன் பகவந் முகோல்லாச கைங்கரியங்களைச் செய்யும் போது சுதந்திரரூபமான விரோதிகள் கழிக்கப்பட வேண்டியிருக்கிற காரணம் ஒன்று. அதை உகாரம் செய்கிறது.

2. இதுவரை முதற்பதமான பிரணவப் பொருள் சொல்லப்பட்டது. இனி, இரண்டாம் பதமான நமஸ்ஸின் பொருளையன்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆதலின், பதங்களின் வரிசைக் கிரமத்தை யனுசரித்தும் இரண்டாம்பதமான நமஸ்ஸின் சுருக்க பதமான உகாரம் முந்துற எடுத்து விவரணக் கிரமத்தில் உரைக்கப்பட்ட தென்றுணர்க.

## நமப்பதார்த்தம்

**வினு : இனி நடுவில் பதமான நமஸ்ஸின் பொருள்யாது ?**

***ஸூ-ம். 78. நமஸ்ஸு 'ந' என்றும் 'ம:' என்றும் இரண்டுபதம்.***

**விடை :** *இரண்டெழுத்துக்களால் ஆக்கப்பட்ட இரண்டாம் பதமான இந்த 'நமஸ்ஸின்' இரண்டு எழுத்துக்களும் இரண்டு பதங்களாகப் பிரிக்கப்படுகின்றன.*

**வினு : இரண்டு பதங்களாகப் பிரிந்ததேன் ?**

**விடை :** *இந்த 'நம :' பதம், 'அகண்ட நமஸ்ஸு' என்றும், 'ஸகண்ட நமஸ்ஸு' என்றும் இரண்டு வகையில் வைத்துப் பொருள் சொல்லப்படுகிற காரணத்தால், முதலில் பதங்கள் பிரிக்கப்பட்டன. இப்போது முந்துற ஸகண்ட நமஸ்ஸின் பொருள் சொல்லப்படும்.*

**வினு : அகண்ட, ஸகண்ட நமஸ்ஸுக்களின் விவரமென்ன?**

**விடை :** *'நம:' பதமானது அகண்டமாம் போது ஒரு பதமாய் ஒரு அர்த்தத்தைச் சொல்லுகிறது. அதாவது, 'நமஸ்காரம்'= வணக்கம், தங்களுடையவன், அகங்கார மகார மற்றவன் என்றவை போன்ற பாரதந்த்ரியம் என ஆத்துமாவின் தற்காப்பில் வல்லமையற்ற தன்மையை வெளியிடுகிறது.*

*இனி,இரண்டாவதான ஸகண்ட நமஸ்ஸு, இரண்டு பதங்களாய்ப் பிரிந்து, இரண்டு அர்த்தங்களைச் சொல்லுகிறது. எப்படியெனில், 'நம:' என்ற சொல் 'ந' என்றும் 'ம:' என்றும் இரண்டு பதங்களாகின்றன. இந்த இரண்டாவதான ஸகண்ட நமஸ்ஸின் பொருளை ஸ்வாமி முந்துற அருளிச் செய்கிறார்.*

**வினு : அஃதெங்ஙனம் ? விளக்குக.**

**விடை :** ***ஸூ-ம். 79. 'ம:' என்கிற இத்தால் 'தனக்குரியன்' என்கிறது; 'ந' என்ற அத்தைத் தவிர்க்கிறது.***

**விடை :** *இந்த 'ம:' என்கிற பதம் (ம+:). அதாவது ம= ஆத்துமா;: = ஆரும் வேற்றுமை உருபு 'உடைய' என்பது. இரண்டும் கூடி 'என்னுடையது' என்ற பொருளைத் தெரிவிக்கிறது. அதனுல், "நான் எனக்குரியேன்" என்ருகிறது. அதாவது, 'நான் சேஷி' (எஜமானன்) என்ருவதால், அகாரத்*

தில் நான்கனுருபினுல் கிடைத்த ஈசுவரனுடைய சர்வசேஷித்துவத்திற்கு எதிரிடையாய் "நான் சுவாமி" என்ற பொருளைச் சொல்லுகிறது. ஆக, "ம:" என்கிற பதமானது 'தனக்குத்தான் உரியவன்' என்பதையும், 'தான் சுதந்திரன்' என்பதையும் சொல்லுகிறது.

இதில், இரண்டாம் பதமான "ந'=அல்ல" என்று தனக்குத்தான் உரியன் என்ற ஸ்வசேஷத்துவத்தையும், 'தான் சுதந்திரன்' என்ற ஸ்வஸ்வாதந்திரியத்தையும் சப்தமாகக் கழித்துவிடுகிறது.

**வினு: இரண்டு பதங்களாகப் பிரிக்காமல், ஒன்று சேர்த்துப் பார்த்தால் என்ன பொருள்படும்?**

**விடை:** *ஸூ-ம் 80. ஆக, 'நம:' என்கிற இத்தால் 'தனக்கு உரியன் அன்று' என்கிறது.*

**வினு: ஒரு பதத்துக்குப் பொருள் சொல்லுகையில், முதலெழுத்துக்குச் சொல்லி, பின்பு அதற்கடுத்த எழுத்துக்குச் சொல்ல வேண்டியிருக்க, அப்படிச் சொல்லாமல் மகாரத்திற்குப் பொருள் முதலிற் கூறிப் பின்பு நகாரத்திற்குப் பொருள் கூறுவதேன்?**

**விடை:** ஏனெனில், முதலில் விடவேண்டியவற்றைச் சொல்லிக் கழிக்க வேண்டுகையாலே இப்படிச் சொன்னுர். 'ஒருவன் வெகு நாட்களாக உடுத்திக் கொண்டிருந்த ஆடையை 'அவிழ்த்து எறிந்துவிடு' என்ருல், அவனுக்கு அதை எடுத்து எறிந்துவிட மனம் வராது. ஒருவேளை வற்புறுத்தலின்மேல் எறிந்துவிடுவானேயாஞலும், 'அந்தோ! நல்ல வேஷ்டியை இழந்துவிட்டோமே' என்று கழிக்கப்பட்ட ஆடையின் ஞாபகம் வரக்கூடுமன்ருே. ஆதலின், அந்தக் கழித்த வஸ்திரத்தின் பழமையையும், கிழிசலேயும், பயனற்ற தன்மையையும் பற்றிச் சொல்லிக் காட்டியபின், அவனும் அதனுண்மையை யுணர்ந்தபின் அதை அவிழ்த்தெறிந்து விடுவானேயாஞல், அதைக் கழித்துவிட்ட துன்பமும் அக் கந்தலின் ஞாபகமும் வராது. வருவதற்குக் காரணமுமில்லை. அதுபோல, இங்கு ஆத்துமாவின் கந்தல்களான, 'தனக்குத் தானே உரியன்; தானே தற்காப்பிற்கு வல்லவன்' என்பனபோன்ற தான்தோன்றித்தனமான கிழிசல்களைப் பற்றிச் சொல்லியபின்பு, நகாரத்தால் கழிக்கப்பட்டால், பற்றற்ற தன்மையைப் பெறலாகும். ஆதலின், 'ம:'வின் பொருள் முதலிற் கூறப்பட்டது.

**வினா: உகாரார்த்தத்தில் அந்நியருக்கடிமையல்ல வென்பதைச் சொல்லியிருக்க, அதன் விரிவான நமப் பதத்தில் அங்குச் சொன்ன விஷயத்தைப் பற்றித்தானே விவரித்திருக்க வேண்டும்? அப்படியின்றி, 'தனக்குரியன் அல்லன்' என்று சொன்னால் பொருந்துமா?**

*விடை: பொருந்தும். எப்படியெனில், ஈசுவரனை யொழிந்த யாவும் அந்நியமேயாம். தானும் அந்த அந்நியத்தில் சேர்ந்தவனே யாகிறான். ஆதலின், உகரப் பொருளால் 'பகவானுக்கே இவன் அடிமை' என்று ஆகும்போது பிறவற்றின் சம்பந்தம் கழிக்கப்பட்டபோது, தனக்குரியன் என்பதும் கூடியேதான் ஒதுக்கித் தள்ளப்பட்ட தென்றுணரவும். ஆக, உகாரத்தில், 'பிறருக்கடிமையல்ல' வென்ற பொருள் சப்தத்தாலும், 'தனக்குரியனல்லன்' என்ற பொருள் அர்த்தத்தாலும் கிடைக்கின்றன. இம்மாதிரியே 'நம:' பதத்தில் 'தனக்குரியனல்லன்' என்ற பொருள் சப்தமாகவும், 'பிறருக்குரியனல்லன்' என்ற கருத்து அர்த்த பலத்தாலும் கிடைக்கிற படியால், சுருக்கம் பெருக்கம் என்ற இம் முறைக்குப் பொருந்துவதாகின்றது.*

**வினா: உகாரத்தில் 'தனக்குரியனல்லன்' என்ற கருத்தை அர்த்த பலத்தால் போதிக்கிற தென்றிருந்தும், அதைப் பற்றி நம: பதம் சப்தமாகக் கண்டித்துக் கழிப்பதற்குக் காரணமென்ன?**

*விடை: ஏனெனில், பிரணவத்தில் அகர உகரங்களுக்குப் பொருள் கூறியபடி, 'ஆத்துமா பகவானுக்கு அற்றுத் தீர்ந்த அடிமை' என்ற சொரூபஞானத்தைப் பெற்று வரும் சமயத்தில், மகாரார்த்தத்தினால் ஆத்துமாவானவன் ஞானத்திற் கிருப்பிடமானவன், ஞானத்தையே குணமாக உடையவன், ஆநந்தமயன் என்றெல்லாம் தன் பெருமைகளைக் கேட்டு, கண்டு மயங்கி 'ஓ! நான் அறிஞன்! எனக்குச் சுதந்திரமுண்டு; நான் ஏன் பிறருக்கு அடிமையாயிருக்க வேண்டு' மென்று, 'தனக்குரியன்; சுதந்திரன்' என்ற பகவத்சேஷத்வ விரோதிகள் தலையெடுக்கக் காரணமுண்டு. அந்தச் சுதந்திரம் தலையெடுத்தால் சொரூபமில்லையாய் விடும். ஆதலால், நம: பதமானது 'தனக்குரியனல்லன்' என்று ஸ்வசேஷத்துவத்தைச் சப்தமாகக் கண்டித்துக் கழிக்கிறது.*

**வினா: இனியுமொரு பலவீனமிருக்கிறது. அதாவது, இந்த நமஸ்ஸில் அந்நியசேஷத்தை அர்த்தமாகத்தான் கழிக்கிறதே யொழிய, சப்தமாகக் கண்டிக்கப்படாததால், இவனுடைய அறிவுடைமையின் பலத்தாலே பிறருக்கு அடிமையாகவும் இடமேற்படக்கூடுமல்லவா?**

**விடை: மூ-ம். 81. பிறர்க்கு உரியனுன அன்று தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி மீட்கலாம்; தனக்கென்னுமன்று யோக்யதையும் கூட அழியும்.**

மகாரார்த்தத்தின் மயக்கிஞல், ஆத்துமாவானவன் தனக்குரியவஞகிப் பிறவற்றிற்கும், தேவதாந்தரங்களான பிறருக்கும் வசமாகி விடுகிருன். அப்போது ஈசுவரன் தன் இயற்கைப் பேரருளாலே ஏதோ ஒரு காரணத்தை ஏறிட்டுக் கொண்டு, தன்னுடைய அகிலாண்டகோடி காரணத்துவ, ரட்சகத்துவாதி குணங்களை இவன் உணரும்படி செய்து, காலாந்தரத்திலாவது 'அந்நியருக்காட்படுதலாகிற படுகுழியிலிருந்து மீட்டுக்கொள்ள இடமுண்டு. அவ்வாறின்றி தான் தோன்றித் தம்பிராஞக 'நானே தெய்வம்; எனக்கு மேலொருவரில்லை' என்ற அசுர குணமான சுவாதந்திரிய புத்தியுண்டாகி விடுமேயாஞல், காலாந்தரத்திலும் கூட இவன் விடுதலை பெற முடியாமல் அழிகிருஞகையால், 'பிறருக்கடிமைப்பட்டிருப்பதைக் காட்டிலும், 'தனக்குரியன்' என்றிருத்தல் மிகக் கொடியதாதலின், இந்த நமப் பதமானது அப்படிப்பட்ட குரூரமான 'தனக்குத்தான் அடிமை' என்பதைப் பலமாகக் கண்டிக்கிறது. 'அந்நியருக்கு அடிமையல்ல' என்பதிலேயே 'தனக்குரியனுமல்ல' என்பதும் உள்ளடங்கிய பொருளாகையாலே, தனக்கடிமை என்றது கழிக்கப்பட்டபோதே அந்நிய சேஷத்துவமும் கழிக்கப்பட்டதேயாம்.

**வினு: மேற்கொண்டு இந்த நமப் பதம் செய்வதென்ன?**

**விடை: மூ-ம் 82. இத்தால், விரோதியைக் கழிக்கிறது.**

சுதந்திர வுணர்ச்சியைப்போக்குகிற இந்த நமப்பதமானது, ஜீவர்கள், பரமாத்மாவையடைய வொட்டாமல் செய்கிற இடையூறுகளைப் போக்குகிறது.

**வினு: அவ்விடைஞ்சல்கள் ஒன்ரு? பலவா?**

**விடை: மூ-ம். 83. விரோதிதான் மூன்று.**

அகப்பற்று, புறப்பற்றுக்களால் ஏற்படுகிற கொடுமைகள் மூன்ருக இருக்கின்றன.

**வினு: அம்மூன்று எவை?**

**விடை: மூ-ம். 84. அதாவது - சொரூப விரோதியும், உபாயவிரோதியும் ப்ராப்ய விரோதியும்;**

இந்தத் திருமந்திரத்தில் உள்ள மூன்று பதங்களிலும் மூன்று விரோதிகள் தோன்றுகின்றன. முதற் பதமான பிரணவத்தில் உண்டாவது சொரூப விரோதி. இரண்டாம் பதமான நமப் பதத்தில் தோன்றுவது உபாய விரோதி. மூன்றும் பதமான நாராயண பதத்தில் பிறப்பது ப்ராப்ய விரோதியாம்.

**வினு: சொரூப விரோதியென்பது யாது? அது முதற்பதத்தில் எப்படித் தோன்றுகிறது ?**

**விடை:** முதற்பதமான பிரணவத்தினுல் தேர்ந்த பொருள் 'எம்பெருமானுக்கே இவ்வாத்மா அடிமை' என்பதல்லவா? எனவே, இதுதான் ஆத்துமாவின் நிலேநின்ற தருமமாகும் என்பது. இந்த முடிவான பொருளே அசைக்கிற எதிர்த்தட்டான விரோத அபிப்பிராயமாகிய சில ஆபத்துக்களும் இருக்கின்றன. அவை, உகாரப் பொருளில் 'தனக்குரியனல்லன்' என்று ரூடியாக தொனிக்கச் சொல்லப்படாமை ஒரு ஆபத்து. இரண்டாவது, மகாரார்த்தத்தில் ஆத்துமாவின் அறிவுடைமையையும், அதனுல் ஏற்படும் சுதந்திர வுணர்ச்சியின் தோற்றமும் ஒரு எதிர்ப்பு. ஆக, இவ்விரண்டு வகைகளினுல் முதற் பதத்தில் ஆத்தும சொரூப விரோதி சிருஷ்டிக்கப்படலாம்.

**வினு: உபாய விரோதி யென்பது யாது? எப்படி யுண்டாகிறது?**

**விடை:** முதற்பத விரோதியான சுதந்திர வுணர்ச்சியின் பலத்தால், தன்னேத்தான் காத்துக்கொள்ளுதல் என்ற எண்ணம் உண்டாகிறது. எப்படி யெனில், இந்த நமப்பதத்தில் 'பிறருக்கு அடிமையல்ல' என்ற அர்த்தம் சப்தமாகக் கழிக்கப்படாத பலவீனமும், முதற் பதத்தால் ஏற்பட்ட விரோதியும் கூடி, ஈசுவரனுடைய பாதுகாப்பிற் கிசையாமல், 'தனக்குத் தானே காப்பாளன்' என்ற இறுமாப்பு—ஒரு மனேவி தன் கணவனுடைய பாதுகாப்பிற்குடன் படாமல், விபரீத வுபாயத்தால் தன் வயிற்றுப் பிழைப்பை நடத்திக்கொள்ள எண்ணுவது போன்ற கொள்கை—தோன்றக்கூடும். இவ்வித அபிப்பிராயத்துக்குத்தான் உபாய விரோதி யென்று பெயர்.

**வினு: இனி பிராப்ய விரோதி யென்பது யாது ? அது எவ்வாறு உண்டாகிறது?**

**விடை:** பிராப்ய விரோதியாவது ஈசுவரனுடைய முகமலர்த்திக் குறுப்பாக செய்யப்பட வேண்டிய திருப்பணிகளே, அகப்பற்று புறப்பற்றுக்களின் வசப்பட்டவனுய், சுயநலத்தைப் பாராட்டித் தனக்கென்றே எண்ணிச் செய்வது பிராப்பிய

விரோதி யென்றும், உபேய விரோதி யென்றும், புருஷார்த்த விரோதி யென்றும் சொல்லப்படும். அவ்வாறான சுயநல எண்ணம் எப்படி யுண்டாகலா மெனில், முதல் இரண்டாம் பதங்களால் உண்டான விரோதிகளான அகங்கார மமகாரங்களால், மூன்றுவதான நாராயணபதத்தில் 'ஆய' என்ற நான்கனுருபின் போதனையால், கைங்கரியங்களைச் செய்யப் புகில், அக்கைங்கரிய பலனை யனுபவிக்கிற கருத்தா, தானே என்ற எண்ணம் உண்டாகலாம். சருவவித பலன்களைத் தருபவனும், எல்லாவற்றையும் நடாத்துகிற கருத்தாவும், அவற்றுலேற்படும் பலா பலன்களை அனுபவிக்கின்ற சருவ சுவாதீன கருத்தா ஈசுவரனொருவன் பொருட்டன்றே கைங்கரியங்களை இவ்வாத்துமா செய்யவேணு மென்பதை யொழித்து, பெருமாளுக்கு உகப்பாகத் தளிகைப் பிரசாதங்களைச் செய்வதை விட்டு தனக்கிஷ்டமாகத் தளிகைகள் செய்யப்படுவது போலவும், சென்றுல் குடையாகாமல்,குடையாலுல் செல்வது போன்றவை பிராப்ய விரோதியாக மூன்றும் பதத்தில் தோன்றவும் இடமுண்டு.

**வினு: இம்மூவகைப்பட்ட விரோதிகள் எப்படியிருந்தால் கழியும்?**

**விடை:** மூ-ம். **85. *ஸ்வரூப விரோதி கழிகையாவது-"யானே நீ யென்னுடைமையும் நீயே" என்றிருக்கை; உபாய விரோதி கழிகையாவது-"களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்" என்றிருக்கை; ப்ராப்ய விரோதி கழிகையாவது-"மற்றை நங் காமங்கள் மாற்று" என்றிருக்கை.***

இந்த நம: பதமானது, காக்கையின் கண்மணிகள் எப்படி சமயோசிதமாக வலது கண்ணுடன் இடது கண்மணியும், இடது கண்ணுடன் வலது கண்மணியும் சேர்ந்து வேலை செய்கிறதோ, அதுபோல இந்த நடுப்பதமான 'நம:' என்ற சொல், ஓம்+நம: என்று முதற் பதத்துடன் சேர்ந்து பிரணவார்த்தத்தில் உண்டாகும் பகவத் சேஷத்துவ விரோதியான "யானே; என்றனதே" என்ற ஆத்துமாவின் சுதந்திரத்தைச் சம்மாரம் பண்ணி, 'யானே நீ; என்னுடைமையையும் நீயே' என்று உயிரும் உடலும் ஈசுவர சரீரமாயிருக்கிற அறிவை யூட்டுகிறது.

**வினா: உபாய விரோதி எப்படிக் கழிகிறது?**

**விடை:** இதே நமப்பதமானது, தன்னிருப்பிடத்திலேயே இருந்து கொண்டு, தன்னிடத்தில் தோன்றலாமாயிருக்கும் விரோதமான 'தனக்குத்தானே காப்பாளன்' என்ற எண்ணத்தை, 'ம:' 'நம' என்று தனக்குரியனல்லனுகி, தன் சுதந்திரமற்ற தன்மையை யுணர்ந்து 'என் துன்பங்களைப் போக்கினுலும் போக்காவிட்டாலும் அது உன்னிஷ்டம்; ஆபத்துக் காலத்தில் உன்னையன்றி வேறெருவரும் எனக்குப் புகலிடமில்லை. நீயேதான் என்னைக் காக்கும் கடவுள்' என்றிருக்கும்படி செய்கிறது.

**வினா: பிராப்பிய விரோதி நமப்பதத்தால் எவ்வாறு தொலைகிறது?**

**விடை:** இந்த மத்திம பதமாகிய நம:, திருமந்திரத்தில் மூன்றும் பதமாகிய 'நாராயணுய'வுடன் 'நம:+நாராயணுய' என்று சேர்ந்து, அம்மூன்றும் பதத்தின் கருத்தாகிய (நறபயணுகிய) பகவத் கைங்கரிய விரோதமான சுயநல புத்தியைப் போக்கி, 'உடையான் ஈசுவரனன்றே! இந்த ஆத்தும ஆத்மீயங்கள் யாவும் அவனுடைமையன்றே! உடைமையை உடையான் தன்னிஷ்டப்படி விநியோகங் கொள்ளுகிறன்; அவனே போக்தா; நானல்ல; பிறரல்ல' என்ற எண்ணத்தை யுண்டு பண்ணி, ஈசுவர முகமலர்த்திக் குறுப்பாம் வண்ணமாகச் ச்கலவித பகவத் பணிவிடைகளைச் செய்ய வேண்டுகிறது. "உற்றேமேயாவோம்; உமக்கே நாமாட் செய்வோம்; மற்றை நங்காமங்கள் மாற்று" எனக்கு என்றில்லாமலும், எனக்குப் பாதி உனக்குப் பாதி என்றில்லாமலும் உனக்கேயாக அடிமை கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்கச் செய்கிறது.

ஆக, இவ்வாறு 'ஓம் நம:' என்று சொரூப விரோதியையும், 'நம:' என்று உபாய விரோதியையும், 'நம: நாராயணுய' என்று பகவத் கைங்கரியமாகிய பல விரோதியையும் கழிக்கிறது இந்த 'நம:' பதம்.

**வினா: இந்த மூவித விரோதிகளும் நம: பதத்தால் கழிக்கப் படுவதில் ஏற்படும் நன்மை யாது?**

**விடை:** மூ-ம். **86. 'ம:' என்கை ஸ்வரூப நாசம்; "நம:" என்கை ஸ்வரூபோஜ் ஜீவனம்.**

அதாவது, இந்த நம: பதத்தில் இரண்டெழுத்துக்களிருக்கின்றன. ஒரு எழுத்து ஜனன மரணுதி நரகானுபவங்களில் கழுத்தைப் பிடித்து உந்தித்தள்ளி அழுத்துகின்றது. மற்றொரு

எழுத்து அதை அவ்வாருகச் செல்லவொட்டாமல் தன்னுடன் சேர்த்துப் பேரின்பானுபவத்திற்குச் செல்லக் கதவைத் திறந்து விடுகிறது. 'ம:' என்பது நரகவாசல்; 'நம:; என்பது பரமபத வாசல் என்றுணருக.

**வினு: வியாதியைப் போக்கினுல் போதுமா? ஆரோக்கியத்தையும் தருவதன்ருே மருந்துக்குள்ள ஏற்றம்? அது போல் நம: பதம் செய்வதுண்டோ?**

சூ-ம். **87. இதுதான்—ஸ்வரூபத்தையும், உபாயத்தையும் பலத்தையுங் காட்டும்.**

**விடை:** உண்டு. எப்படியெனில், நமஸ்ஸு, ஒரு பதமாய், 'அடியான்' என்பதற்குத் தக்க அடையாளமான வணக்கத்தைக் காட்டுகிறது. 'ம:' 'ந' இரண்டு எழுத்துக்களாகப் பிரிந்திருந்து மூன்று பதங்களுடன் கீழ்க்காட்டிய விவரப்படி சேர்ந்து, தன்னை, நெறியை, பலனைச் சீர்திருத்திப் பிரகாசப் படுத்தலே முக்கிய காரியமாகக் கொண்டிருக்கிறது.

**வினு: பிரகாசிப்பிக்கிற விதத்தை விளக்குக.**

சூ-ம். **88. 'தொலைவில்லி மங்கலம் தொழும்' என்கையாலே ஸ்வரூபம் சொல்லிற்று. 'வேங்கடத் துறைவார்க்கு நம:' என் கையாலே உபாயம் சொல்லிற்று; "அந்தி தொழும் சொல்" என் கையாலே பலம் சொல்லிற்று.**

**விடை:** எவ்வாறெனில், இதுவரையில் பிரணவ, நம, நாராயண பதங்களால் அறிய வேண்டிய சகல கருத்துக்களையும் இந்த முமுட்சுவான அதிகாரி அறிந்தான். அறிந்தால் மட்டிலும் போதாது. அறிவுக்குத் தக்க ஆற்றலும் வேண்டுமல்லவா? கண்களால் நடக்க வேண்டிய பாதையைப் பார்க்கிருன்; பார்த்ததனுல் மாத்திரம் அடைய வேண்டிய இடத்தைப் போய்ச் சேரமுடியுமா? முடியாது. கால்களால் நடந்து போனுல்தான் குறிப்பிட்ட இடத்தையடைய முடியும். அது போல திருமந்திரத்தின் மூன்று பதங்களாலும் உணர்ந்த சொரூப, உபாய, புருஷார்த்த ஞானம் மட்டிலும் இருந்தால் போதுமா? அதன்படி நடந்துகொள்ள வேண்டும். அறிவுக்குத் தக்க ஆற்றலும் அவசியமிருக்க வேண்டும். ஞானமும் அனுட்டானமும் ஒரு பறவைக்கு இரண்டு சிறகுகள் போலேயாம். அவற்றினுல்தான் பறவை உயரப் பறக்கமுடியும். அதேபோல, இந்த முமுட்சுவாகிய பறவை விடுதலையடைந்து

உயரப் போக, அறிவும் ஆற்றலும் இன்றியமையாதவை. அதன்படியே இந்த நம: பதம், முதல் பதத்தில் பெற்ற 'அகார வாச்சியனுக்கே அடியான்' என்ற சொரூப ஞானத்தைச் செயல் அளவாகக் காட்ட உதவுகிறது. அதற்குத் 'தொலேவில் விமங்கலம் **தொழும்'** என்று, நமஸ்காரம் திவ்விய தேசத்தளவும் சென்ற செயலே ஆழ்வார் குறிக்கிருர் என்பது மேற்கோள். இரண்டாம் பதத்தால் கிடைத்த "ஈசுவரனே நம்மைக் காக்கும் உபாயன்" என்ற உபாய ஞானமானது, செயலளவில் சென்றதென்பதை ஆழ்வார் "வேங்கடத் துறைவார்க்கு **நம:**" என்று விளக்குகிருர். மூன்ரும் பதத்தில் ஈசுவரனுடைய பேருகவேயாம்படி பகவத் கைங்கரியங்கள் செய்யப்பட வேண்டுமென்ற புருஷார்த்த சொரூப ஞானமானது, செயலளவில் பரிணமித்து 'அந்தி **தொழும்** சொல்' என்ற பிரமாணத்தின்படி பிரகாசிக்கிறதும் காண்க. ஆக, **நம:** என்ற மத்திம பதத்தின் பொருள் இந்தத் திரு மந்திரத்தின்பெருமைக்கு நடு நாயக மணியாக விளங்குகிறது.

**வினு: இந்த நம: பதத்தில் இன்னமும் ஏதாவது விசேஷார்த்தம் உண்டா?**

**விடை:** உண்டு.

## சூ-ம். 89. உற்றதும் உன்னடியார்க் கடிமை என்கையாலே, இதிலே பாகவத சேஷத்வமும் அநுஸந்தேயம்.

அதாவது, இந்த நமப்பதத்திஞல் சேதனனுடைய 'பகவானுக் கடிமை' என்ற சொரூபம் திடமாக்கப் படுகிறபடியால், அவனுக்கு அடிமை யென்பது அவனுயிர் நிலேயரான பாகவதருக்கு அடிமைப் பட்டபோது தான் ஊர்ஜிதமாகிறது. ராஜபக்தியுடைமை யென்பது ராஜாவின் பிரிய புத்திர மித்திராதியரிடமும் நமக்கு அன்புண்டானபோதுதான் நிலே பெறும். அதுபோலத்தான் பகவானேயே தஞ்சமென்று பற்றிய பாகவதோத்தமருக்கும் அவர் சம்பந்த சம்பந்திகளுக்கும் நாம் அன்பராக வேண்டும். அப்படி யாகாமற் போஞல் பகவத் சேஷத்துவம் நிலேபெருது. ஆதலின், இந்த நம: பதத்தில் 'பாகவதருக்கு அடிமை' என்ற பொருள், அர்த்த பலத்தால் கிடைக்கிறது.

**வினு: வேறு காரணத்தால் பாகவத சேஷத்துவம் இப்பதத்தில் கிடைக்காதா?**

விடை: வேறு காரணத்தாலும் இந்த நம: பதத்தில் பாக வதருக் கடிமை யாவதைச் சொல்லலாம். எவ்வாறெனில், முதற்பதத்தில் 'பகவானுக் கடிமை' என்று சொல்லப்பட்டது. அதற்கடுத்த படியாக இந்த நம: பதத்தில் 'பாகவதருக் கடிமை' என்பதைச் சொல்லப்படுவதாகவும் கொள்ளலாம்.

**வினு: இந்தக் காரணம் அவ்வளவு உசிதமாகத் தோன்ற வில்லை. வேறு தக்க காரணமிருந்தால் சொல்லுக.**

விடை: முக்கியமான காரணமொன்றுண்டு. அதாவது முதல் பதத்தில் 'பகவானுக்கே இவ்வாத்துமா அடிமை' என்று சொன்னபோதே, பகவானிடத்தில் செலுத்தப்படும் அன்பு, அவனுடைய பிரீதிக்குரிய அவனடியாரிடத்தும் இவ னுக்கு அன்புண்டாக வேண்டியதென்று அர்த்தத்தால் தெரி வதாயிருந்ததே யாகிலும், முதற்பதத்தில் அகங்காரம் மகாரங் கள் கழிக்கப்படாமையாலே, அடியாருக் கடிமை சரியான முறையில் நடைபெறுவதில்லை. தேகாபிமானத்தால் உயர்வு தாழ்வு என்ற பேதம் நிகழலாம். இந்த நம: பதத்தில் அப்படி யில்லை. தேகாபிமான ஆத்துமாபிமானுதி சகல அகப்பற்று புறப்பற்றுக்களென்னும் கந்தல்கள் (ஆபாசங்கள்) நன்ருக்க் கழிக்கப்பட்ட படியால் "என் செய்வினையாம், மெய்க்குற்றம் நீக்கி விளங்கிய மேகத்தை மேவும் நல்லோர், எக்குற்றவாளர், எது பிறப்பு, ஏதியல்வாக நின்ரோர், அக்குற்றம் அப் பிறப்பு அவ்வியல்வே நம்மை யாட் கொள்ளுமே" என்னும்படியான 'அடியார்க் கடிமை' ஞானம் களங்கமற்று ஒளிவிசுகிறது. ஆதலின், பாகவதாபசார ஹேதுக்களுக்கு இடமில்லாத இந்த நமப்பதத்தில் தான் 'அவனடியாருக்கு அடியேன்' என்ற பொருள் நிச்சயிக்கப் படுகிறதென்றறியவும்.

**வினு: 'பாகவதருக் கடிமை' என்ற விஷயத்தைப்பற்றி இம் மந்திரத்தில் வேறெங்கேனும் சொல்லப்படுகிறதா?**

விடை: மூ-ம். ***90. இது - அகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள்; உகாரத்திலே யென்றுஞ் சொல்லுவர்கள்.***

அகாரார்த்த பலத்தாலும், உகாரார்த்தமான பகவத நந்யார்ஹ சேஷத்துவ பலத்தாலும், எம்பெருமானுக் கடிமை யாகும்போது, அவனுடைய முகமலர்ச்சிக் குறுப்பான பாக வதருக் கடிமையாயிருத்தலாம் என்று அர்த்த பலத்தால் பெறப் படுகிறது. பாகவத ரல்லாதாருறவும் நன்ருக உகாரத் தால் கழிக்கப் படுகிற படியாலும், அகாரத்தாலும் உகா ரத்தாலும் பாகவதருக்கடிமை யென்பது அர்த்தத்தால் சொல்

லப்படுகிறது. என்றாலும், நம: பதத்தால் கிடைக்கிற 'பாகவதருக் கடிமையாயிருத்தல்' ஆத்துமாவின் அந்தரங்க நிருபகதரூபமாகும். அதாவது ஆத்துமாவின் ஜீவநாடியான சொரூபமாகும். ஏனெனில், பாகவதாபிமானத்தை இவன் பெருவிடில் பகவதபிமானம் விட்டுப்போம். ஆதலால், நம: பதம் நமக்கு உபதேசிப்பது இதமேயாம்.

**வினு: பிரணவ, நமஸ்ஸுக்களால் முமுட்சுவுக்கு ஏற்படும் ஞான நிஷ்டைகளில் பேத முண்டா?**

**விடை:** உண்டு; அதெங்ஙனே யென்னில்,

***ரூ-ம். 91. ஈசுவரன் தனக்கேயாயிருக்கும்; அசித்துப் பிறர்க்கேயா யிருக்கும்; ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருக்கும் என்று முற்பட்ட நினைவு; அங்ஙனன்றிக்கே அசித்தைப் போலே தனக்கேயாக எனைக்கொள்ள வேணும் என்கிறது நமஸ்ஸால்.***

**வினு: ஈசுவரன் தனக்கேயாயிருக்கு மென்றுலென்ன?**

**விடை:** ஈசுவரன் சர்வ சுதந்திரனுனபடியால், சுய நலமியாகவே யிருப்பான். சகலகாரியங்களையும் தனக்குப் பேருகவே செய்துகொள்ளுகிற சுபாவமுடையவ னென்பதாம்.

**வினு: அசித்துப் பிறருக்கேயா யிருக்குமென்று லென்ன?**

**விடை:** அசித்தென்பது, அறிவற்ற வஸ்துவாகையால், தனக்கு வேண்டுமென்கைக்கு யோக்கியதையின்றி, பிறருக்கே ஆதீனப்பட்டுக் கிடக்கும். பிறருடைய பயனுக்காகவே அமைந்திருக்குமென்பதே யாகும்.

**வினு: ஆத்துமா பொதுவாயிருக்கு மென்பதெங்ஙனம்?**

**விடை:** ஆத்துமா, தான் மகாரவாச்சியனுகி அறிவுடைமையினுல் சுய நலங்கருதுகிறவனுகிறுன். இதுதான் தன்னைப் பார்த்தலென்பது. அவனைப் பார்த்தலென்பது: அகாரவாச்சியனுன ஈசுவரனுடைய பெருமைகளை யுணரும்போது. அவனுக்கே உரியவன் என்பதை யறியும்போதும் ஈசுவரன் பொருட்டே இருக்க எண்ணுகிறுன் என்பதே. இவ்வாறு முதல் பதமான பிரணவத்தின் பொருளை யனுசரித்துப் பார்க்கையில், ஆத்துமா சுயநல, பரநலங்களுக்கு மத்தியில் அகப்பட்டுத்தன் சொருபத்தின் உண்மையில் திகைக்கிறுன். உறுதிப் படவில்லை.

**வினு : இந்த விதமான இரண்டும் கெட்ட நிலை ஆத்துமாவுக்கு எப்போது ஒழிகிறது ?**

**விடை :** *ஆத்துமாவின் இரண்டுங் கெட்ட நிலைபோய், நிச்சய ஞானம் உண்டாவது நடுப்பதமாகிய நமஸ்ஸினுல் தான். எப்படியெனில், அசித்தானது பிறருடைய பயனுக்காகவேயாகி, தனக்கென்று ஒன்றில்லாமல் இருப்பதுபோல, ஆத்துமாவும் ஈசுவரனுக்கே இஷ்ட விநியோகமா யிருக்கிறதென்ற நிச்சய ஞானத்தை இந்த நமப்பதம்தான் வெளியிடுகிறது. இதற்குத் திடமான மேற்கோள் "தனக்கேயாக வெனைக்கொள்ளு மீதே" என்ற (திரு-2-9-4) பாசுரப்படி ஈசுவரனுக்கே ரஸமாம்படி, இவனை அவன் கொள்ளவேண்டுமென்று அபேட்சிக்கும் படி செய்கிறது இந்த நமப்பதம்.*

**வினு : ஈசுவரனுக்கே ரஸமாம்படி யென்ருல் அஃதெப்படி ? விளக்குக.**

**விடை :** *மூ-ம்.* ***92. அதாவது-போக தசையில் ஈசுவரன் அழிக்கும்போது நோக்கவேணு மென்றழியா தொழிகை.***

*அதாவது, ஈசுவரனேடு இவனும், இவனேடு அவனும் கலந்து பரிமாறி அனுபவிக்கும்போது, இந்தச் சேதனன் மீது ஈசுவரனுக்குண்டான அன்பின் அதிசயத்தாலே, இவனை உயர்த்தி வைத்துத்தான் தாழநின்று (குசேலரை சிம்மாசனத்தில் உட்காரவைத்து, கண்ணன் அவருடைய பாதங்களை விளக்கினது போல) விநியோகங் கொள்ளும்போது, இவன் தன்னுடைய அடிமையான சொரூபத்தைக் கருதி, ஆகா! நம்முடைய தருமத்துக்குச் சேராத காரியமாயிற்றே! என்று பின் வாங்கி ஈசனுடைய இஷ்டத்திற் கிசையாமல் அவனுடைய திருமுகோல்லாசத்திற்குப் பங்கம் விளைவிக்கலாகாது. "நாம் அவனுடைய சொத்து; உடையான் உடைமையை எங்கு வைத்தாலும் என்ன ? எப்படி வைத்தாலு மென்ன? அதன் லாப நஷ்டம் உடையவனுக்கே யன்ரே ?" என்று அவனுக்கு உகப்பாக நம்மை அமைத்துக்கொள்ள வேணுமென்பது நமஸ்ஸின் கருத்தாம்.*

**வினு : இப்படியிவன் 'தன் சொரூபம் அழியுமே' என்றஞ்சுவதற்குக் காரணமென்ன?**

**விடை:** *மூ-ம் :* ***93. அழிகைக்கு ஹேது - கீழே சொல்லிற்று ; மேலும் சொல்லும்.***

காரணமென்னவெனில், முதற்பதமான பிரணவத்திலும் ஆத்துமா பரனுக்கடிமை யென்று சொல்லி, இனியும் மூன்றும் பதத்திலும் பகவத் சேஷத்துவ சொரூபானு ரூபமான கைங் கரியத்தைச் செய்யும்போதும் ஆத்துமாவின் சொரூபம் சொல் லப்படுகிறபடியாலும், இந்தச் சேதனனை அவன் அனுபவிக்கும் போது இவனைப்பற்றிக் கவனிக்க வேண்டிய காரணம் ஏற்படு கிறது. ஆனால், இந்த நமப்பதம், ஈசுவர மகிழ்ச்சியைக் கவனி யாமல், தன்னுடைய சொரூபத்தை மாத்திரம் கவனிப்பதும் சுயநலரூபமான சுதந்திர புத்தியாதலால், அந்த எண்ணத்தை விட்டு, ஈசுவரனுடைய பாதுகாப்பையே எதிர்பார்த்திருப்பது தான் ஆத்துமாவின் 'முற்றிலும் பரதந்திரன்' என்ற சொரூப மாகிய நிலைமையை நன்றாய் வெளியிடுகிறது. ஒரு உதாரணம்:

பெரிய நம்பிகள் இராமநுசருடைய ஆசாரியர். ஒரு நாள் இராமாநுசர் தன் சீடர்களுடன் பெருந்திரளாக வந்துகொண் டிருந்ததைக் கண்ட பெரிய நம்பிகள் தமது சீடரான இராமா நுசருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். அப்போது இராமாநுசர் பதறுவதோ, பின்வாங்குவதோ ஒன்றும் செய் யாது அசையாமல் நின்றிருந்தார். அருகிலிருந்தோர் பெரிய நம்பிகளைக் கேட்க, அவர் சொன்ன பதில் 'என் குரு ஸ்ரீஆள வந்தார்போல் தரிசனமாயிற்று; சேவித்தேன்' என்றார், இராமாநுசரைக் கேட்டபோது, 'அவரிஷ்டத்திற் கிசைந்திருத்த லன்றோ என் கடமை' என்று பதிலளித்ததைக் கண்டு தெளிக.

ஆக, ஈசுவர முகமலர்ச்சிதான் நமக்குக் குறிக்கோள் ஆகுமே யொழிய, வேறு எந்த நோக்கமும் நமக்குத் தேவை யில்லை. நம் அபிப்பிராயத்தால் எவ்வித நன்மையுமில்லை. ஈசுவர அபிப்பிராயத்தால் நன்மையென்பதே நன்மையாகும். இதற்கு ஆட்சேபனையே கிடையாது. இந்த அமுதமயமான விசேஷார்த்தத்தை இந்த நமப்பதம் நமக்கு உதவுகிறது.

**வினா: இத்தகைய பரதந்திர நிஷ்டையின் வைபவம் யாது?**

**விடை: மூ-ம்: 94. இந்நினைவு பிறந்தபோதே க்ருதக் ருத்யன்; இந்நினைவில்லாதபோது எல்லா துஷ்க் க்ருதங்களும் க்ருதம்; இந் நினைவிலே எல்லா ஸுக்ருதங்களும் உண்டு: இதின்றிக்கே யிருக்கப் பண்ணும் யஜ்ஞாதிகளும், ப்ராயச்சித்தாதிக ளும் நிஷ்ப்ரயோஜனங்கள்; இது தன்னாலே எல்**

**லாப் பாபங்களும் போம்; எல்லாப் பலன்களும் உண்டாம்.**

இந்நினைவு என்கிருர். எந்த நினைவு என்னில், இந்த நமப் பதத்தினுல் கிடைத்த அத்யந்த பாரதந்தரிய நிஷ்டையின் நினைவு. அதாவது, 'ஆத்துமாவின் சேஷத்துவ சொருபத்தை யனுசரித்த சாதாரண பாரதந்திரியத்தைக் காட்டிலும், ஈசுவர னுடைய இஷ்ட விநியோகமாகத் தன்னை அமைத்துக் கொள்ளு கிற முழு பாரதந்திரியமே ஈசுவர சம்மதமானது' என்கிற இந் நினைவு உண்டாகவேணும். சுதந்திரமாகிய தன்னிஷ்ட மாக பகவத் பரதந்திரனுயிருத்தலாகிற விரோதியும் கழிக்கப் பட்ட முழு பாரதந்திரிய சொரூப நிஷ்டையை ஒருவன் அடை யப்பெறில், தன் உஜ்ஜீவனத்தின் பொருட்டுச் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்து முடித்தவனுகி ருன். இந்த முழு பாரதந்தரியமின்றி, வெறும் சேஷத்துவ பாரதந்தரியத்தில் சுயநல உணர்ச்சியென்கிற தன்னிஷ்ட ரூப மாகிற ஆத்துமாபகார குற்ற மிருப்பதால், இவன் சகல பாவங் களையும் செய்தவனுகிருன். ஒரு அசேதனப் பொருள், உடை யவன் நலத்திற்குப் பயன் படுத்திக்கொள்ள உதவுவது போல, இந்தச் சேதனப் பொருளான ஆத்துமாவானது, உடை யானுகிய உயர்வற உயர்ந்த பரனுடைய உடைமையாக ஆன போது, ஈசுவரன் இவ்வாத்துமாவின் முழுப் பாரதந்தரிய நிஷ்டையைக் கண்டு அவனுக்கு உண்டாகும் பிரீதி அதி சயத்தாலே, எல்லாவித புண்ணியங்களையும் இவன் செய்து முடித்தவனுகிருன்.

**வினு: இவன் பாப விமோசனத்துக்காக, சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் பரிகாரங்களால் பயனில்லையா?**

**விடை:** தன்னை ரட்சித்துக் கொள்ளத் தேடிக்கொள்ளும் சாஸ் திர பரிகாரங்கள் யாவும் பயனற்றவையே. குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுவது போலாம்.

**வினு: எப்படித்தான் தீர்மானிக்க வேண்டும்?**

**விடை:** நம்மைக் காக்கக் கடமைப் பட்டவன் நாராயணனே யன்றி நாமுமல்ல, பிறருமல்ல. ஏனெனில், நம் உடலும் உயிரும் அவனுடைய உடலென்றும், அவன் ஒருவனே உலக உயிரென்றும் திடமாக உணர்ந்து, அவனுடைய சுவாதீனத்திலிருக்கிற உயிரையும் உடலையும் நம்முடை யதாகத் திருடி அபகரித்துக்கொண்டு, தேக நலத்தைப் பற்றியாவது, ஆத்தும நலத்தைப் ப்ற்றியாவது கவலைப்படு

வதை விட்டொழித்துப் பயமற்றிருத்தலே இந்த நமப் பதத்தின் தேர்ந்த பொருளெனத் தெளிந்திருத்தலே முடிவு.

**வினு: இந்தத் தீர்மானத்தினுல் என்ன ஏற்படுகிறது?**

**விடை:** ஒரு குடியானவன் மிகவும் பாடுபட்டுத் தன் நிலத்தில் பயிர் செய்து விளைந்த பலனை எவ்வளவு மகிழ்வுடன் தன் வீடு கொண்டுபோய்ச் சேர்த்துத் தன்னைச் சேர்ந்தவருடன் அனுபவிப்பானே அதுபோல, பாழ்பட்டிருந்த இவனைப் பண்படுத்தி ஞானப் பயிர் செய்து இந்த முழுப் பாரதந்தரிய நிஷ்டையைப் பலனுகப் பெற்ற குடியானவனுன பரம புருஷன் இவன்மீது பிச்சேறி அருள் செய்ய ஏற்படுகிறது. அந்தப் பேருளாலே, முன்பு ஈசுவரனுடைய அருளில்லாமையால் ஏற்பட்டிருந்த இவனுடைய பாவங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்துபோம். இந்தப் பிறவியைக் கழிப்பது முதற்கொண்டு, அந்தமில் பேரின்பத்தடியாருடன் கூடிவாழும் பலம் வரையிலுமான எல்லாப் பலன்களும் உண்டாகும்.

### நாராயண பதார்த்தம்

**: இனி மூன்றும் பதமாகிய நாராயணுய என்பதன் பொருள் யாதென்பதையும் விரித்துரைப்பீராக.**

சூ-ம். **95, நாராயணனென்றது—நாரங்களுக்கு அயந மென்றபடி.**

**விடை:** திருமந்திரமானது வட மொழியிலிருப்பதால், அதன் விரிவுரையைத் தெரிந்துகொள்ள வட மொழி இலக்கணத்தை அனுசரிக்க வேண்டியது அவசியமாகும். வடமொழி இலக்கண அறிவில்லையெனில் திருமந்திரப் பொருளை உள்ளபடி யுணர இயலாது. இந்த நாராயண பதம் தனிப்பதமல்ல; பகாப் பதமல்ல; பகுபதமாயிருக்கிறது. அதாவது 'ஸமஸ்த பதம்' என்று வட நூலார் சொல்லுவர். இரண்டு பதங்கள் சேர்ந்து ஒரு சொல்லாகி யிருக்கிறது. அவ்விரண்டு பதங்களும் இரண்டுவித புணர்ச்சிகளைப் பெற்று இரண்டர்த்தங்களை வெளியிடுகின்றன. அவையாவன:

i "நாராணும் அயநம் ய: ஸ: நாராயண:"=நாரங்களுக்கு இருப்பிடமாக இருப்பவன் எவனே, அவன் நாராயணன். இது, 'தத்புருஷ ஸமாஸப் பொருள்.

ii "நாரா: அயநம் யஸ்ய ஸ: நாராயண:"=நாரங்களை இடமாகவுடையவன் எவனே, அவன் நாராயணன். இது, பஹுவ்ரீஹிஸமாஸப் பொருள்.

ஆக, இச்சொல் இரண்டுவித பதப் புணர்ச்சிகளால் பொருள் விவரிக்கப்படுகிறது.

**வினு: இவ்விரண்டனுள் தத்புருஷ ஸமாஸப் பொருள் யாது?**

**விடை:** *'நாரங்களுக்கு அயநன்' என்பது தத்புருஷ ஸமாஸப் பொருள்.*

**வினு: நாரங்கள் என்றால் என்ன?**

**விடை:** *மூ-ம். **96. நாரங்களாவன-நித்ய வஸ்துக் களினுடைய திரள்.***

**வினு: 'நாரங்களென்றால் நித்திய வஸ்துக்களினுடைய திரள்' என்று எப்படிச் சொல்லலாம்?**

**விடை:** *நர = நித்திய வஸ்து; நார = நித்திய வஸ்துக்கள்; நாரா: = நித்திய வஸ்துக்களின் சமூகங்கள்.*

**வினு: 'நாரா: = நித்திய வஸ்துக்களின் சமூகங்கள்' விளக்குக.**

**விடை:** *'நர' என்ற பதத்திலுள்ள 'ர' என்கிற எழுத்து 'ரீங்க்' என்ற ரீங்காரத்திலிருந்து தோன்றியது. அதன் பொருள் 'க்ஷயே' என்ற தாதுவினால் 'நசித்தல்' என்றாகி, முதலெழுத்தாகிய நகாரத்தால், 'நசித்தலில்லாதது' என்று ஆகி, நித்தியமான வஸ்து வென்ற பொருளை இந்த 'நர' என்ற பதம் வெளியிடுகிறது. இந்த 'நர' என்ற ஒருமைப் பெயரானது, "நார" என்று பன்மைப் பெயராகி, 'நித்திய வஸ்துக்கள்' என்றாகிறது. அந்தப் பன்மைப் பெயராகிய 'நார' பதமானது, மறுபடியும் 'நாரா:' என்று பன்மையின் பன்மையாகி, 'நித்திய வஸ்துக் களின் திரள்' என்று பொருள் படுகிறது.*

**: நித்திய வஸ்துக்களின் திரள் யாவை?**

**விடை** *மூ-ம், **97. அவையாவன: ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாந சக்த்யாதிகளும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளும், திருமேனியும், காந்தி ஸௌகுமார்யாதிகளும், திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யசூரிகளும், சத்ர சாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும், கணுதிபரும், முக்தரும், பரமாகாசமும், ப்ரக்ருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும் அண்டங்களும், அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களும்.***

இவை யாவும் நாரா: பதத்தின் பொருளாகும் என்றுணர்க. அதாவது, 'ஜ்ஞாநந்தாமலத் வாதிகள் முதல் பரமாகாசமும்' என்பதீருக நித்திய விபூதியைச் சொல்லி, 'ப்ரக்ருதியும்' என்று தொடங்கி, 'தேவாதி பதார்த்தங்களும்' என்றவரை லீலா விபூதியையும் சொல்லிற்று.

**வி௵: இவை ஒவ்வொன்றின் விவரங்களைப் பற்றியும் தெரிவிக்க.**

**விடை:** முதன் முதலில் நித்திய விபூதிக்குச் சுவாமியான ஈசுவரனுடைய திவ்ய ஆத்தும சொரூபத்தின் முக்கிய அடையாளங்கள் சொல்லப்படுகின்றன. அதாவது, இந்தப் பரப்பிரம்ம வஸ்து இப்படிப்பட்டதென்று சொல்லிக் காட்ட வேண்டியதற்கான தருமங்கள்.

ஞானம், ஆநந்தம், அமலத்துவம், அநந்தம் என்பன இவற்றில்,

**ஞானம்:** தன்னைத்தானே உணரவல்ல ஞானமானது எல்லையற்று ஒளி மயமாகப் பிரகாசித்துக்கொண்டிருத்தல்;

**ஆநந்தம்:** தன்னுடைய அகண்ட ஞானம் எதனுலும் பாதிக்கப்படாமல் அனுகூலமாயிருத்தல்;

**அமலத்துவம்:** சகல சராசரங்களுக்குள்ளும் புறமும் தான் நிறைந்து இருப்பினும், அவற்றின் குணதோஷங்களுக்குச் சம்பந்தப்படாமல் அதீதனுயிருத்தல்;

**அநந்தம்:** காலம், இடம் வஸ்துக்களால் பாதிக்கப்பட முடியாதிருத்தல்;

இவ்வாறு நிரூபிக்கப்பட்ட பரப்பிரம்மத்தின் பிரிக்க முடியாத தரும்ங்களாக விளங்கும் குணங்கள், புஷ்பத்துக்கு மணம் போலேயுள்ளவை சொல்லப்படுகின்றன. முன்பு தானுன தன்மை சொல்லப்பட்டது. இப்போது தன் திவ்யாத்துமாவானது எந்தக் குண தருமங்களுக்கு ஆலயமாயிருக்கின்றதோ அக்குணங்கள் சொல்லப்படுகின்றன. அவை யாவன:—

1. ஞானம், 2. சக்தி, 3. பலம், 4. ஐச்வரியம், 5. வீரியம் 6. தேஜசு எனப்படுகிற ஆறு திவ்ய குணங்கள்.

**1. ஞானம்:** எல்லாவற்றையும் ஏக காலத்தில் அறிவதற்குச் சாதனமாயிருக்கும் முழுவுணர்வு.

**2. சத்தி**—வேருருவராலும் செய்து முடிக்க முடியாதவற்றைத் தான் செய்து முடிக்கத் தக்க வல்லமை.

**3. பலம்:** சருவத்தையும் தான் தரித்துக்கொண்டிருக்கிற தான சாமர்த்தியம்.

**4. ஐச்வரியம் :** எல்லாரையும் எல்லாவற்றையும் ஏவி, நடத்துகிற நியமன சாமர்த்தியம். தானே ஏவுதற் கர்த்தா வாக இருக்கிற பெருமை.

**5. வீரியம் :** விகாரப் படாமை. அதாவது அண்டாதிகளின் காரண காரிய நிலேகளில், தன்னுடைய இயற்கையில் எந்தவித மாறுபாடுகளேயும் அடையாதிருத்தல்.

**6. தேஜசு :** பிறருடைய கட்டுக்கடங்காமை. தானே பிறரையடக்கியாள்கின்றவனுய், தன்னே யடக்கியாள்கின்றவ னெருவனேயும் பெருதிருக்கின்ற உயர்வற வுயர்ந்த நிலேமை.

**வாத்ஸல்யாதி குணங்களின் விவரமென்ன?**

**விடை :** கீழே சொல்லப்பட்ட ஞானசக்தியாதி ஆறு குணங்களிலிருந்து தோன்றிய குணங்களாகும்.

**இவை யெத்தனே?**

**விடை :** இத்தனேதான் கலியாண குணங்களென்று கணக்கிட்டுச் சொல்ல யாருக்கும் தரமன்று. ஆயினும் அவற்றுள், ஆத்துமாக்கள் கடைத்தேறுவதற்கு எந்தக் குணங்கள் அவசியம் ஈசுவரனிடத்தில் வேண்டப்படுகின்றவோ, அவற்றை மாத்திரம் நாம் இங்கே அறியவேண்டியது அவசியமாம். தடாகத்தின் நிறையத் தண்ணீரிருப்பினும், விடாய்த்தவன் தன் தாகம் தணிய எவ்வளவு குடிக்கலாமோ அவ்வளவுதான் குடிக்கச் சாத்தியமே யொழிய, தடாக நீர் முழுவதையும் பருக வேணுமென்பது சாத்தியமுமில்லே. வேண்டியதுமில்லேயன்ருே? அதுபோலவே, ஜன்மவிடாய் தீர அவனிடத்தில் நாம் எதிர்பார்க்க வேண்டிய குணங்களே மட்டிலும் பயன் படுத்திக் கொண்டால் போதுமானது.

**வினு : அவை எவை?**

**விடை :** 1. வாத்ஸல்யம், 2. சௌசீல்யம், 3. சுவாமித்வம், 4. சௌலப்பியம், 5. மார்த்தவம், 6. ஆர்ஜவம், 7. ஸௌகார்த்தம், 8. சாம்யம், 9. காருண்யம், 10. மாதுர்யம், 11. காம்பீரியம், 12. ஔதாரியம், 13. சாதுரியம், 14. ஸ்தைர்யம், 15. தைரியம், 16. சௌரியம் முதலான எண்ணில் தொல் புகழ்களாகும்.

**வினா: குணங்களுக்குப் பிறகு யாது?**

**விடை:** இத்தகைய மங்களகரமான குணங்களுக்குத் தக்க திவ்ய திருமேனியும். அதாவது தன்னுடைய அசாதரண மான திவ்ய மங்கள விக்கிரகத்தைக் குறிக்கும். இந்தத் திரு மேனியுடன் இவனுடைய இச்சையால எடுத்த வேறு திரு மேனிகள் ஒத்திராமையாம்.

**வினா: விக்கிரகங்களுக்குப் பிறகு கூறப்படுவன யாவை ?**

**விடை:** அந்தத் திருமேனிகளின் குணங்களான செளந் தரிய, செளகுமார்ய, செளகந்த்ய, லாவண்ய, யெளவனுதி களும் சொல்லப்படுகின்றன. பிறகு திவ்ய ஆபரணங்கள்.

**வினா: திருமேனிகளின் பல வேறுபாடுகள் எவை?**

**விடை:** 1. பரமபதத்தில் நித்யமுக்தர்களால் அனுபவிக் கப்படும் மேலே சொன்ன அசாதாரண திவ்ய மங்கள விக்கிரஹம்.

2. பிரம்ம ருத்திரேந்திராதி தேவர்களுக்கும், சனக,சனந் தன, சனத்குமார, சனத்ஜாத முதலான மகா இருடிகளுக்கும், சுவேத த்வீப வாசிகளுக்கும் தரிசனமளிக்கும் சங்கருஷண, பிரத்யும்ந, அநிருத்தாதி வியூஹ மூர்த்திகள்.

3. சாதுக்களைக் காக்க அவதரிக்கும் ஸ்ரீராமகிருஷ்ணுதி அவதாரத் திருமேனிகள்.

4. சகல ஜீவகோடிகளின் இதயத் தாமரைகளில் வீற் றிருக்கும் அந்தரியாமியான ரூபங்கள்.

5. கோயில்கொள் தெய்வங்களாய், அடியவர்களை அருள்பாலித்துச் சேவை சாதிக்கிற அர்ச்சாவதாரத் திருமேனி கள்.

ஆக, இத்தனை வித திவ்ய திருமேனிகளையும் தன் இச்சை யால் அங்கீகரித்தான் ஈசுவரன்.

**வினா: இனி ஆபரணங்களைத் தெரிவிக்க.**

**விடை:** கிரீடம் முதல் திருவடி சதங்கை வரையிலுமான அத் திருமேனிகளுக்குச் சாத்தும் பல கலன்கள். அநுகூலரான பக்தர்களுக்கு ஆபரணங்களாகத் தென்படா நின்ற அழகுக்குச் சிறப்பைத் தரும் சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் முதலான ஐம்படைகள். இவ்வைந்தாயுதங்களும் பிரதிகூலரான துஷ்ட ருக்குப் பயத்தை யுண்டுபண்ணிக் கொண்டிருக்கும்.

**வினு: பிறகு என்ன?**

**விடை:** இவ்வடிவழகுக்குத் தக்க அநுபவ நாச்சியார்களான பெரிய பிராட்டியார், பூமி தேவியார், நீளைப் பிராட்டியார் முத லான அநேக நாச்சிமார்கள். ஆக, திவ்ய மங்கள விக்கிரஹ வடிவழகும், திருவாபரண, திவ்யாயுத அழகுகளும், பிராட்டி மார்களின் சேர்த்தியழகும், அவனுடைய கலியாண குணனு பவ அழகும், இவையெல்லாம் அனுகூலமாக அனுபவிக்கப் படும் பேரின்பமே நித்தியமுக்தர்களின் திருமாலடியார்களின் ஆனந்தவாழ்வாம்.

**வினு: இனியும் என்ன?**

**விடை:** காட்டிலெரித்த நிலவாகாமல், அனுபவ ரசிகர்களான நித்யமுக்தர்களுக்குப் பகவத் கைங்கரியசாதனங்களான குடை, சாமரம், திருவால வட்டம், திருக்காவேரி செம்பு, வட்டில்கள், ஆசன சயனுதிகள். பரமபத நான்கு வாசல்களில் கிழக்கு வாயிற் காப்போர் சண்டன் பிரசண்டன் என்கிற இருவர், தெற்கு வாசலில் பத்திரன் சுபத்திரன் என்னுமிருவர், மேற்கு வாசலில் ஜயன் விஜயன் என்ற இருவர், வடக்கு வாசலில் தாத்ரு விதாத்ரு என்போர் வாசல் காப்பாளர்கள். கணுதிப ரும் அவ்வாறே நான்கு வாசல்களில் முறையாகக் குமுதன், குமுதாக்கன், தாமரைக் கண்ணன், வாமனன், சங்கு செவி யன், கட்செவி கண்ணன், நான்முகன், நல்லவன் முதலான சேனுதிபதிகள். மேற்கூறிய இத்தனை பேரும் பிரகிருதி சம் பந்த மற்ற நித்திய சூரிகள். பிரகிருதி சம்பந்தத்திலிருந்து விடுதலையடைந்து பரமபதம் சென்ற முக்தாத்துமாக்கள், நித்திய சூரிகளுடன் சேர்ந்து பகவதனுபவத்தைச் செய்கின்ற வர் அளவற்ற ஆத்துமாக்கள். இவ்வித வைபவாதிசயங் களுடன் நித்திய முக்தருக்கு நிரந்தர பிரம்மாநந்தத்தைக் கொடுத்துக் கொண்டு, பரமபதத்தில் ஈசுவரன் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கிருர்.

**வினு: பரமபதமும்கூட நாம் வசிக்கிற பூலோகம் போலத் தானிருக்குமா?**

**விடை:** இல்லை. ஈசனுடைய விபூதியாகிய ஐச்வரியம் இரு வகைப்படும். ஒன்று லீலாவிபூதி; மற்ருென்று நித்யவிபூதி. 'லீலாவிபூதி யென்பது கால தத்துவத்துக்கு வசப்பட்டு மண், நீர், எரி, கால், விசும்பு எனும் ஐம்பெரும் பூதங்களால் ஆக் கப்பட்டு காரண காரியங்களாக மாறுவனவாகி, சத்துவ, ராஜச, தாமச குணங்களையுடையனவாய்க் கரும வசப்பட்ட தேவ, மானிட, மிருக, தாவராதி ஜீவாத்துமாக்களுக்கு வாசஸ்

தானங்களாய், மறைவதும், தோன்றுவனவாயுமிருக்கின்ற பிர கிருதி மண்டலங்களாகும். அந்த அண்டங்களுக் கெல்லாம் அப்பாற்பட்டுப் பரமபத எல்லையாகிய விரஜாநதிக்கு அக்கரையில் பரமபதமானது இன்று நாளை என்ற கால சக்கரம் நடையாத இடமாய், ஐந்துவித சுயம்பிரகாச சக்திகளுடன் சுத்த சத்துவ அசித்தினால் ஆக்கப்பட்டதாய் ஞான ஜோதியுடன் பிரகாசிக்கும் விகாரமற்ற திவ்ய தேச விசேஷமாயிருக்கும்.

**வினா: பஞ்ச சக்திகள் யாவை?**

**விடை:** பரம், இஷ்டி, புமான், விசுவம், நிவிருத்திகளாகிற பஞ்சோபநிஷண் மயங்கள். இவற்றால் ஆக்கப்பட்ட நித்திய நாட்டைத்தான் அப்ராகிருத உலகமான பரமபதமென்று சொல்லுவது.

**வினா: இனி எதைப் பற்றிச் சொல்லப்படுகிறது ?**

**விடை:** விரஜா நதிக்கு இப்பாற்பட்ட பிரகிருதி மண்டலத்தின் விவரம் சொல்லப்படுகிறது. இது பகவானுடைய ஆக்கி அளித்து அழிக்கும் விளையாட்டுக்கு உபகரணமாயிருப்பதால், விபூதியென்று பெயர் பெற்று விளங்குகிறது. காரணாவஸ்தையில் சேதனா சேதனங்கள் ஈசுவரனுடன் ஒன்றுபட்டு மெழுகி லொட்டிய தங்கம்போலிருக்கும். பிறகு கால முறையைக் கணக்கிட்டுப் பகவான் தன்னிடமுள்ள சேதனா சேதனங்களைக் காரியாவஸ்தைக்குக் கொண்டு வருகிறான். இவ்வாறு மாறி மாறிப் பிரவாக ரூபமாக நித்தியமாக நடக்கும். ஆக, இதுவரை லீலாவிபூதி சொல்லப்பட்டதாயிற்று. இவையே 'நாரா:' என்ற முற்பகுதியின் பொருளாகும்.

**வினா: அதற்கடுத்த பிற்பகுதியாகிய 'அயந' பதத்தின் பொருள் யாது?**

**விடை:** மூ-ம். **98. அயநமென்றது – இவற்றுக்கு ஆச்ரயம் என்றபடி.**

அதாவது, அயந பதம் ஆச்ரயம் (தங்குமிடம்) என்று சொல்லுகிற சொல்லாதலால், முற்பகுதியில் நாரா: பதத்தில் சொல்லப்பட்ட சகல சேதனா சேதனங்களுக்கு இருப்பிடம் ஆகிறது யென்றுணர்க. இதுவரை தத்புருஷ சமாஸார்த்தத்தின் கருத்துச் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இனி, அடுத்த பகுவ்ரீஹி சமாஸார்த்தம் சொல்லப்படுகிறது. தத் புருஷ சமாஸத்தால் ஈசனுடைய வெளி வியாப்தி சொல்லப்பட்டது.

**வினு : அந்த பகுவ்ரீஹி சமாஸம் பொருள் யாது?**

## மூ-ம். 99. அங்ஙனன்றிக்கே இவை தன்னை ஆச்ரயமாக வுடையன் என்னவுமாம்.

**விடை :** அதாவது, பகுவ்ரீஹி சமாஸத்தால் இந்தச் சகல சராசரங்களை இடமாகவுடையவன் என்று பொருளாகிறது. இதனுல், ஈசுவரனுடைய 'உள் பரவியிருத்தல்'சொல்லப்பட்டதாகிறது. தத்புருஷனுல் ஈசுவரனுடைய வெளி நிறைவும், இந்த பகுவ்ரூஹியினுல் உள் நிறைவும் சொல்லப்படுகிறது. ஈசுவரன் பிரிக்கமுடியாத கல்யாண குணங்களை யுடையவனுதலால், இந்த இரண்டாவது புணர்ச்சியின் அர்த்தத்தால் சேதனு சேதனங்களுக்குள் ஈசுவரனுடைய உள் வியாப்தியைச் சொல்லும்பொழுது குணங்களை யொழியச் சொல்லவேணும். அதாவது குணங்களைத் தவிர மற்ற வஸ்துக்களை இடமாகவுடையவனென்று சொல்லவேணும். ஈசுவரனுடைய உள் பரவியிருத்தலை (அந்தரியாமியை)ப் பற்றிச் சொல்லுகையில் ஈசுவரன் குணங்களோடு கூடியே யிருப்பவனுதலால், தன் குணங்களில் தான் வியாபித்திருத்தலென்பது 'தன் தோளின் மேல் தான் ஏறினுன்' என்பதுபோல ஆகுமாதலால் குணங்களையொழிய பரமாத்துமாவின் உள் நிறைந்திருத்தலைச் சொல்லவேண்டும்.

**வினு : இவ்விரண்டுவித புணர்ச்சிகளால் இன்னும் கிடைக்கும் கருத்துகளுண்டோ?**

**விடை :** உண்டு. அவையாவன :

## மூ-ம். 100. இவை யிரண்டாலும் பலித்தது-பரத்வ சௌலப்யங்கள்.

அதாவது, 'நாராயங்களுக்கு அயநன்', 'நாரங்களை அயநமாக வுடையவன்' என்ற இவ்விரண்டு வித அர்த்தங்களால் கிடைக்கிறதென்னவெனில், ஈசுவரன் தன்னையொழிந்த மற்ற சேதனு சேதனங்களுக்குத்தான் ஆதாரனுயிருத்தலாகிற **பரத்துவமும்**, இப்படி உயர்வற வுயர்ந்த தான் சகல சராசரங்களிலும் அந்தராத்துமாவாகத் தன்னையமைத்துக் கொண்டிருத்தலாகிய **சுலபன்** என்னும் குணமுமாம். ஒவ்வொரு 'சமாஸத்தாலும் பரத்துவ சௌலப்யங்கள் சொல்லலாம்.

**வினு : வேறு விதத்தால் இவ்விரண்டு சமாஸங்களுக்கும் பொருள் சொல்ல இடமுண்டோ?**

**விடை :** உண்டு. அவை :

## மூ-ம். 101. அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமு மாகவு மாம்.

அதாவது, 'நாரங்களை இடமாக வுடையவன்' என்றதனுல், ஈசுவரனுடைய அந்தரியாமித்துவம் வெளியாயிற்று. வேதங்களின் ஓர் பகுதியாகிய 'அந்தரியாமி பிராம்மணங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற பிரமாணங்களுக்குப் பொருத்தமாக இருத்தலை யுணர்க.

'நாரங்களுக்கு இடமானவன்' ஆதலால், நாராயணனுகிறன் என்ற இவ்வர்த்தத்தில், இடமானவன் என்பதற்கு வாசகமாயிருக்கும் 'அயந' பதமானது இரண்டு தாதுக்களினுல் ஏற்படுகிற பொருள்களுடன் கூடியதாயிருக்கிறது. அவையாவன :

1. "ண்" = கதௌ = கதி, அல்லது போக்கு என்ருகிறது.

2. "அய" = கதௌ = ஆலம்பனம் = போய்ச் சேருமிடம் என்பது.

1. கதி = means ; 2. ஆலம்பனம் = Goal.

ஓர் உதாரணம் :—அயக்காந்தம் (magnette) = ஈசன்.

இரும்புத் துணுக்குகள் (Iron-stealings) = நாரங்கள்.

இரும்புத் தூள்கள் இழுக்கப்படுவதும் காந்தத்தாலே. இழுக்கப்பட்டவை ஒட்டிக்கொண்டிருப்பதும் காந்தத்திலே.

1. அதுபோல நாரங்களானவை அவனுகிற தன்மையாலே அவனையடைகை. 'நாரா: + அநேக + ஏநம் + யந்தி, இதி நாராயண:' இந்தப் பொருளால் ஈசுவரனுடைய உபாயத்வம் பெறப்பட்டது. இது, 'ண்' கதௌ என்ற உயிர்ப் பொருளால் கிடைத்தது. இது கரணே வ்யுத்பத்தியாகும். (செய்வினையின் கருத்து.)

2. 'அய' கதௌ என்ற உயிர்ப் பொருளால் (தாதுவால்) கர்மணி வ்யுத்பத்தியில் (செயப்பாட்டுவினையால்) வந்த 'அடையப்படுகை' என்ற கருத்து வெளியாகிறது. அதாவது "நாரை: + ஈயதே + இதி நாராயண:" = "நாரங்களினுலே அடையப்படுமவன்" என்ருகிறது. இதனுல் ஈசுவரனுடைய 'உபேயத்வம்' சொல்லப்பட்டது. ஆக, தத் புருஷ சமாஸத்தால் இரண்டு தாதுக்களின் அர்த்தங்களைக் கொண்டு நாராயணனுடைய உபாத்வ, உபேயத்வங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. இங்கு, ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. அஃதென்னவென்ருல்,

நாரங்களையிடமாகவுடையவன்' என்று ஈசனுடைய உள்ளிருப்பைச் சொல்லும் போது குணங்களைத் தவிர்த்துச் சொன்னது போல, 'நாரங்களுக்கு இடமானவன்' என்ற பொருளால் கிடைத்த ஈசுவரனுடைய உபாயத்வ உபேயத்வங்களைச் சொல்லும் போது நாரசப்தத்தில் உள்ள அசேதனங்களையொழியச் சொல்ல வேண்டும்.

**வின: அசேதனங்களை ஏன் ஒதுக்க வேண்டும்?**

**விடை:** அசேதனங்கள் அறிவற்றவையாதலால், அறிவுள்ள வஸ்துக்களுக்குத்தான் உபாய உபேயங்களை அறியும் ஞான நிஷ்டை இருக்கவேண்டுமேயொழிய, அவைகளுக்கு உபாய உபேயங்கள் இயற்கையிலில்லை. ஆதலால், அவற்றையொழித்துச் சேதனர்களுக்கு மட்டிலும் சொல்ல வேண்டும்.

**வின: இந்த அயநபதத்தில் இன்னும் ஏதாவது சிறந்தபொருள்களுண்டோ?**

**விடை:** ஆம். உண்டு அஃதென்னவெனில்,

**சூ-ம். 102. "எம்பிரான் எந்தை" என்கையாலே ஈசுவரனே எல்லா உறவுமுறையும் என்று சொல்லும்.**

**வின: ஈசுவரனே சர்வவித பந்துவென்று எப்படி நிர்ணயிப்பது?**

**விடை:** 'ண்' 'அய' என்ற அயநபதத்தின் தாதுக்களால் கிடைத்த செய்வினை, செயப்பாட்டு வினைகளிரண்டினுலும் ஈசவரனுடைய உபாய உபேய சொரூபங்களில், உபேயத்தின் பரிபூரணத்தைத்திருமங்கையாழ்வார் 'எம்பிரானெந்தை'என்ற பாட்டினுல் அருளிச் செய்கிருர். உபேயத்தில் நிறைவிருக்கிருதென்ருல் உபாயத்தில் ஏதோ குறைவு இருப்பதாகத் தெரியவருகிறது. அதை ஆராய்வோம். உபாயம் என்ருல் நமக்காகாதவற்றை விலக்கவும், ஆகவேண்டியதை ஆக்கவுமான காத்தல் காரியத்துக்குப் பெயராம். உபேயம் என்ருல், இவ்வாறு ஈசன் காத்ததன் பயனுக ஏற்படும் பகவதனுபவமாகும். ஆக, (1) அவனையடையும்படியாகச் செய்கிறவனும் அவன். (2) அடைந்ததன் பயனுக அடையப்பட்டது பகவானுடைய அனுபவமே. இப்போது திருமங்கையடிகள் உபேயத்தைச் சொல்லுகையில் அவன் திருவுடையவனுயும், குணங்களையுடையவனுயும், திவ்ய மங்கள விக்கிரகமுடையவனுயும் சொல்லப்படுகிருன். நாராயணனுடைய திருவுடைமையும், குணமுடைமையும், திருவுரு

வுடைமையும் சேதனனுக்கு அனுபவமாயிருப்பதால் உபேயமாயிருக்கும். இப்படிப்பட்ட நாராயணன் உபாயமாகும் போது திருவுக்கும், குணங்களுக்கும் உபாயத்தில் சம்பந்த முண்டா என்னில், அவை உபேயத்தில் சம்பந்த மாத்திரமே யொழிய, உபாயத்தில் வந்தால் ஈசுவரன்தான் உபாயனுகிருன். அடைமொழிகளாகச் சொல்லப்படுகிற தருமங்களுக்கு உபாயத்துவமில்லை. ஆதலால் அவனுடைய விசேஷணங்களுக்கு உபேயத்வமாத்திரமே உண்டு. உபாயத்வம் இல்லை. விசேஷியனுன இறைவனே சர்வ ரட்சகனுனபடியால், ஆழ்வார் தன்னுடைய பாதுகாப்புக்கு நாராயணனே உபாயனென்றும், அவனே உபேயனென்றும் அருளிச் செய்தார். ஆக, ஈசுவரன் சகலவித பந்துவாக இருப்பதை இந்த அயந பதம் வெளியிடுகின்றது.

**விஞ : ஈசன் சர்வவித பந்துவாகிச் செய்வதென்ன ?**

**விடை : சூ-ம் *103. நாம் பிறர்க்கான அன்றும் அவன் நமக்காயிருக்கும்.***

நாம் அவனுக்கே அடிமையாயிராமல், தன்னோடு ஒட்டற்று சமுசாரிகளுக்கு அடிமைப்பட்டு அவர்களுக்கு நல்லவராய் இருந்த காலத்திலும், அவன் நம்மைவிடாமல், தன்னுடைமையாயிருக்கிற சம்பந்தம் ஒன்றையே நினைத்து, நமக்கு நல்லவனுயிருந்து காப்பாற்றுகிருன்.

**விஞ : அவன் நமக்கு நல்லவனுயிருத்தலெப்படி ?**

**விடை : சூ-ம். *104. இராமடம் ஊட்டுவாரைப்போலே உள்ளே பதிகிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக் கொண்டு போரும்.***

அதாவது, சிலர் கண்காண நேராக வந்து கேட்டு உண்டு ஜீவியாமல் பட்டினி கிடந்து திரிவார்களைத் தேடிப்பிடித்துவரச் செய்து, விடமாட்டாத கருணையினுல் அசல் தெரியாதபடி இராமடத்திலே உண்பிக்கும் தார்மிகனைப் போல, சர்வஜீவதயாபரனுன அவனை வணங்காமல் திரிகிற அஞ்ஞானிகளையும் கைவிடாமல் அவர்களுக்குத் தெரியாமல் அந்தராத்துமாவாய் நின்று, தனக்கும் இவர்களுக்கு முள்ள நித்திய உறவாகிய சத்தையே காரணமாகக்கொண்டு காத்து ரட்சிக்கிருன்.

**விஞ : ஆக, நாராயண பதப் பொருள் யாவும் சொல்லப் பட்டதாயிற்ரு ?**

**விடை :** ஆம் ; நாராயண பதப்பொருள், முக்கியமாகப் புருஷார்த்த சொருபத்தைச் சொல்ல வந்தது. ஆதலால், அந்த புருஷார்த்தமாகிய பகவத் கைங்கரியத்தை யங்கீகரிக்கும் பிரதி சம்பந்தியான நாராயணனைப் பற்றி இதுவரை சொல்லப் பட்டது. இனி, அந்த நாராயணனுக்குச் செய்யப்படும் குற்றேவல்களைப் பிரார்த்திக்கிற விதத்தை வெளியிடுகிற நான்காம் வேற்றுமை யுருபாகிய' 'ஆய' பதத்தின் கருத்துரை சொல்லப்படுகிறது.

**வினு : திருமந்திரத்திலும், திருத்துவய மந்திரத்திலும் மூன்றிடங்களில் இந்த நான்கனுருபு விஷயம் பேசப்படுகிறதே. சொன்னதையே சொல்லுதலாகிற குற்றம் ஏற்படாதா ?**

**விடை :** 'கூறியது கூறல்' என்ற இழுக்கு வர இடமில்லை. எங்ஙனமெனில், நான்கனுருபு வருகிற இடங்கள் மூன்று ; அவை :

1. பிரணவத்தில், மறைந்த நான்கனுருபு.
2. நாராயண பதத்தில் "வெளிப்படையான சதுர்த்தி".
3. த்வயத்தின் இரண்டாவது வாக்கியத்தில் உள்ள சதுர்த்தி.

இந்த மூன்றிடத்திலும் வரும் நான்கனுருபுகளின் கருத்துக்கள் மாறுபாடுகளோடு கூடி, ஒரு பொருளே ஒன்றற்கொன்று விவரணங்களா யிருப்பதைக் காண்க.

1. இது அகரத்தின் உயிர்ப்பொருளால் கிடைத்த நான்கனுருபாதலால், இதற்குத் 'தாத்வர்த்தே சதுர்த்தி' என்று பெயர். இதனுல் ஆத்துமாவின் சேஷத்துவ சொரூபம் மாத்திரம் வெளியிடப்பட்டது.

2. மூன்றும் பதமான நாராயண பதத்திலுள்ள 'வியக்த சதுர்த்தி' யானது, அகாரத்தின் 'லுப்த சதுர்த்திக்கு விவரமாகிற படியால், சேஷத்துவ சொரூபத்திற்குத் தகுந்தபடி கைங்கரியத்தைப் பிரார்த்திக்கிறது. ஆதலால், இதற்கு 'பிரார்த்த நாயாம் சதுர்த்தி' என்று பெயராயிருக்கிறது.

3. துவயத்தின் பிற்பகுதியான வாக்கியத்தில் காணும் நான்கனுருபு, திருமந்திரத்தில் நாராயண பதத்தைச் சேர்ந்த பிரார்த்தனைச் சதுர்த்திக்கு விரிவாகிறபடியால், திருமந்திரத்தில் பிரார்த்தித்த கைங்கரியத்தை, இத்த துவய இரண்டாம் வாக்கியத்து நான்கனுருபில் செயலளவாகச் செய்து முடிக்கிற படியால், ஆத்துமாவின் பகவத் சேஷத்துவ சொரூபம் பூரண

மாகிறது. அதாவது, நாம் ஒன்றைச் செய்ய நினைக்கிறோம்; இது உள்ளத்தின் இயல்பு. பிறகு அதைப்பற்றி வாயால் பேசுகிறோம், உள்ளம் உரையாக மாறுகிறது. பிறகு உரை செயலாக மாறுகிறது. ஆக உள்ளம், உரை, செயல் என்பன ஒரே காரியத்தின் பரிணாமங்களாவதைப் போலே, இந்த மூன்று நான்கனுருபுகளின் கருத்துக்களும் அமைந்திருக்கின்ற படியால் குற்றமில்லை யென்றுணர்க.

**வினா: இந்த நாராயண பதத்திலுள்ள சதுர்த்தியானது கைங் கரியத்தைப் பிரார்த்திக்கின்ற தெப்படி?**

மூ-ம். **105 'ஆய' என்கிற இத்தால், 'சென்றாற் குடையாம்' என்கிறபடியே எல்லா அடிமைகளும் செய்யவேணுமென்று அபேக்ஷிக் கிறது.**

விடை: இரண்டாவது நான்கனுருபாகிய 'ஆய' என்கிற பொருட்டுப் பொருளால் "சென்றால் குடையாம்" என்கிற முதல் திருவந்தாதி 53-ம் பாட்டில் சொல்லுகிற படியே, திருவனந்தாழ்வான் போலே சகலவித பணிவிடைகளையும் ஈசுவரன் முகமலர்ச்சிக் குறுப்பாகச் செய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறது.

**வினா: நமப்பதத்தினால் ஆத்துமா சுதந்திரமற்ற அசித்துப் போன்ற பரதந்திரனென்ற ஞான நிஷ்டையைப் பெற்றிருக்க, இந்த 'ஆய' பதத்தில் கைங்கரியத்தைப் பிரார்த்திக்கிறதைச் சொல்லுகிறதென்பது சரியா?**

மூ-ம். **106. 'நமஸ்ஸாலே, தன்னோடுறவில்லை யென்று வைத்துக் கைங்கரியத்தை ப்ரார்த்திக் கக் கூடுமோ' என்னில்.**

மூ-ம். **107. "படியாய்க் கிடந்துன் பவள வாய் காண்பேனே" என்கிறபடியே, கைங்கரிய ப்ரார்த்தனை வந்தேறியன்று; ஸ்வரூப ப்ரயுக்தம்.**

விடை: எவ்வாறெனில் குலசேகராழ்வார் அருளிய "படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே" என்ற பாட்டில் "படியாய்க்கிடந்து" என்றதால், அசித்தைப்போன்ற பாரதந்தரியத்தைச் சொல்லி, "பவளவாய் காண்பேனே" என்று அசித்தைக் காட்டிலும் ஆத்துமா அறிவுடையதென்று வேறுபட்டிருக்கிற தென்பதையும், அந்த அறிவானது ஈசுவரனை யுகப்பிக்கும்படியான விஷயத்தில் விநியோகிக்கப்படவே

அமைந்துள்ள தென்பதையும், அதுவே ஆத்துமாவின் பகவத் சம்பந்த சொரூபமாகு மென்பதையும் சொல்லுகிற அழகைக் காண்க. பவளவாயைக் காண விரும்புதலானது ஞானத் தின் இயல்பு. ஆத்துமாவின் அறிவானது பகவத் விஷயத் தைத் தவிர இதர விஷயத்தைக் கிரகிப்பது வந்தேறியான அகங்காரத்தின் செயல். பகவத் விஷயத்தைக் கிரகிப்பது சொரூப ஞான விரோதமல்ல. ஆதலின், இந்த 'ஆய' என்கிற நான்கனுருபினுல், அகங்காரத்தின் காரியமான சுய நலப்பற்றின்றி, இறைவனுக்கே உகப்பாகக் கைங்கரியங்களைச் செயதாலல்லது தரிக்க முடியாத, தனது சேஷத்துவ சொருபத் திற் கிணக்கமான கைங்கரியப் பிரார்த்தனை சொல்லப்பட்டது; நமப்பத விரோதமான அகங்காரத்தின் செயலாகாது. ஆக, சேஷியான சருவேசுவரன் அதிசயிக்கும்படியான, குற்றேவல் களை இவன் செய்வதைக் கண்டு அவன் மிக மகிழ்வடைவதே பகவத் கைங்கரியமாதலால், அத்தகைய கைங்கரியத்தை வேண்டிப் பெறுவது சொரூபமேயாம்.

**வினு: ஈசுவரனே சருவாதிசயனு யிருக்க, அவனுக்கு அதி சயத்தை நாம் விளைக்கை யென்பது எப்படி?**

**விடை:** ஈசுவரன், இந்தச் சேதனனுடைய, குற்றேவல் புரிய அவாக்கொண்டு பிரார்த்தித்துப் பெற்றுச் செய்கிறபோது "ஆகா! இவன் சுய நலத்தையும், சுதந்திரத்தையும் விட்டு விட்டானல்லவா? தன்னை யழியமாறியேனும் நம்மைப்பேணிய பேரன்பினுல் "உன் பவளவாய் காண்பேனே," 'குருகாய்ப் பிறப்பேனே', 'மீனுய்ப் பிறக்கும் விதியுடையேனுவேனே,' 'படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே,' 'ஏதேனு மாவேனே' என்றெல்லாம் பதறி, நம்மையும் நாமுகந்த யாவற் றிலும் உத்தேச புத்தி பண்ணினுனே!' என்று ஆச்சரியப் பட்டு, அதனுல் அவன் தன் திருமுகம் மலரப் பெறுகிருன். ஈசுவரனுடைய அந்த முகமலர்ச்சியே இவனுக்குப் பரம புரு ஷார்த்தமென விரும்பிப் பிரார்த்திக்கிருன். இதுவே, ஆத்துமா வின் ஞான காரியம்.

**வினு: இந்தவித கைங்கரியப் பிரார்த்தனையின் சொரூப விமரிசை யாது?**

மூ-ம்: **108. ஆகையால் "வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்" என்கிற பிரார்த் தனையைக் காட்டுகிறது.**

**விடை:** அடிமை செய்வதில், குற்றமற்ற அடிமையாயிருத்தல் வேண்டு மென்கிறது. குற்றமுள்ள அடிமையாது? குற்ற மற்ற

அடிமையாது? என்பதைப்பற்றி நம்மாழ்வார் 'ஒழிவில் காலத்' திருவாய் மொழியில் "வழுவிலா அடிமை" யென்கிறார். "உடனாய்மன்னி" என்று இளையபெருமாளைப் போலே தொடர்ந்தடிமை செய்தலைக் குறிக்கிறார். 'வழுவிலா அடிமைக்கு' பரதாழ்வானைக் குறிப்பிடுகிறார். இவர் பெருமாளுடைய திருவுளத்தைப் பின்பற்றி, வைத்த இடத்திலிருந்து அடிமை செய்தவர். இப்படிச் சகலவித கைங்கரியங்களையும் நாம் செய்ய வேண்டுமென்கிற பிரார்த்தனையை இந்த நாராயண பதத்திலுள்ள நான்காம் வேற்றுமையுருபு 'ஆய' என்பது பிரகாசப் படுத்துகிறது.

**வினா: இவ்வித கைங்கரிய நிஷ்டையிலிருப்பவர்கள் எந்நிலையிருப்பார்கள் என்று அறிவது? எங்ஙனம்?**

***மூ-ம்: 109. "கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதல்" என்கிறபடியே காண்பதற்கு முன்பு உறக்கமில்லை; கண்டால் "ஸதா பச்யந்தி" ஆகையாலே உறக்கமில்லை.***

**விடை:** பகவத் கைங்கரியமான அனுபவ ருசியாலே நிரந்தரமும் நித்திய சூரிகளுடைய குழாங்கள் அனுபவிக்கிற சருவேசுவரனைக் கண்கள் நிறையும்படி கண்டாலொழியக் கழியாதபடியான நிறைந்த காதலிலே நிலை நின்றவர்களுக்கும் கண்கள் உறங்குதலென்பதுண்டோ? இல்லை. அதுபோல விஷயத்தைக் காண்பதற்கு முன்பு ஞானக்குறைவான தூக்கமில்லை. (அதாவது அகப்பொருளில் 'கண்' என்பது ஞானம்; காதல் என்பது பரமபக்தி;) சேதனன் தனது ஞான பக்திகளுக்கு ஈசுவரனை இலக்காக்கி அனுபவிக்க ஆசைப்படும் அதிகாரிகளுக்கு ஞானக் குறைவாகிய இதர விஷய நோக்கமுண்டாகுமா? உண்டாக இடமில்லை; சுதந்திரரான சக்கரவர்த்தித் திருமகனார் சாதுக்களைப் பரிபாலிக்க ஆரணியம் எழுந்தருளிய போது, அவர் உறங்கினார் என்று சரித்திரத்தில் கேட்கிறோமே யொழிய 'எல்லா அடிமைகளையும் செய்யப் பெறுவேனாக' வென்று, அவர்பின் சென்ற அடியரில் தலைவரான இளைய பெருமாள் உறங்கினாரென்று கேட்டறியோம். அதுபோல, பகவத் விஷய பிரம்மாநந்தத்தில் ஈடுபட இருக்கிறவர்கள் கண்ணுறங்கினவர்கள் இல்லவேயில்லை. கண்டுவிட்டாலோ, இமை கொட்டாமல் எப்போதும் பார்த்தனுபவிக்கையாலே உறக்கமில்லை.

**வினு: மேலுள்ள நாட்களில் உறக்கம் வர வழியுண்டோ?**

**விடை:** *சூ-ம்.* ***110. "பழுதே பல பகலும் போயின" வென்று இழந்த நாளுக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை.***

இப்படிப்பட்ட பிரம்மாநந்தகரமான அனுபவத்தை அனுபவிக்க உரிமையும் சகல சௌகரியங்களுமிருந்தும் அநேக காலம் வீணுகப் போய்விட்டதே, அந்தோ! என்ன அறியாமை என்று இழந்த காலத்தையெல்லாம் நினைந்து துக்கித்துக் கதறுகிறவனுக்கு இனிமேலுள்ள நாட்களில் உறங்குவதற்கும் வழியில்லை.

**வினு: அறிவு பிறந்தவர்களுக்குப் பகவத் விஷயம் மறக்காதோ?**

*சூ-ம்.* ***111. "அன்றுநான் பிறந்திலேன்; பிறந்தபின் மறந்திலேன்" என்ஞநின்ருர்களிறே.***

**விடை:** என்னைப் பெறுவதற்காக, ஈசுவரன் திருப்பதிகளிலே நின்றும், இருந்தும், கிடந்தும் சமயம் பார்த்திருக்க, அந்தக் காலத்தில் நான் ஞானப் பிறவியை உடையவஞகப் பெற்றிலேன்; இப்போது அவனருளாலே ஞான ஜன்மம் உண்டான பின்பு அவனை ஒருக்காலும் மறந்திலேன்' என்று ஆழ்வார்கள் அருளிஞர்கள். ஆக, பகவத் பாகவத கைங்கரியமே உயர்வறவுயர்ந்த பயனென வுணர்ந்த மெய்ஞ்ஞானியருடைய நிலை இதுவாகையாலே, கைங்கரியத்தை வேண்டிப்பெறுவது எப்போதும் நடக்குமென்பதை இந்த "ஆய" பதம் நன்ருக வெளியிடுகிறது.

**வினு: இந்தக் கைங்கரியத்துக்குத் தேச காலாதி நியதிகளுண்டோ?**

**விடை:** *சூ-ம்.* ***112. இவ்வடிமைதான் "ஒழிவில் காலமெல்லாம் உடஞய் மன்னி" என்கிறபடியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அநுவர்த்திக்கும்.***

அதாவது, இந்த "ஒழிவில் காலமெல்லாம்" என்ற நம்மாழ்வார் அருளியதை மேற்கோளாகக் காட்டியிருப்பதை ஆராய்ந்தால், தேச கால அவஸ்தாதிகளின் கட்டுப்பாடின்றி எப்போதும் நடக்குமென்பதை உணரலாம். எப்படியெனில், ஆத்ம பரமாத்மாக்கள் நித்தியர்களாகையாலே, எல்லாக் காலத்திலுமுண்டாம். இவ்விருவருடைய ஞானக் குறைவற்ற

தன்மையாலும், ஈசுவரனுடைய எங்கும் நிறைந்திருத்தலாகிய சொரூபங்களால் எல்லா இடங்களிலும் உண்டாகலாம். இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதவர்களாதலால், எல்லாப் பருவங்களிலும் அடிமை செய்ய ஏற்படலாம் என்பது உணரலாகிறது.

**வினு : ஸர்வதேச மென்பதெப்படி?**

**விடை :** பகவத் கைங்கரியத்தைச் செய்ய வேண்டியது இன்ன இடத்தில்தான் என்ற கட்டுப்பாடு இல்லை. எல்லா இடங்களிலும், அதாவது இந்த உலகில் நாம் இருக்கும்போதும், அந்த உலகம் போனலும், அங்கும் இங்கும் எங்கும் பகவத் கைங்கரியங்களில் ஈடுபட வேண்டியதென்பதே.

**வினு : ஸர்வகாலமென்ப தெவ்வாறு?**

**விடை :** காலையோ, மாலையோ, பகலோ, இரவோ, உயிருள்ள காலமோ, போனபின்போ, இப்பிறவியிலோ, வரும் பிறவியிலோ என்ற கால நியதியுமில்லை. எல்லாக் காலத்திலும் பணிவிடை நடக்கலாம்.

**வினு: சர்வாவஸ்தை யென்பதெங்ஙனம்?**

**விடை :** பாலகனும் பருவத்திலோ, வாலிபப் பருவத்திலோ அல்லது சாக்கிறதையிலோ, கனவிலோ, சுழுத்தி முதலான அவத்தைகளிலோ எனும் பருவ நிலைகளின் மாறுபாடுகளிலும் அடிகளில் கைங்கரியங்கள் செய்ய உடன்பாடேயாம்.

**வினு : சரி. திருமந்திரத்தின் பொருளையெல்லாம் பதக் கிரமமாக அருளினீர்கள். இனி, திருமந்திரத்தால் தேர்ந்த ஆத்தும சொரூபமாகிய பகவானுக்கே அடிமை என்றதை மறவாமலிருக்கத்தக்க ஒரு உதாரணம் காட்டுக.**

**விடை : மூ-ம். *113. எட்டிழையாய் மூன்று சரடாய் இருப்பதொரு மங்கள சூத்ரம் போலே திருமந்த்ரம்.***

உலகில் சாமானியமாகப் பதினறிழையாய், இரண்டு சரடாயிருக்கும் திருமாங்கலியக் கயிறு போலல்லாமல், எட்டிழையாய் அதாவது எட்டு எழுத்துக்களாய், மூன்று சரடாய், அதாவது மூன்று பதமாயிருக்கிற இந்தத் திருமந்திரமாகிய திருமாங்கலியத்தை, ஆசாரியனுகிய புரோகிதர், அக்கினி சாக்ஷியாகவும், பகவத் பாகவத ஸ்ரீவைணவ சந்நிதி யறியவும் பகவதநந்யார்ஹ சேஷத்துவப் பிரகாச சூசகமாக நமது காதில் உபதேச ரூபமாகத் தரிப்பித்தருளினர்.

**வினு: இப்படி நிருபித்துச் சொன்னதினுல் எவ்வித அர்த்தம் சொல்லப்படுகிறது ?**

**விடை : மூ-ம். 114. இத்தால், ஈச்வரன் ஆத்மாக்களுக்குப் பதியாய் நின்று ரக்ஷிக்கு மென்கிறது.**

இதை மங்கல நாணுகச் சொன்னதால், ஈசன் இத்திரு மந்திரத்தில் இதுவரையில் விரிவாக உரைத்துவந்த சொரூப, உபாய, புருஷார்த்தங்களின் உண்மை நிலைமைகளை ஆசாரியன் மூலமாகக் கற்பிக்கப்பட்டிருக்கும் ஆத்துமாக்களைத் தன் அனுபவத்திற்கு இடைஞ்சல்களாகவிருககும் பாவக் கூட்டங்களைப் போக்கித் தன்னை அனுபவிக்கச் செய்தலாகிய பேரின்பரூபமான அவன் திருவடிகளில் செய்யும் குற்றேவல்கள் கொண்டு மகிழ்கிறுன். சேதனன் கற்புடைய மனைவியாயிருத்தல் வேண்டும். அதாவது, தேவதாந்தர, சாதனுந்தர, பலாந்தரங்களில் மறந்தும் சம்பந்தப்படாமல் வாசனையோடே விட்டொழித்திருத்தலையாம். இவைதான், அந்நிய சேஷமெனப்படுவது. இவற்றை விட்டு எம்பெருமானுக்கே அடிமையாயிருத்தலே பகவதநந்யார்ஹ சேஷத்துவமென்கிற கற்புடைமையாம். இதுவே திருமந்திரத்தில் சொல்லப்படும் தேர்ந்த பொருளாகும். திருமந்திரமானது மங்கல நாணுகச் சொல்லப்பட்டதால், சேதனன் மணமகளென்றும், ஈசன் மணமகனென்றும் (நாயக நாயகி பாவ சம்பந்தம்) தெரியவருகிறது. இந்தத் திவ்ய தம்பதிகளின் வாழ்வைப்பற்றிய சொரூபமே திருமந்திரப் பொருளாம்.

**வினு: ஜீவபரர்களின் சம்பந்தங்களைப்பற்றித் திருமந்திரத்தில் சொல்லப்பட்டிருப்பன யாவை ?**

**விடை :** 1. அகாரத்தத்தாலே-பிதா புத்திரனென்பது. (உடல் பொருள்)
2. உயிர்ப் பொருளால்-ரக்ஷ்யரக்ஷகன் என்பது.
3. நான்கனுருபால்-சேஷ சேஷி (ஆண்டான் அடிமை)
4. உகாரத்தால் – பர்த்தா பாரியை (நாயக நாயகி)
5. மகாரத்தால் – ஞாத்ருஞேயம் (அறிகிறவன் அறியப்படுபவன்)
6. நமஸ்ஸால்-ஸ்வஸ்வாமி (உடையான் உடைமை)
7. நாராயணபதத்தால்-சரீர சரீரி (உடலுயிர்)
8. அயந பதத்தால்-ஆதாரஆதேயம்(உறவும் உறைவும்)
9. ஆய பதத்தால்-போக்த்ரு போக்யம் (அனுபவமும் அனுபவியும்)

இவ்வித ஒன்பது சம்பந்தங்கள் திருமந்திரத்தில் சொல்லப்படுகின்றன.

**வினு: இந்த ஒன்பது வித ஜீவ பர சம்பந்தங்களைத் தெரிவிக்கும் பிள்ளை லோகாசாரியருடைய திருமூலவாக்கியங்களுண்டோ ?**

**விடை :** உண்டு. அவை :

1. "இதில் அகாரம் ஸகலஜகத்துக்கும் காரணமாய் ஸர்வரக்ஷகனுன எம்பெருமானைச் சொல்லுகிறது" என்றதால் பிதாபுத்ர சம்பந்தமும்.
2. ரக்ஷ்யரக்ஷக சம்பந்தமும் சொல்லிற்று.
3. "இத்தால் ஈச்வரனுக்குச் சேஷமென்கிறது" என்றதால் சேஷத்வ பிரதி சம்பந்தியான சேஷியும் அர்த்தத்தால் சொல்லப்படுகிருனுனபடியால், சேஷ சேஷி பாவ சம்பந்தம் சொல்லிற்று.
4. "இத்தால் பிறர்க்கு சேஷமன்றென்கிறது" என்றதால் நாயக நாயகி பாவ சம்பந்தம் சொல்லப்பட்டது.
5. "இத்தால் ஆத்மா ஜ்ஞாதா" என்கையாலே, ஜ்ஞாத்ரு ஜ்ஞேய சம்பந்தம் சொல்லப்பட்டதாம்.
6. "தனக்குரியன் அன்றென்கிறது" என்கையாலே ஸ்வஸ்வாமி பாவ சம்பந்தம் சொல்லப்பட்டது.
7. "நாரங்களுக்கு அயநம்" என்கையால் ஆதார ஆதேய சம்பந்தம் தெரியலாயிற்று.
8. "இவை தன்னை ஆச்ரயமாகவுடையான் என்னவுமாம்" என்கையாலே சரீர சரீரி பாவ சம்பந்தம் காண்க.
9. "ஆய என்கிற இத்தால்" என்ற வாக்கியத்தால் போக்த்ரு போக்ய ஸம்பந்தமும் சொல்லப்பட்டது.

**வினு: இந்தத் திருமந்திர சம்பந்தமான இந்த அத்தியாயத்தினுல் முடிந்த அபிப்பிராயமென்ன?**

**விடை:** *மூ-ம்.* ***115*. ஆக, 'திருமந்திரத்தால் எம்பெருமானுக்கே உரியேனுன நான் எனக்கு உரியனன்றிக்கே ஒழியவேணும்; சர்வசேஷியான நாரா**

**யணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனுக வேணும்' என்றதாயிற்று.**

திருமந்திரப் பொருள்களை யெல்லாம் சேரத் திரட்டி ரத்தினச் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. எவ்வாறெனில்:—

| | | |
|---|---|---|
| **ஓம்** = | அகாரம் | = எம்பெருமான் |
| | நான்கனுருபு | = எம்பெருமானுக்கு |
| | உகாரம் | = எம்பெருமானுக்கே |
| | மகாரம் | = உரியேனுன நான் |
| **நம** = | ம: | = எனக்குரியன் |
| | நம | = அன்றிக்கே ஒழியவேணும். |
| **நாராயணுய** = | நாராயண | = சர்வசேஷியான நாராயணன் |
| | ஆய | = சர்வ சேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனுக வேணும். |

ஆக, விரிவாகச் சொன்ன எல்லாவற்றையும் தொகுத்து அருளிச் செய்யப்படுகிறது:—

இதில் "**எம்பெருமானுக்கே**" என்று நான்காம் வேற்றுமை உருபைப் பெயரின் முடிவில் கொண்டு அத்துடன் தேற்றேகாரத்தையும் சேர்க்கப்பட்டிருக்கிறபடியால், பிரணவத்தின் முதலிரண்டு எழுத்துக்களான அகார உகாரங்களின் பொருள்களையும், "**உரியேனுன நான்**" என்று மூன்ரு மெழுத்தான மகாரப் பொருளையும் சொல்லி, முதல் பதமான பிரணவப் பொருள் சுருக்கமாக வெளியிடப்பட்டது.

'**எனக்குரியன்**' என்று ஆரும் வேற்றுமையுடன் கூடிய "ம:" மகாரப் பொருளையும், "**அன்றிக்கே ஒழிய**" என்கையாலே நகாரார்த்தத்தையும், "**வேணும்**" என்றதால், இவ்வர்த்தம் சேதனனுக்கு வேண்டிப் பெறவேண்டியுள்ள படியையும் தெரிவிக்கிறபடியால், நடுப்பதமான நமஸ்ஸின் பொருள் சொல்லப்பட்டது.

"**சர்வ சேஷியான நாராயணனுக்கே**" என்று கைங்கரியத்தை யங்கீகரிக்கிற பிரதிசம்பந்தியையும், கைங்கரிய பிரார்த்தனையை, வெளியிடுகிற நான்காம் வேற்றுமை யுருபின் பொருளையும் "**எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனுக வேணும்**" என்று கைங்கரியத்தை வேண்டிக் கொள்ளுகிற விதத்தையும் சொல்லியிருப்பதைக் காண்க.

விரிவாக அருளிச் செய்ததன் காரணமென்ன வென்ருல் எல்லாரும் அறிந்து அநுசந்திக்க வேணுமென்பதற்காக "**என்ற தாயிற்று**" எனப்பட்டது.

ஆதலால், இவ்வர்த்தம் எப்போதும் சொல்லப்பட வேண்டியதாம்.

**வினா: நூலாசிரியரான ஸ்வாமி பிள்ளையுலகாரியரையும்— உரையாசிரியரான ஸ்வாமி மணவாளமா முனிகளையும் எவ்வாறு பாவிக்க வேண்டும்?**

**விடை:** *பிள்ளை உலகாரிய ஸ்வாமியைப் பெற்ற தாயைப் போலவும், பெரியஜீயரான மணவாளமாமுனிகளை வளர்த்த தாயெனவும் கருதி வணங்கி வழிபட வேண்டும்.*

**வினா: இவற்றை யெல்லாம் நமக்கு மனத்தில் நன்றாய்ப் படும் படியாக உரைத்தருளிய ஆசாரியன் விஷயத்தில் எந்த வித அபிப்பிராயம் கொள்ளவேண்டும்?**

**விடை:** *இவரே நமது குறிக்கோளாக, அதாவது இவர் திரு வடிகளே உபாய உபேயமாக எண்ணி இருக்க வேண்டும்.*

**வினா: நாராயணன் திருவடிகளே உபாயோபேயமென்று இதுவரை சொல்லிவிட்டு, இப்போது ஆசாரியன் திரு வடிகளே உபாயோபேய மென்பது எப்படிச் சரியாகும்?**

**விடை:** *உண்மை என்னவெனில், நாராயணனைத் தஞ்ச மாகப் பற்றுதலென்பது, அவனுடைய பர, வியூக, விபவ, அந்தரியாமித்வ, அர்ச்சாவதாராதி நிலைகளிலும் சாத்தியமில்லை யென்பது அனுபவமே. நம்முடைய சம்பிரதாயமானது, திரு மால் தொடங்கி, குரு சிஷ்ய பரம்பரையாக நம்மாசாரியர்வரை வந்த ஏற்றமுடையதாதலின், எம்பெருமானைப் பற்றுவதென் பது நம்மாழ்வாரைப் பற்றியதாம். நம்மாழ்வார் திருவடிகளைப் பற்றுகையில் எம்பெருமானாரைப் பற்றியதாம். அவர் திருவடி களைப் பற்றும்போது 74 சிம்மாசனாதிபதிகளாகிறார்கள். அவர் களில் ஒருவர் நம்மாசாரியரா யிருத்தலை யுணர்க. எம்பெரு மானுக்கும் நம்மாசாரியருக்கும் ஒரு சங்கிலித் தொடர்போன்ற சம்பந்தம் உண்டாதலின் நம்மாசாரியன் திருவடிகளே உபாய உபேயங்களெனப் பற்றுவதே எம்பெருமானை உபாயோபேய மாகப் பற்றுவதாகும். ஆசாரியனிடத்தில் ஈசுவரத்துவ புத்தி தோன்றி யிருத்தலே ஆத்துமாவின் சொரூபத்தின் உண்மை ஞானம் என்பதே நம் எம்பெருமானார் தரிசனத்தின் ஏற்றமாகு மென்பதை யுணர்க.*

*மேலும், இந்தத் திருமந்திர துவய, சரம சுலோகங்களைக் கிருபையினாலே நமக்கு உபதேசித்தவன் நம் ஆசாரியனே யன்றி வேறொருவரல்ல. அவர், சரம சுலோகத்தால் "எல்லா வற்றையும் நன்றாக விட்டு என்னையே தஞ்சமாகப் பற்று. நான்*

உன்னைச் சகல பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்; அஞ்சாதே'' என்று சொல்லுவாரானல், அந்தச் சரம சுலோகத்தில் சொல்லியுள்ள 'மாம்', 'அஹம்' என்ற சொற்கள் ஆசாரியனைத் தான்குறிக்கின்றனவென்று தெரியவில்லையா? ஆம் அவரையே தான் குறிக்கின்றன. ஆதலால், சரம சுலோகத்தின் சுருக்க துவயமும், அதன் சுருக்கமான திருமந்திரமும் ஆசாரியனையே சொல்லுகிறதென்பதை மறந்துவிடக் கூடாது.' இந்தச் சரமோபாய ரகசியங்களை ஞான மனுட்டானமிவை நன்ருக உடையனை கந்தல் கழியப் பெற்றிருக்கும் மகானுபாவர்கள் மூலமாய்க் கேட்டுணர்ந்து உஜ்ஜீவிப்பீராக.

ஆக, நம் ஆசாரியனே பிரசன்ன நாராயணன். அவர் பக்கல் அதிசயித்த அன்பே ஆத்தும சொரூபம். அவருடைய இரக்கமே உபாயம். அவருடைய முகமலர்ச்சியான இனிமையே புருஷார்த்தம் என்பது சகல வேதங்களின் சாரமான திருவஷ்டாக்ஷர திருமந்திரத்தின் கருத்தாம்.

ஆதலால், "அஸ்மத் குருப்யோ நம:" என்றிருப்போமாக.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருமந்திரார்த்தம்

முமுக்ஷு

**(1) ஆத்மானுபவி**

இவனுக்கு ஸ்வஸ்ருபத்தில் அந்வயம்
ஆகையால், ப்ரணவத்தில் மாத்திரம் நோக்கு.
(அ = ப்ரஹ்மம், உ = ஏ, ம = ஜீவன்)
ப்ரஹ்மமே ஜீவன் என்கிற ஸ்வதந்தரன்.

**(2) பகவதனுபவி**

இவனுக்கு ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களில் அந்வயம்
ஆகையால், ப்ரணவ நம பதவிசிஷ்ட திருமந்திரத்தில் நோக்கு,
(அகாரவாச்யனுக்கே அடியேன் தாஸபூதன் என்கிற பரதந்தரன்)

- **ஓம்** — I — ஸ்வரூபம் (சேஷத்வம்)
- **நம** — II — உபாயம் (பாரதந்திரியம்)
- **நாராயணாய** — III — புருஷார்த்தம் (கைங்கரியம்)

1. ஓம் :—

**வேதங்கள். 3**

- ருக். — பூ:
- யஜுர். — புவ:
- ஸாமம். — ஸுவ:

+ ஈஸ்வர ஸங்கற்பம்

**ஓம்**

- ஸம்ஹிதாகாரம்
  - ஓரெழுத்து. (ஓம்)
  - ஓர் பதம் (ஓம்)
  - ஓர் அர்த்தம் (சேஷத்வம்)
- அஸம்ஹிதாகாரம்
  - மூன்றெழுத்து = அ, உ, ம, (1) (2) (3)
  - மூன்று பதம் = அ, உ, ம, (1) (2) (3)
  - மூன்று அர்த்தம்.
    1. பகவத் சேஷத்வம். 2. அநந்யார்ஹம். 3. ஞாத்ருத்வம்.

## 1. முதலெழுத்து :—

**அ**

- ப்ரக்ருதியர்த்தம் (உடல் பொருள்)
  ஜகத்காரணத்வம்,
  [பிதா புத்ர ஸம்பந்தம்]
  1
  (1) ஜகத்காரணனாய்,

- தாத்வர்த்தம் (உயிர்ப்பொருள்)
  அவ "ரக்ஷணே" = ஜகத்ரக்ஷகத்வம்
  [ரக்ஷ்ய ரக்ஷக சம்பந்தம்]
  2
  (2) ஜகத்ரக்ஷகனாய்,

- உயிர்ப் பொருளால்:—
  காருண்யம் ரக்ஷிக்க
  அநுகூலமாவதால்
  ஸ்ரீய: பதித்வம்
  (3) ஸ்ரீய: பதியாய்

- உயிர்ப்பொருளால்:—
  ரக்ஷ்யம், ரக்ஷகன் பொருட்டு
  என்றேற்படுவதால், சதுர்த்தி
  லுப்தமாதலால் சேஷித்வம்
  [சேஷ சேஷி சம்பந்தம்]
  3
  (4) லுப்த சதுர்த்தியால்
  ஸர்வ சேஷியான

(1)–(4) } = அகாரவாச்யனுக்கு (நாராயணனுக்கு)

**ii. இரண்டாவதெழுத்து :—**

உ = (ஏ)

(1) அயோக வ்யவச்சேதம் (உ-ம்) இராமன் வில்லாளி + ஏ = வில்லாளியே.

(2) அந்யயோக வ்யவச்சேதம் (உ-ம்) இராமன் + ஏ = இராமனே. } வில்லாளி.

= எம்பெருமானுக்கே

அந்யசேஷத்வ நிவ்ருத்தி (சப்தமாக) | ஸ்வசேஷத்வ நிவ்ருத்தி (அர்த்தமாக)

[பர்த்ருபார்ய ஸம்பந்தம்] 4

ஓ = (அ + உ = அ + ஏவ = அ + ஆய + ஏவ
1 2 3 } 1. எம்பெருமான் 2. கு 3. ஏ } = எம்பெருமானுக்கே

**iii. மூன்ருவதெழுத்து :—** ம = ஆத்மா. (தேகவிலக்ஷணன்) = (அசித் + சித்)

அகாரத்திலுள்ள "லுப்த சதுர்த்தி"யாலும், உகாரத்தாலும்
1. ஆத்மா பகவதநந்யார்ஹ சேஷபூதன்

ஷ்டி தாத்வர்த்தங்களால்,
(2) ஆத்மா "ஜ்ஞாதா" வாகிருன் } = [ஞாத்ருஞ்ஞேய ஸம்பந்தம] 5

{ = மந ஜ்ஞானே. மந "அவபோதநே" (தாதுக்கள்)
இத்தால் ஆத்மா
= ஜ்ஞானஸ்ராயம், ஜ்ஞானகுணகம். }

∴ அகாரவாச்யனை ஸ்ரீமந்நாராயணனுக்கே மகாரவாச்யன் ஆகிய அடியேன் அடிமையென்றறிகிறேன்.
= ஆகப்ரணவார்த்தம் காட்டப்பட்டது.

**II. நம: = (உகாரத்தின் விவரணம்)**

நம:

அகண்டம்.

1 பதம். — ஒரு அர்த்தம்.

நம: — பாரதந்தர்யம்

காகாக்ஷிந்யாயம் — உபாயம்.

- (1) ஓம் + நம:
  சேஷத்வ ஸ்வரூப விரோதிகழிந்து ஸ்வரூபம் பிரகாசிக்கிறது.
  ஞாத்ருத்வத்தில் கர்த்ருத்வ நிவ்ருத்தி.
- (2) நம:
  ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமாகிய உபாய விரோதி கழிந்து (உபாய ஸ்வீகாரமாகிய கர்த்ருத்வத்தில் கர்த்ருத்வம் நிவ்ருத்தித்து) அத்யந்த பாரதந்த்ர்ய ஸ்வரூபம் ப்ரகாசிக்கிறது.
  - பாரதந்த்ர்யம்,
    (1)
    சேதனனுடைய ஸ்வரூபாநுரூபமாக ஈஸ்வரன் தன்னை விநியோகம்கொள்ள இசைகை.
  - அசித்வத் அல்லது அத்யந்த பாரதந்த்ரியம்.
    (2)
    சேதன ஸ்வரூபானுரூபமன்றிக்கே ஈஸ்வர ஸ்வாதந்த்ர்யானு ரூபமாக இவனை இஷ்டவிநியோகம்கொள்ள இசைகை.

  அசித்வத் பரதந்த்ரத்தால் [ஸ்வஸ்வாமி ஸம்பந்தம்] சித்திக்கிறது,
  (6)
- (3) நம: + நாராயணாய
  ஸ்வப்ரயோஜனமன்றிக்கே பரப்ரயோஜன கைங்கர்யத்தையே ப்ரார்த்திக்கையால் போக்த்ருத்வத்தில் கர்த்ருத்வம் கழிந்து கைங்கர்யம் ப்ரகாசிக்கிறது,

II நம: (உகாரத்தின் விவரணம்) தொடர்ச்சி

நம: = ஸகண்டம்
- இரண்டுபதம் = ம; (1.) ந (2.) அல்லது ந (1.) ம; (2.)
- இரண்டர்த்தங்கள் = சேஷத்வ பாரதந்தர்யமாகிற ஸ்வருபத்தில் விரோதி நிவ்ருத்தி } 1
- 1, ம: = மம — கைங்கரியமாகிற ப்ராப்யத்தில் விரோதி நிவ்ருத்தி } 2

அகாரத்தில் அந்யசேஷத்வ விரோதி.

உகாரத்தில் ஸ்வசேஷத்வ விரோதி.

+ ந = நிவ்ருத்தி செய்கிறபடியால் சேஷத்வ ஸ்வருபவிரோதி கழிந்தது.

மகாரத்தில் ஞாத்ருத்வபலத்தால் வந்த ஸ்வஸ்வாதந்தரியமாகிய விரோதி + ந = நிவ்ருத்திக்கப்படுகிறது ஃ பாரதந்தர்யஸ்வருப விரோதி. கழிந்தது,

ஆக ஸ்வசேஷத்வ ஸ்வஸ்வாதந்தர்யங்கள் கழிகையாலே ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் கழிந்து ஈஸ்வரனே ரக்ஷகன் (உபாயன்) என்ற அகண்ட நமஸ்ஸின் அர்த்தம் சிந்திக்கிறது

{தேகாத்மாபிமானம் இங்கு சப்தமாகக் கழிக்கப்பட்டமையால் பாகவத ஸேஷத்வமும் சித்திக்கிறது}

அசித்வத்பரதந்ரத்தால் [ஸ்வஸ்வாமி ஸம்பந்தம்] சித்திக்கிறது.

III. நாராயணாய (அகார, மகாரங்களின் விவரணம்)

அ = நாராயண (1)

ம = (சதுர்த்தி) ஆய நாரா: } (2)



தொடர்ச்சி :—

நாராயணன்

{ நாராணும் – அயநம் ய : ஸ : நாராயண : }
||
நாரங்களுக்கு இருப்பிடம்
தத்புருஷ ஸமாஸம்
(வெளிவ்யாப்தி)

- பரத்வம் (ஸர்வத்துக்கும் ஆதாரனுதலால்)
- ஸௌலப்யம் (அதிகாரி விபாகமற தான் ஆதாரனுகையால்)

நாரங்களுக்கு + அயநம்

{ நாரா :—அயநம் - யஸ்ய ஸ : நாராயண : }
||
நாரங்களை இருப்பிடமாக உடையவன்
பஹுவ்ரீஹிஸமாஸம்.
(உள்வ்யாப்தி) குணங்களை யொழிய. ஏனெனில்

(1) ஆத்மாஸ்ரயதோஷம் (தன்னைத்தானே யாஸ்ரயிக்கை)
(உ-ம்) தன் கழுத்தில் தானே றுதல் போலாகும்.
(2) அநவஸதா தோஷம் வஸ்து நிர்குணியாயிராமையாலே.

- பரத்வம் (ஸர்வத்தையும் உள்ளிருந்து நியமிக்குமவனுகையால்)
- ஸௌலப்யம் (ஞானி அஞ்ஞானி விபாகமற உள்ளே வியாபித்திருப்பவனுதலால்)

அந்தரியாமித்வம்

(1) அயநம் நாரங்களுக்கு + அயநம்

ண் = கதேள. அய = கதேள.

(1) கரணே வ்யுத்பத்தி (" ண் " கதேள)

சேதநங்கள் அவனுக்கு சரீரம் (அசித்வத்பரதந்த்ரம்) ஆதலால் அவற்றின் ரக்ஷககார்யம் ஈஸ்வரனுடைய ப்ரவ்ருத்தியாதலால் " உபாயன் " நாராயணனுகிருன், (அசேதனங்களை யொழியச் சொல்லுக.)

சேதனங்கள் சரீரம்.

(2) கர்மணிவ்யுத்பத்தி (" அய " கதேள)

சேதநங்களுக்கு அடையும் இடமும் அவனுனபடியால் உபேயமும் நாராயணனே,

ஈஸ்வரன் சரீரி.

ஆக (1) நாரபதத்தால் [சரீர சரீரிஸம்பந்தம்] வெளியாகிறது. (7)

(2) அயந பதத்தால் [ஆதார ஆதேய ஸம்பந்தம்] வெளியாகிறது (8)

(1) தத்புருஷனுல் = உபாயத்வமும் உபேயத்வமும் (அசேதநமொழிய)

(2) பஹுவ்ரீஹியினுல் = அந்தர்யாமித்வமும் சித்திக்கிறது (குணங்களொழிய).

(2) ஆய=(கு அல்லது பொருட்டு) நான்காம் வேற்றுமை உருபு.

சதுர்த்திகள் 3.

- அகாரத்தில் லுப்தசதுர்த்தி — (தாத்வர்த்யே சதுர்த்தி) — உள்ளம்
- நாராயண பதத்தில் வ்யக்த சதுர்த்தி — (ப்ரார்த்தநாயாம் சதுர்த்தி) — உரை.
  - நான் குடையானபொழுது அவன் அதன் கீழ்வருவது தவிர்த்து
  - அவன் சென்றால் நான் குடையாவது என்ற கைங்கரியத்தை ப்ரார்த்திக்கிறது.
- த்வய உத்தரவாக்யத்தில் வ்யக்த சதுர்த்தி. — (கைங்கர்ய சதுர்த்தி) — செயல்

ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி பூர்வக பரப்ரயோஜன கைங்கரியத்தை "ஆய" என்ற சதுர்த்தி ப்ரார்த்திக்கிறது } [போக்த்ரு போக்ய ஸம்பந்தம்] வெளியாகிறது.

(9)

ஆக 'ஓம் நமோ நாராயணாய' என்ற பெரிய திருமந்திரத்தால், சகல ஜகத்காரணனும் ஸர்வ ஜகத்ரக்ஷகனும், ஸ்ரீய: பதியும், அநந்த நித்யகல்யாணகுணநிதியும் ஸர்வ சேஷியுமாயுள்ள எம்பெருமானுக்கே உரியேனான அடியேன் எனக்குரியனன்றிக்கே எல்லா அடிமைகளையும் அவனுக்கே செய்யப்பெறுவேனாகவேணும்.

தாராபுரம் ஸ்ரீமான் ஏ. நம்பெருமாள் ராமாநுஜ ஸ்வாமிகள்